86

பாலர் தேச சரித்திரம்

86

பாலர்
தேச சரித்திரம்
ஐந்தாம் புத்தகம்

(மூன்றாவது பாரத்துக்கும்
எட்டாவது ஸ்டாண்டர்டுக்கும் உரியது)

954

சுந்தர சுப்பிரமணியம்
&
V. K. சுப்பிரமணியன், B. A., L. T.,
எழுதியது

275
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1943

ஜயம் கம்பனியார்
புத்தக வியாபாரிகள்
நுங்கம்பாக்கம் - சென்னை :: வளவனூர் :: தென் ஆற்காடு

பதிவு செய்தது] 1942 [விலை அணா 10

முதல் பதிப்பு: நவம்பர் 1942

V44

முகவுரை

'பாலர் தேச சரித்திர' வரிசையில் இது ஐந்தாவது புத்தகம்; மூன்றுவது பாரத்துக்கும், எட்டாவது ஸ்டாண்டர்டுக்கும் உரிய புதிய பாட திட்டத்தைத் தழுவியே எழுதியது.

சுவை மிகுந்த சரித்திர பாடத்தைக் கதையே போல் கூறின், பாலரும் இளைஞரும் பரிவுடன் படித்து இன்பமும் ஞானமும் எய்துவர். இம் முறையில் நம் தேச சரித்திரத்தை இளைஞரது பருவ இயல்பை மதித்து, விளக்கியும் சுருக்கியும் எழுதியுள்ளோம். ஆங்காங்கே பாடந்தோறும் ஏற்ற சித்திரப்படங்கள், தேச படங்கள் இவை அமைந்திருத்தல் காணலாம்.

நம் தேசத்தின் செல்வச் சிறுரும் சிறுமியரும் இந்நூலைப் படித்து, நம் தேசத்தினிடம் ஆர்வமும், முன்னேரிடம் மதிப்பும், தம்மிடம் நல்லறிவும் கொள்வரென எதிர்பார்க்கிறேம்.

ஆசிரியர்கள்

Printed at the Liberty Press, G.T., Madras.

T. K. VENKATARAMAN
Head of the Department of History
Pachaiyappa's College

Pachaiyappa's College
KILPAUK P.O.

Madras, 16th November, 1942

FOREWORD

IT has given me great pleasure to go through this short history of our country published by Jayam and Company. The authors have, on the whole, steered clear of controversial topics which have no place in books intended for juvenile readers. They have also sought to interest them by a racy style of narration so as to bring events vividly before the mental eyes of the readers, and have adorned their description of person and events with choice anecdotes. I have no doubt that the aim of the authors which is set out in the preface—that our children must learn to respect our great men and love our great motherland—will be amply fulfilled.

T. K. VENKATARAMAN.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1943
MADRAS

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	வாரன் ஹேஸ்டிங்ஸ்	5
2.	காரன்வாலிஸ் பிரபு	16
3.	ஸர் ஜான் ஷோர்	21
4.	வெல்லஸ்லி பிரபு	22
5.	ஸர் ஜார்ஜ் பார்லோ	33
6.	மிண்டோ பிரபு	35
7.	ஹேஸ்டிங்ஸ் பிரபு	38
8.	பெண்டிங் பிரபு	43
9.	ராஜா ராம் மோகன் ராய்	50
10.	ஆப்கன் யுத்தமும் சிந்து நாடும்	53
11.	ஹார்டிஞ்சு பிரபுவும் சீக்க யுத்தமும்	59
12.	டல்ஹௌஸி பிரபு	65
13.	சிப்பாய்க் கலகம்	68
14.	மகாராணியின் மகா சாஸனம்	76
15.	கானிங் பிரபு : அமைதியும் திருத்தங்களும்	78
16.	மேயோ பிரபுவும் அரசிறைத் திருத்தமும்	82
17.	இரண்டாம் ஆப்கன் யுத்தம்	86
18.	ரிப்பன் பிரபுவும் ஸ்தல சுய ஆட்சியும்	89
19.	கர்ஸன் பிரபுவும் சீர்திருத்தங்களும்	95
20.	எல்லைப் பாதுகாப்புக் கொள்கை	103
21.	மிண்டோ—மார்லி திருத்தங்கள்	106
22.	இந்தியாவும் ஐரோப்பிய மகா யுத்தமும்	110
23.	மாண்ட்போர்டு திருத்தமும் பொறுப்பாட்சி உதயமும்	116
24.	தேசிய இயக்கத்தின் வளர்ச்சி....	121
25.	வட்ட மேஜை மகாநாடுகள்	126
26.	அரசியல் திருத்தங்கள்—1935	131


பிரிட்டிஷ் ராஜ்யம்
,, ,, ஆதாவில்
அடங்கிய நாடுகள்
காஷ்மீரம்
பலுசிஸ்தானம்
ராஜபுதனம்
நேபாளம்
மத்திய
ஹைதராபா
பம்பாய்
அரபிக்கடல்
வங்காளக் குடாக்கடல்
அண்டமான் தீவு
நிகோபார் தீவு
சென்னை
குடகு
திருவாங்கூர்
0 மைல் 600

தற்கால இந்தியா

உ

பாலர்
தேச சரித்திரம்

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் (1772-1785)

ஆங்கில ஆட்சிக்கு இங்கே அடிகோலிய பின்பு ராபர்ட் கிளைவ் இங்கிலாந்து சென்ற சிறிது காலத்திற்குள், வங்காளத்தின் நிலைமை மகா மோசமாக முடிந்தது. எவ்வாறெனில், அவர் நிறுவிச்சென்ற இரட்டையாட்சி முறையில் பல ஊழல்கள் நிகழ்ந்தன. அநீதியான வழிகளில் வரிகளை வசூலித்துவந்தனர். கம்பனியின் உத்தி யோகஸ்தர்கள் சுயநலத்திலேயே நாட்டங்கொண்டு அக்கிரம வழிகளில் பணஞ்சேர்த்து வந்தார்கள். நவாபோ ஒப்புக்குமட்டும் நவாபாக இருந்தான். இவ்வளவும் போதா என்று 1770ஞ வங்கா ளத்திலே கொடிய பஞ்சமும் தோன்றியது. இலட் சக்கணக்கில் மக்கள் மாண்டு மடிந்தனர். ஜனத் தொகை மூன்றிலொரு பங்கு குறைந்தது.

பஞ்சம் ஒருபுறம், வரி வசூல் மிடுக்கு ஒருபுறம், கம்பனி உத்தியோகஸ்தர்களின் அட்டகாசம் ஒரு புறம், நவாபின் தகுதிக் குறைவு ஒரு புறம், இவற் றால் ஜனங்கள் சொல்லொணுக் கஷ்டநஷ்ட மடைந்

தனர்; கம்பனியும் பணமுடையால் பரிதபித்தது. இத்தகைய சமயத்திலே 1772ஆம் வங்காள கவர்னராக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமனமானார். இவரும் கிளைவைப் போலவே கம்பனியில் குமாஸ்தாவாக அமர்ந்து, படிப்படியாக உயர் பதம் பெற்றவர்; காஸிம் பஜார் எனும் நகரை ஸிராஜ் உத் தௌலா பிடித்துக்கொண்ட பொழுது உயிருக் கஞ்சி ஓடியவர்களிலும் ஒருவராவார்.

சீர்திருத்தங்கள்: கம்பனி யாட்சியின் ஒழுங்கீனங்களைப் போக்கி, அதன் வருவாயை வளர்த்தல் அவர் கடமையாக முடிந்தது; உடனே கிளைவின் இரட்டை யாட்சி முறையை ஒழித்தார்; வரி வசூலுக்கு அமர்த்தி யிருந்த இந்திய அதிகாரிகளை நீக்கி, ரேவினியூ போர்ட் எனும் சபையை உண்டாக்கினார்; வங்காள நவாபுக்கு வருஷா வருஷம் கொடுத்து வந்த 32 லட்சம் ரூபாயை 16 லட்சமாகக் குறைத்தார்; வரி வசூலை மேற்பார்வையிட கலெக்டர்கள் எனும் ஆங்கில அதிகாரிகளை ஜில்லாக்கள்தோறும் நியமித்தார்; நியாய விசாரணையையும் அவர்களிடத்தில் ஒப்படைத்தார்; கல்கத்தாவிலே பிரதான சிவில் கோர்ட்டும் கிரிமினல் கோர்ட்டும் அமைத்தார். இக் காரியங்களால் ஒழுங்கீனங்கள் ஓரளவு குறைந்தன; கம்பனி வருவாயும் பெருகியது.

கம்பனியின் வருவாய் வளர்ந்து வந்தும், அது செலவுக்குப் போதவில்லை. ஆதலினால், இன்னும் சில காரியங்கள் அவர் செய்யலானார். டில்லியிலே பேருக்குமட்டும் பாதுஷாவாக இருந்த ஷா அலம் மகாராஷ்டிரர்களின் பக்கம் சேர்ந்து கொண்டு, கோரா, அலகாபாத் இரண்டையும் அவர்களுக்கு

அளித்திருந்தனன். கம்பனியின் ஆதரவை விட்டு விலகியதனால், ஷா அலத்துக்குக் கொடுத்து வந்த தொகையை ஹேஸ்டிங்ஸ் நிறுத்தினர். ஐம்பது லட்சம் ரூபா பெற்றுக் கொண்டு, கோராவையும் அலகாபாத்தையும் அயோத்தி நவாபுக்கு விற்ருர்; ஆங்கிலக் காவல் படையொன்றுகொள்ளும் படி நவாபுடன் ஓர் உடன் படிக்கையும் கொண்டார்.



வாரன் ஹேஸ்டிங்ஸ்

நவாபும் ரோஹில்லரும்: அயோத்தி நவாபுக்கும் ரோஹில்லருக்கும் மனக்கசப்பு உண்டாயிற்று. உடனே அவர்களின் மீது நவாப் சண்டைக்கு எழுந்தான். அதற்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் துணை போக நேர்ந்தது. அச் சண்டையில் ரோஹில்லர் அழிந்தனர்; அவர்களின் நாடும் நவாபுக்குச் சேர்ந்தது. கம்பனி யாட்சியில் வாரன் ஹேஸ்டிங்ஸ் சீர்திருத்தங்கள் செய்தபோதிலும் சுதேச மன்னரின் சச்சரவுகளில் தலையிட்டதனால், கம்பனியின் செலவு பெருகிக்கொண்டே வந்தது. ஆதலின், இங்கிலாந்திலுள்ள அரசாங்கத்தினிடம் கம்பனியார் கடன் கேட்க நேர்ந்தது. கம்பனியில் ஊழியம் புரிந்து, இங்கிலாந்துக்குத் திரும்பியவர்களோ செல்வச் சீமான்களாக வாழ்ந்துவந்தனர். கம்பனியார் இங்கே மண் சேர்த்து வருவதும் இங்கிலாந்துக்கு எட்டிற்று. எட்டவே, இங்கிலாந்திலுள்ள

அரசாங்கத்தார் இந்தியாவிலுள்ள கம்பனியின் விஷயத்தில் தலையிடலாயினர். இதன் விளைவாக ரெகுலேடிங் ஆக்ட் எனும் சட்டம் 1773-ஆம் பிறந்தது.

ரெகுலேடிங் ஆக்ட்: இதன்படி இந்திய வியவகாரங்களில் இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டு சபையே கம்பனியின் மேலதிகாரி ஆயிற்று. இந்திய வியவகாரங்களை அவ்வப்போது இங்கிலாந்தின் பார்லிமெண்டுக்கு இங்குள்ள கம்பனியார் அறிவித்து வரவேண்டும். வங்காளத்தின் கவர்னரே கவர்னர் ஜெனரல் எனும் பட்டத்துடன் கல்கத்தாவில் இருந்து கொண்டு, கம்பனியின் காரியங்களை எல்லாம் கவனித்து வரவேண்டும். சென்னை, பம்பாய் இந்த இடங்களின் கவர்னர்கள் அக் கவர்னர் ஜெனரலுக்கு உட்பட்டவர்களாகவே இருக்க வேண்டும். கவர்னர் ஜெனரலுக்கு உதவியாக நால்வரடங்கிய ஓர் ஆலோசனை சபை ஏற்பட்டது.

அப்புதிய சட்டத்தின்படி 1774-ஆம் வாரன் ஹேஸ்டிங்ஸே முதல் கவர்னர் ஜெனரல் ஆனார். அவருக்கு உதவியாயிருக்க ஏற்பட்ட சபையாரில் மூவர் அவருக்கு விரோதமாகவே இருந்து வந்தனர். அம்மூவருள் பிரான்ஸிஸ் என்பவனே பரம வைரியாக விளங்கினான்; ரோஹில்லரின் சண்டையில் ஹேஸ்டிங்ஸ் தலையிட்டதை மிகவும் பலமாகக் கண்டித்தான். அச்சமயம் ஹேஸ்டிங்ஸ் லஞ்சம் வாங்கியதாக நந்தகுமார் எனுமொரு தனவான் புகார்கூறினான். முடிவில் கள்ளக்கையெழுத் திட்டதாக நந்தகுமாரைத் தூக்கில் போட்டனர். அப்பால், அம்மூவரில் ஒருவர் இறக்க இருவர் இங்கிலாந்து செல்ல, அவருக்கு நிம்மதி பிறந்தது.

முதல் மகாராஷ்டிர யுத்தம்: (1775—1782) ஸாஹூவின் காலம் முதல் பேஷ்வாக்களே மகாராஷ்டிரத்தைப் பரிபாலனம் பண்ணிவந்தனர். பேஷ்வாக்களில் மூன்ருமவரான பாலாஜி பாஜி ராவின் காலத்தில்தான் (1751) மூன்ருவது பாணிபத் சண்டை நடந்தது. அதில் மகாராஷ்டிரர் படு தோல்வி யடைந்தனர். அப்போது மகாராஷ்டிர ராஜ்யத்திலே கெயிக்வார், ஸிந்தியா, ஹோல்கார், பான்ஸ்லே என்போர் சுயேச்சாதிகாரம் கொண்டனர். அவர்கள் முறையே பரோடா, குவாலியர், இந்தூர், நாகபுரி எனும் இடங்களிலிருந்து தனியரசு செலுத்தி வரலானர்கள். பாஜி ராவ் இறந்ததும் அவன் மைந்தன் மாதவ ராவ் பேஷ்வாவாகி 1772 வரையில் அரசு செலுத்திவந்தான்.

சூரத் உடன்படிக்கை: மாதவ ராவ் காலமானதும் அவன் சோதரன் நாராயணராவ் பேஷ்வாவாக வந்தான். சிறிது காலத்திற்குள் நாராயணராவ் கொலையுண்டனன். அக் கொலைக்குக் காரணமான ரகுநாதராவ் பேஷ்வா ஆயினன். சிறிது நாளைக்கெல்லாம் நாராயணராவின் மனைவி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அப்பிள்ளைக்கு இரண்டாவது மாதவ ராவ் என்று பெயர். அம் மைந்தனையே பேஷ்வாவாகக் கொள்ள வேண்டுமென்று நாஞ பட்னுவிஸ் எனும் ஒரு தலைவன்



நாஞ பட்னுவிஸ்

கிளம்பினன். உடனே பம்பாயிலிருந்த ஆங்கில கவர்னரின் உதவியை நாடினன் ரகுநாதராவ்; கைம் மாருக சால்செட், பஸ்ஸீன் எனும் இரு முக்கிய ஸ்தலங் களைத் தருவதாகவும் வாக்களித்தான். ஆங்கிலக் கம்பனியாருக்கோ அவ்விரு இடங்களும் வேண்டி யிருந்தன. அதன்மேல் சூரத் நகரில் ரகுநாத ராவுக் கும் ஆங்கில கவர்னருக்கும் (1775) ஓர் உடன் படிக்கை ஏற்பட்டது. கவர்னர் ஜெனரலின் அனு மதியின்றியே அது உண்டாயிற்று.

புரந்தர உடன்படிக்கை: அது அறிந்து நாஞ பட்ஞவிஸ் கல்கத்தாவிலுள்ள கவர்னர் ஜெனர லின் உதவியை நாடினன்; உதவிக்கு ஈடாக சால் செட் எனும் ஸ்தலத்தைத் தருவதாகவும் தெரிவித் தான். அவ்விதமே புரந்தர் என்னுமிடத்தில் அவ் விருவருக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இரண்டு உடன்படிக்கைகளும் கம்பனி நிர்வாகஸ் தர்களுக்குத் தெரியவந்தன. அவர்களோ லாபத் தைக் கருதி, சூரத் உடன்படிக்கையை அங்கீகரித் தனர். எனவே, ரகுநாத ராவுக்கே வாரன் ஹேஸ் டிங்ஸ் துணைபுரிய நேர்ந்தது.

போரின் விவரம்: பம்பாய் கவர்னர் அனுப்பிய சேனை ரகுநாத ராவுக்கு உதவியாகப் பூஞ நகருக்குப் போயிற்று. நாஞபட்ஞவிஸோ சிந்தியா, பான் ஸ்லே முதலிய தலைவர்களின் துணைபெற்று அச் சேனையைத் தோற்கடித்தான். அதனுல் ஆங்கி லேயர் வேறு விதியின்றி நாஞபட்ஞவிஸுடன் கௌரவமற்ற ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள நேர்ந்தது. பின்பு, ஆங்கிலேயர் அந்த உடன் படிக்கையை உதறித் தள்ளி, குஜராத்தின் மீது

படையெடுத்தனர்; குவாலியர் கோட்டையையும் வசஞ்செய்து கொண்டனர்; பின்னர் கெயிக்வார், பான்ஸ்லே இவர்களையும் தம் வசமாக்கிக் கொண்டனர். கொள்ளவே நானபட்னவிஸ் வேறு வகையின்றி (1782) ஸால்பை எனுமிடத்தில் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொண்டான்.

அதன்படி, தாம் பிடித்துக்கொண்ட பிரதேசங்களில் சால்ஸெட்டைத் தவிர இதர இடங்களை விட்டுவிட ஆங்கிலேயர் சம்மதித்தனர். ஆங்கிலேயரைத் தவிர ஏனைய ஐரோப்பியருடன் நேசங் கொள்வதில்லையென மகாராஷ்டிரர் ஒப்புக்கொண்டனர். இரண்டாம் மாதவராவ் பேஷ்வா ஆனான். ரகுநாத ராவோ மாதம் 25 ஆயிரம் பெற்று விலகிக்கொண்டான். இவ்விதம் முதல் மகாராஷ்டிர யுத்தம் முடிவுற்றது.

முதல் மைசூர் யுத்தம் (1767—1769) : விஜயநகர ராஜ்யம் சிதறியதும் சிறிய ராஜ்யங்கள் பல தோன்றின. அவற்றுள் ஒன்று மைசூர் ராஜ்யம். அதனை ஹிந்து வேந்தர் ஆண்டு வந்தனர். 18-வது நூற்றாண்டின் இடையே அந்த மைசூர் ராஜ்யத்தின் சேனையில் ஹைதர் அலி என ஒரு போர்வீரன் இருந்தான். நாளடைவில் அவன் தனது தகவும் சூழ்வுங் கொண்டு ஹிந்து வேந்தனைத் தள்ளிவிட்டு, அதற்கு அரசன் ஆனான். தென்னிந்

ஹைதர் அலி

தியா முழுவதையும் தானே ஆளவேண்டுமென்று அவன் முயற்சி செய்துவந்தான்; மலையாளம், கோயமுத்தூர் ஜில்லாக்களை வென்று தனது அரசுடன் சேர்த்துக் கொண்டான். 1765-ஆம் ஹைதருக்கும் மகாராஷ்டிரருக்கும் ஒரு சண்டை நடந்தது. அதில் ஹைதர் வெற்றி பெற்றான்.

அதுகண்டு நிஜாம், மகாராஷ்டிரர், ஆங்கிலேயர் மூவரும் திகில்கொண்டு, ஹைதரை எதிர்க்க முனைந்தனர். மூவரையும் எதிர்த்தல் முடியாத காரியமென ஹைதருக்குத் தோன்றியது. உடனே ஆங்கிலேயர் தவிர மற்ற இருவரையும் அவன் தந்திரமாகப் பிரித்துவிட்டான். ஆதலின், ஹைதருடன் ஆங்கிலேயர் தனியாக நின்று சண்டை செய்ய நேர்ந்தது. எனினும் ஹைதர் தோல்வியுண்டான். அதன்மேல் நிஜாம் ஆங்கிலேயருடன் சேர்ந்துகொண்டான்.

சின்னாள் சென்றதும், ஹைதர் ஒரு பெரும் படையுடன் சென்று, சென்னையைத் தாக்கலானான். சென்னையிலிருந்த ஆங்கிலேயர் அஞ்சி, ஹைதருடன் சமாதானம் செய்துகொண்டனர். அதன்படி இருவரும் தாம்தாம் பிறரிடமிருந்து பிடித்த நாடுகளைத் திருப்பிக் கொடுத்து விடுவதென்று ஏற்பாடாயிற்று; இனி ஒருவருக்கொருவர் உதவியாக நிற்பதாகவும் ஒப்புக்கொண்டனர். இது முதல் மைசூர் யுத்தம் எனப்படும்.

இரண்டாவது மைசூர் யுத்தம் (1780—1784): பின்பு, மகாராஷ்டிரர் ஹைதர்மீது படைகொண்டு சென்றனர். உடனே, துணை வரும்படி ஆங்கிலேயரை ஹைதர் அழைத்தான். ஆங்கிலேயர் மறுத்து விட்டனர். ஹைதர் சினங்கொண்டு, காலங்கருதி

யிருந்தான் பழிவாங்க. அப்போது ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் சண்டை உண்டாயிற்று. புதுச்சேரியை ஆங்கிலேயர் பிடித்



வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் இந்தியா

துக்கொண்டு, மேலைக் கரையிலுள்ள மாஹி எனும் துறைமுக நகரையும் வசஞ்செய்யப் போயினர்.

மாஹி துறைமுகத்தின் வழியே தனக்கு வேண்டிய யுத்த உபகரணங்களை ஹைதர் பெறுவது வழக்கம். ஆதலின், அத் துறைமுகத்தைத் தாக்கக் கூடாதென்று ஹைதர் சொன்னான். ஆங்கிலேயர் அதனை மதியாமல், ஹைதரது நாட்டின் வழியே சென்று அந் நகரைப் பிடித்துக்கொண்டனர். 1780-ஆம் ஹைதர் ஒரு படையுடன் கிளம்பி பளூர் எனுமிடத்தில் ஆங்கிலேயரைத் தோற்கடித்தான். பின்பு ஜெனரல் கூட் என்னும் ஆங்கில தளகர்த்தன் கல்கத்தாவிலிருந்து வந்து, ஹைதர் கைப்பற்றிய நாடுகளை மீட்டு, ஹைதருடன் சண்டை போடலானான். உடனே ஹைதருக்கு உதவியாக பிரஞ்சுக்காரர் ஒரு சேனையையும் கப்பல் படையையும் அனுப்பினர். பரங்கிப்பேட்டை, பளூர், சோளங்கிபுரம், ஆரணி எனுமிடங்களில் ஹைதருக்கும் ஆங்கிலேயருக்கும் சண்டைகள் நடந்தன. அவற்றில் ஹைதர் தோல்வியுண்டான்.



திப்பு சுல்தான்

மறு வருஷம் ஹைதர் காலகதி ஆயினன். உடனே அவன் மைந்தன் திப்பு சுல்தான் சிம்மாசனம் ஏறி, ஆங்கிலேயருடன் தீரமாகப் போர் தொடுத்தனன். 1784-இல் இரு திறத்தாருக்கும் மங்களூரில் ஓர் உடன்படிக்கை

ஏற்பட்டது. ஒருவரிடமிருந்து மற்றவர் கைப்பற்றிய நாடுகளைத் திரும்பக் கொடுத்துவிட இருவரும் ஒப்புக்கொண்டனர். இவ்விதம் இரண்டாவது மைசூர் யுத்தம் முடிந்தது. முடிந்தும், அதன் விளைவாக, மீண்டும் கம்பனிக்குப் பணமுடை ஏற்பட்டது. அதனைச் சமாளிக்க நெறிதவறி வாரன் ஹேஸ்டிங்ஸ் பணம் தேடினர். காசி யரசன் சைத சிம்மன் என்பவன் கம்பனியின் ஆதீனத்தில் இருந்து வந்தான். யுத்தச் செலவை முன்னிட்டு அவனை ஒரு தடவை 5 லட்சம் ரூபாய் கேட்டார் ஹேஸ்டிங்ஸ். ஒரு முறை காசி யரசன் அவ்வாறே கொடுத்தான். மீண்டும் மீண்டும் பணம் கேட்கவே அதனைக் கொடுக்க மறுத்தான் சைத சிம்மன். அதற்காக 50 லட்சம் ரூபா அபராதம் போட்டார் ஹேஸ்டிங்ஸ்; முடிவில் அவனை அரியணையிலிருந்து அகற்றி மற்றொருவனை அரசனாக்கி, அதிகப் பணம் பெற்றுக்கொண்டார்.

அயோத்தி நவாபான ஷுஜா உத் தௌலா இறந்ததும், அவன் மைந்தன் அஸப் உத் தௌலா என்பவன் நவாபாக வந்தான். அதுபற்றி ஆங்கிலேயருக்கு அப் புதிய நவாப் ஏராளமான பணங் கொடுக்க நேர்ந்தது. கொடுக்கவோ வகையில்லை. தன் தாய், பாட்டி இவர்களிடம் மிகுந்த பணம் இருப்பதாகச் சொன்னன் நவாப். அவர்களிடமிருந்து பணத்தைப் பறிப்பதாக ஏற்பாடாயிற்று. இதற்கு ஹேஸ்டிங்ஸ் உடந்தையாக இருந்தார். தாயும் பாட்டியுமான பேகம்மார்கள் கொடுந் துன்பத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாயினர்.

அயோத்தி, காசி இவற்றின் விஷயத்தில் கவர்னர் ஜெனரல் நடந்துகொண்ட மாதிரியைக்

கேட்டு, இங்கிலாந்தின் துரைத்தனத்தார் திடுக்கிட்டனர். ஹேஸ்டிங்ஸின் விரோதிகளும் அவர் நடத்தையைக் கண்டித்தனர். அவரைப் பதவியினின்று நீக்கிவிட 1782-ஆல் கம்பனியார் கருதலாயினர். அதன்மேல் அவர் இங்கிலாந்து சென்றார். உடனே விசாரணை நடந்தது. முடிவில் குற்றவாளியல்லர் என்று தீர்ப்பு ஏற்பட்டது. பின்பு கம்பனியார் வருஷா வருஷம் நாலு ஆயிரம் பவுன் அவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்தனர். இந்தியாவிலே ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைப் பரப்பிய அப்பெருமகன் 1818-இல் மாண்டுபோனார்.

---

2. காரன்வாலிஸ் பிரபு (1786—1793)

வாரன் ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு, காரன்வாலிஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக வந்தார். ஆலோசனை சபையார் ஹேஸ்டிங்ஸுக்கு முட்டுக் கட்டையாக இருந்தனராதலின், அவசியமானால், ஆலோசனை சபையின் அபிப்பிராயத்தை மீறியும் காரியஞ் செய்யுமாறு காரன்வாலிஸுக்கு உரிமை கிடைத்தது. அவர் 'பிட் இந்தியா சட்ட'த்தின்படி நிர்வாகத்தை நடத்தலானார்.

கம்பனியின் உத்தியோகஸ்தர்கள் சொந்தத்தில் வியாபாரம் செய்வதும், பொய்க் கணக்கு எழுதுவதும், பரிதானம் வாங்குவதும், நடந்து வந்தன. இவை கூடாவென்று காரன்வாலிஸ் விதித்தார்; அத்துடன் அவர்களின் சம்பளத்தையும் உயர்த்தினார். இதனால் ஊழல்கள் அநேகமாக நீங்கலாயின. பின்பு நிலவரி விஷயத்தில் அவர் நிரந்

தரமான ஓர் ஏற்பாடு செய்தார். அதன் விருத்தாந்தமும் விவரமும் என்னவென்றால் :—

முதன் முதல் நிலவரியை ஒழுங்கு செய்தவன் ஷேர்ஷா. நாலிலொரு பங்கே நிலவரியாக அவன் வாங்கி வந்தான். அப்பால் அக்பர் காலத்திலே, மூன்றிலொரு பங்கு வரி வாங்கப்பட்டு வந்தது. கிளைவின் காலத்திலோ, முன்னுள்ள நிலைமையில் மாறுதல் செய்யப்படவில்லை. ஆனால் வரி வசூல் அதிகாரிகள் அளவுக்கு மிஞ்சி வசூலித்தார்கள். அதனால் ஜனங்கள் தத்தளிக்கலாயினர்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் பதவி ஏற்றதும் வசூலின் மேற்பார்வையைக் கம்பனியின் அதிகாரிகளிடம் ஒப்படைத்தார். வரி வசூல் அதிகாரம் வருஷா வருஷம் ஏலத்தில் விடப்பட்டு வந்தது. வரிவசூலிக்கும் உரிமையை ஏலத்தில் எடுத்தவர் நிலவளப்பத்தையும் விவசாயிகளின் நலத்தையும் மதிக்கவில்லை; எவ்வளவு பணம் கறக்க முடியுமோ அவ்வளவு பணம் வேளாளரிடமிருந்து கறந்து, தங்கள் லாபத்தை மட்டுமே கவனிக்கலாயினர். அதுபற்றி விவசாயிகள் மிக்க கஷ்டநஷ்ட மடைந்துவந்தனர். நிலைமை அங்ஙன மாகிவர, வரி வசூல் உரிமையை ஏலத்தில் விடாமல் நிலைநாட்டி விடவேண்டுமென்று 1784 ஆம் வருஷத்தில் கம்பனியார் சொல்லினர். அவ்விதமே வரி வசூலிக்கும் உரிமை முதலில் பத்து வருஷத்துக்கு நிலைவரமாகியது. ஆனால் காரன்வாலிஸ் பத்து வருஷத்துக்கு ஒரு முறை மாற்றுவதும் உசிதமில்லை என நினைத்து, நிரந்தர நிலவரி முறையை ஏற்படுத்தினார். ஆங்கிலத்தில் இதனைப் 'பர்மனேன்டு ஸெட்டில்மெண்டு' என்பர்.

அவ்விதம் நிலையான நிலவரி முறை ஏற்பட்டதும் ஜமீன்தார்கள் கேவலம் வரி வசூல் அதிகாரிகள் என்பது போய், நிலங்களின் சொந்தக்காரர் ஆயினர். நிலத்தின் மதிப்பு உயர்ந்தாலும் குறைந்தாலும், நில வளப்பம் பெருகினாலும் சுருங்கினாலும், நிலவரி மாறாமல் ஒரே அளவாக இருக்கும். நிலவரியை மீண்டும் உயர்த்த அரசாங்கத்துக்கு அதிகாரம் கிடையாது. வங்காளம், பீகார், காசி இந்த இடங்களில் இன்றும் அந்த முறைதான்.

மூன்றாவது மைசூர் யுத்தம் (1790—1792): தனது தந்தை இறந்ததும் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்ட திப்பு அப்பாலோ மலையாளம், குடகு இவற்றை ஜெயித்துப் பிடித்துக்கொண்டான்; தென்னிந்தியாவில் தானொருவனே அரசனாயிருக்க வேண்டுமென்றும் ஆர்வம் கொண்டான். ஆங்கிலேயரின்மீது அவனுக்கு மிக்க வெறுப்பும் ஏற்பட்டது. பின்பு அவன் திருவாங்கூரை எதிர்த்தனன்.

திப்புவும் மத வைராக்கிய னாதலின், தான் ஜெயித்த இடங்களிலுள்ள ஜனங்களை இஸ்லாமியராகும்படி நிர்ப்பந்தம் செய்தான்; அதற்கு உடன்படாதவர்களைக் கொன்றான்; இந்துக்களின் ஆலயங்களை அழித்தான்; திருவாங்கூரிலும் அவ்விதம் கொடுமைகள் இழைத்தான். திருவாங்கூர் அரசன் ஆங்கிலேயரிடம் உறவுகொண்டவ னாதலின், அவனுக்குத் தொல்லை கொடுக்காதிருக்கும்படி திப்புவுக்கு ஆங்கிலேயர் சொல்லியனுப்பினர். திப்பு அதனைக் கேட்கவில்லை. பின்பு, ஆங்கிலேயர், மகாராஷ்டிரர், நிஜாம் அரசன் ஆகிய மூவரும் சேர்ந்துகொண்டு, திப்புவை எதிர்த்தனர்.

தாமே சேனைத் தலைமை வகித்து, லார்டு காரன்வாலிஸ் புறப்பட்டார். முதலில் அவர் பங்களூர் நகரைக் கைப்பற்றிக்கொண்டார்; பின்பு



காரன்வாலிஸ் காலத்தில் இந்தியா

மைசூரின் தலைநகரான ஸ்ரீரங்கபட்டணத்தையும் தாக்கினர். தன் உயிருக்கே ஆபத்து நேருமென்று திப்பு உணர்ந்துகொண்டு, விதியில்லாமல் சமாதானத்துக்கு வந்தனன். ஸ்ரீரங்கபட்டணத்தில் இருவருக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி, திப்பு சுல்தான் தனது ராஜ்யத்தில் பாதியைக் கொடுக்க நேர்ந்தது. அதை ஆங்கிலேயர், மகாராஷ்டிரர், நிஜாம்அரசன் ஆகிய மூவரும் பங்கிட்டுக் கொண்டனர். ஆங்கிலேயருக்கு மதுரை, மலையாளம், சேலம் இவை கிடைத்தன. சண்டையின் செலவுக்காக அவன் மூன்று கோடி ரூபா கொடுக்கலானன். மேலும் தனது குமாரரில் இருவரைப் பிணையாக ஆங்கிலேயரிடம் அவன் ஒப்படைக்க நேர்ந்தது. குடகு தேசம் அதன் அரசனுக்குத் திரும்பக் கிடைத்தது. இவ்விதம் மூன்ருவது மைசூர் யுத்தம் முடிவடைந்தது.

ஜில்லா கலெக்டர்களே வரிவசூல் மேற்பார்வை, நீதிபரிபாலனம் இரண்டையும் நடத்தி வந்தனரல்லவா? வரி வசூல் அதிகாரத்தை மட்டும் கலெக்டர்களிடம் ஒப்படைத்து, ஜில்லாக்கள் தோறும் நீதி பரிபாலனத்துக்காக ஜில்லா ஜட்ஜுகளை நியமித்தார் காரன்வாலிஸ். முன்னம் இந்தியரும் சில பெரிய உத்தியோகங்களில் இருந்து வந்தனர். காரன்வாலிஸ் அது கூடாதென்று கூறி, நீதிபரிபாலனத்திலே உயர்ந்த உத்தியோகங்களிலெல்லாம் ஆங்கிலேயரையே அமர்த்தினர்.

ஏழு வருஷகாலம் இங்கே கவர்னர் ஜெனரலாக இருந்தபின், 1793-ஆம் காரன்வாலிஸ் பிரபு இங்கிலாந்துக்கு ஏகினர்.

3. ஸர் ஜான் ஷோர் (1793—1798)

கும்பனியில் ஓர் உத்தியோகஸ்தரா யிருந்த ஸர் ஜான் ஷோர் என்பவர் லார்டு காரன்வாலிஸுக்குப் பின்பு கவர்னர் ஜெனரலானார். இவர் சுதேச அரசர்களின் சண்டையில் தலையிடக் கூடாதென்ற கொள்கை கொண்டவர்.

அச்சமயம் தேசத்திலே சர்வாதிகாரம் பெற வேண்டுமென்று மகாராஷ்டிரர் முயன்றுவந்தனர். மொகலாயரிடம் அரசிறையிலே நாலிலொரு பங்கு (சௌத்) வசூலித்த அன்னவர், நிஜாம் அரசனிடமும் அவ்விதம் வசூலிக்கப் படையுடன் எழுந்தனர். அதற்கு நிஜாம் இணங்காமல் தனக்கு உதவி புரியுமாறு ஸர் ஜான் ஷோரைக் கேட்டுக்கொண்டான். மகாராஷ்டிரர், நிஜாம் ஆகிய இருவரும் ஆங்கிலேயர்களுக்கு நேசர்களாதலின் யாருக்கு அவர் உதவி புரிவது? இந்நிலையில் மேலதிகாரிகளின் உத்தரவுப்படி உதவிபுரியாமல் அவர் வாளாவிருந்து விட்டார்.

மகாராஷ்டிரர் உடனே கிளம்பி நிஜாம் அரசனை 1795-ஆம் கர்டா எனுமிடத்தில் வெற்றிகொண்டனர். தன்னை ஆபத்துக் காலத்தில் கைவிட்டதனால், நிஜாம் அரசன் ஆங்கிலேயரிடம் பரம வெறுப்படைந்து, பிரஞ்சுக்காரரின் உதவியை நாடினான். அவர்கள் வந்து அவன் சேனையை நன்கு வலுப்படுத்தினர். அதன்மேல் திப்பு சுல்தான் ஆங்கிலேயரைப் பழிவாங்கச் சமயம் பார்த்திருந்தான்.

அயோத்தி விஷயம்: அயோத்தி நவாபான அஸப் உத் தௌலா என்பவன் இறந்துபோக, விஜீர்

அலி என்பவன் தானே பழைய நவாபின் மைந்தன் எனலும், அவனைச் சிம்மாசனத்திலே அமர்த்தினர் ஸர் ஜான் ஷோர். அப்பால் விஜீர் அலி சரியான மைந்தன் அல்லன் என்று புலப்பட்டது. உடனே ஸர் ஜான் ஷோர் அவனை நீக்கி, நவாபின் சோதரனுக்கு அரசு தந்தார். புதிதாக வந்த நவாப் தனது நன்றியறிவைக் காட்டிக்கொள்ள ஆங்கிலேயருக்கு அலகாபாத் பிரதேசத்தை யளித்தான்; அத்துடன் தனது நாட்டினைக் காத்துவருமாறு வருஷா வருஷம் 76-லட்சம் ரூபா சேனைச் செலவுக்காகக் கொடுக்கவும் இசைந்தனன். ஸர் ஜான் ஷோர் 1798-ஆல இங்கிலாந்துக்குத் திரும்பலானர்.

---

4. வெல்லஸ்லி பிரபு (1798—1805)

அப்பால் வெல்லஸ்லி கவர்னர் ஜெனரலாக வந்தார். சுதேச மன்னரின் விஷயத்தில் தலையிடா திருத்தல் தவறென்றும், இந்தியாவில் ஆங்கிலேயரே ஏகாதிபத்தியம் கொள்ளவேண்டுமென்றும், அவர் தீர்மானித்தார். நிஜாம் அரசனிடம் பிரஞ்சு சைனிய மொன்று இருந்தது. திப்புவோ பிரஞ்சு தளகர்த்தரைக் கொண்டு தன் சேனையைப் பழக்கி வந்தான். அன்னவரின்

வெல்லஸ்லி பிரபு

உதவியை முன்னிட்டு ஆங்கிலேயரைத் துரத்திவிட

வேண்டுமென்பதே திப்புவின் கருத்து. மகாராஷ்டிரரிடமும் பிரஞ்சு வீரர் சேவித்து நின்றனர்.

துணைப் படை முறை: பிரஞ்சுக்காரரின் செல்வாக்கை ஒழிக்கவேண்டி, முதன் முதலாக நிஜாம் அரசனிடம் வெல்லஸ்லி உடன்படிக்கையொன்று கொள்ளலானர். அதன் முக்கிய சாரம் ஈதாகும்: (1) ஆங்கிலேயரின் சம்மதமில்லாமல் நிஜாம் அரசன் வேறு யாருடனும் எவ்வித உடன்படிக்கையும் கொள்ளக்கூடாது; (2) பிரஞ்சுக்காரரை சேனையிலே அமர்த்திக்கொள்ளக் கூடாது; (3) ஆங்கில தளகர்த்தருக்கு உட்பட்ட சேனையொன்றை அவன் தனது நாட்டில் வைத்துக்கொண்டு, அதற்குரிய செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும்; (4) நிஜாம் அரசுக்கு யாராலாவது ஆபத்து ஏற்படின், அப்போது ஆங்கிலேயர் தலை கொடுப்பர். இதனை ஆங்கிலத்தில் ஸப்ஸிடியரி ஏற்பாடு என்பர்; தமிழிலே துணைப் படை பெறும் ஏற்பாடு என்னலாம்.

உடன்படிக்கையின்படி நிஜாம் அரசன் தன்னிடமிருந்த பிரஞ்சு சேனையைக் கலைத்துப் போட்டான்; ஆங்கிலேயரடங்கிய துணைப்படையொன்றைத் தன் நாட்டில் அமர்த்திக்கொண்டான். அவ்விதமே உடன்படிக்கை கொள்ளுமாறு மகாராஷ்டிரருக்கும் வெல்லஸ்லி சொல்லிப் பார்த்தார். சுயாதீனமிழந்து, ஆங்கிலேயரின் கை பார்த்து நிற்க மகாராஷ்டிரர் மனமொப்பவில்லை.

நான்காவது மைசூர் யுத்தம் (1799): இதற்கிடையில் திப்புவின் சைனியம் வலுத்துவந்தது. ஆங்கிலேயரை எதிர்க்க அவன் காலம் கருதலானன். அச்சமயம் ஐரோப்பாவிலே பிரஞ்சு தேசத்தில் புரட்சி

ஏற்பட்டது. இங்கிலாந்தும் பிரான்சும் போர் புரிய லாயின. பிரஞ்சு வீரசிங்கமாகிய நெப்போலியன்



நெப்போலியன்

ஒரு பெரும் படையுடன் எகிப்து தேசத்தில் புகுந்து இந்தியாவுக்கும் வர நினைத்தான். அவனது வருகையைத் தடுக்க வேண்டுமென்பது வெல்லஸ்லியின் கருத்து. திப்பு சுல்தான் அந்நிலையில் பிரஞ்சுக் காரரின் உதவியை மிகவும் நாடினன். அதுகண்டு வெல்லஸ்லி ஆட்சேபிக்க, அதனைத் திப்பு சிறிதும் சட்டை செய்யவில்லை.

உடனே வெல்லஸ்லி சென்னைக்கு வந்தார். ஹாரிஸ் என்பவன் தலைமையில் பெருஞ் சேனை யொன்று சென்னையிலிருந்து கிளம்பிற்று. நிஜாம் அரசனது சேனைகளும் எழுந்தன. மலையாளப் பக்கத்திலிருந்து மற்றோர் ஆங்கிலச் சேனையும் கிளம்பி வந்தது. அந்தச் சேனைகள் ஒன்று கூடா

வண்ணம் தடுக்க திப்பு முயன்றும் முடியவில்லை. ஸிடஸீர், மாலவெல்லி என்னும் இரண்டு இடங்களில் திப்பு தோல்வியுண்டு, ஸ்ரீரங்க பட்டணத்திற்குள் புகுந்து, பகைவரை எதிர்த்து நின்றான். ஆங்கிலச் சேனைகள் அந்நகரை முற்றுகையிட்டு வசம்செய்து கொண்டன. அச் சண்டையில் திப்பு சுல்தான் தீரமுடன் போர்புரிந்து மாண்டுபோனான்.

ஹைதருக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்பர். திப்புவோ நல்ல படிப்பாளி. தனது வீரப் பிரதாபங்களைக் குறித்து, அவன் தன் கைப்படவே எழுதி வைத்துள்ளான். திப்பு மத வைராக்கியம் கொண்டு பலரை மதங்கெடச் செய்தனன். ஹைதருக்கோ மதவெறி கிடையாது. தந்தை அரசைப் பெருக்க உழைத்தான். தனயனோ மதத்தையே பெரிதாக எண்ணி நடந்து வந்தான். பிறநாட்டு மக்களிடம் திப்பு கொடுமையாக நடந்துகொண்ட போதிலும் தன்னாட்டு மக்களிடமோ அன்பும் ஆதரவுமே காட்டி நடந்து வந்தனன்.

திப்புவின் மைந்தர் இருவர் உபகாரச் சம்பளம் பெற்று வேலூருக்குச் சென்று வாழ நேர்ந்தது. கன்னடம், கோயம்புத்தூர், வயநாடு இந்த மூன்று இடங்களையும் ஆங்கிலேயர் கொண்டனர். நிஜாம் ராஜ்யத்தைச் சுற்றியிருந்த மைசூர்ப் பிரதேசங்கள் நிஜாமுக்குக் கிடைத்தன. அப் பிரதேசங்களைத் துணைப்படையின் செலவுக்கென்று ஆங்கிலேயருக்கே அவன் கொடுத்தான். அவை கோடை நாடுகள் எனப்படும். மைசூரில் எஞ்சியிருந்த பாகங்களுக்குப் பழைய இந்து அரச வம்சப் பாலனொருவனை ஆங்கிலேயர் அரசனாக்கினர்.

தஞ்சாவூரைச் சேர்த்தல்: தஞ்சை நாடு சோழர் காலம்முதல் வளமை வாய்ந்தது. விஜயநகர ராஜ்யம் விளங்கினபோது அதன் பிரதிநிதிகளான நாயக்கர் என்போர் தஞ்சையை நெடுங்காலம் ஆண்டு வந்தனர். பின்னர் மகாராஷ்டிரர் அங்கே ஆட்சி செலுத்தி வந்தனர். கடைசியில் அதனை ஆண்ட அரசன் பெருங்கடனாளியாகி, இறந்துபோயினன். அவனுக்குச் சந்ததியில்லை. அவன் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் அந்த அரசு தமதென்று வாதாடினர். இங்கிலேயில் அவ்விருவருக்கும் பெருந் தொகையான உபகாரச் சம்பளம் கொடுத்து, அந் நாட்டைச் சேர்த்துக்கொண்டார் வெல்லஸ்லி.

கர்நாடகம் கைவசமாதல்: ஆறுகாட்டு நவாபான முகம்மதலி மரித்த பின்பு அவன் குமாரன் பட்டத்துக்கு வந்தான். அம்மைந்தன் மூன்றாண்டுகளே ஆண்டு, புத்திரப் பேறில்லாது இறந்து போயினன். உடனே அக் கர்நாடக ராஜ்யத்தை வெல்லஸ்லி சேர்த்துக்கொண்டு, நவாபின் சந்ததியாருக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கலானார்.

கிளைவ் 1759-ஆம் வருஷத்திலே பிரஞ்சுக்காரரிடமிருந்து வட சர்க்கார் என்னும் பிரதேசத்தை வசம் செய்து கொண்டனன் அல்லவா? அதுவே சென்னை மாகாணத்துக்கு ஆரம்பம். திப்புவுடன் 1790-ஆல் நடந்த சண்டையின் பலனாக மலையாளம், சேலம், மதுரை இந்த இடங்களை காரன் வாலிஸின் காலத்தில் சேர்ந்தன. வெல்லஸ்லியின் காலத்திலோ கன்னடம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், கர்நாடகம் இவை சேர்ந்து சென்னை மாகாணம் பெருகலாயிற்று.

அயோத்தி நவாபு: அயோத்தி நவாபான ஸதத் அலி என்பான் சரிவர ஆட்சி புரியவில்லை. தவிர அவன் தேசத்தைக் காக்குமாறு அங்கே ஆங்கிலச் சேனை இருந்துவர, அதற்குரிய செலவை அவன் சரிவரச் செலுத்தாது போயினன். அவன் சகோதரனொருவன் சதா கலகஞ்செய்து கொண்டிருந்தான். மேலும் அஹ்மத்ஷா என்பவனது சந்ததியைச் சேர்ந்த ஜமன்ஷா என்பான் ஆப்கானிஸ்தானத்தில் அரசுகொண்டு, இந்தியாமீது படைகொண்டு வருவதாக பயமுறுத்திக் கொண்டே இருந்தனன். ஆதலின் துணைப்படைகளை அதிகமாக்கிக் கொள்ளும்படி நவாபுக்கு வெல்லஸ்லி பன்முறை சொல்லி வந்தார். முடிவில் அவன் விதியின்றி 1801-ம் ஆண்டு ஆங்கிலத் துணைப்படைகளை அதிகமாக்கிக்கொண்டு, அவற்றின் செலவுக்காக ரோகில்கண்டு, ஆக்ரா முதலிய பிரதேசங்களைக் கொடுத்தனன்.

இரண்டாவது மகாராஷ்டிர யுத்தம் (1803-1804): ஸிந்தியா, ஹோல்கார், கெயிக்வார், பான்ஸ்லே என்னும் குலங்களாக மகாராஷ்டிரர் பிரிந்தனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரொரு தலைவன் தோன்றினன். அத்தலைவர்கள் ஒவ்வொருவரும் தனித் தனியே நாடுகொண்டு, தாம்தாமே சர்வாதிகாரம் அடைய விரும்பிநின்றூர்கள். அப்போது மிக்க ராஜ தந்திரியும் மகா மதியூகியுமான நானுபட்னுவிஸ் என்பான் அனைவரையும் பேஷ்வாவின் தலைமையில் இருக்கச் செய்து, மகாராஷ்டிரரின் கட்டுக் குலையாமல் தன் ஆயுள் வரையில் காத்துவந்தான்.

நாராயண ராவுக்குப் பிறகு ரகுநாத ராவின் குமாரன் இரண்டாம் பாஜி ராவ் பேஷ்வா பதவிக்கு

வந்தபோது, வாலிபனாய் இருந்தான். அப்போது நானாபட்னாவிஸ் ரக்ஷகனாக இருந்து, இவனது நல பலத்தைக் காத்து வந்தனன். மகாராஷ்டிரரின் துரதிர்ஷ்டத்தால் நானாபட்னாவில் இறந்து போயினான். உடனே இளம் பேஷ்வா தன் இஷ்டப்படி நடக்க முயன்று ஹோல்காரின் பகையைத் தேடிக் கொண்டான். ஸிந்தியா மட்டும் பேஷ்வாவுக்கு உதவியாக இருந்தனன். பேஷ்வாவுக்கும் ஹோல்காருக்கும் பூனாவிலே நடந்த சண்டையில் ஹோல்காருக்கே வெற்றி கிடைத்தது. அதன்மேல் ஹோல்கார் ஒரு புதிய பேஷ்வாவை ஏற்படுத்த, இரண்டாவது பாஜிராவோ அஞ்சியோடி ஆங்கிலேயரிடம் சரண் புகுந்து ஆதரவு தேடலானான்.

இரண்டாம் பாஜிராவ்

பஸ்ஸீன் உடன்படிக்கை: அப்போது பஸ்ஸீன் என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் விவரம் என்னவென்றால்: (1) பேஷ்வாவின் பிரதேசத்தில் நிரந்தரமாக ஆங்கிலக் காப்புச் சேனை யொன்று இருக்கவேண்டும். அச்சேனையின் செலவுக்காக ஆண்டுதோறும் 26 லட்சம் ரூபா வரு

மானமுள்ள இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டும். (2) வேறு எந்த ஐரோப்பியரையும் பேஷ்வா வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது. (3) சூரத் நகரம் தனக்கு உரிமையென்று பேஷ்வா பாராட்டக்கூடாது. (4) ஆங்கிலேயருடன் பேஷ்வா பரம விசுவாசம் கொள்ள வேண்டும். (5) இவற்றிற் கெல்லாம் ஈடாக, பேஷ்வாவையும் அவன் இராஜ்யத்தையும் ஆங்கிலேயர் பாதுகாத்து வருவர்.

பஸ்ஸீன் உடன்படிக்கையினல் பேஷ்வாவின் அதிகாரமெல்லாம் போய்விடுவதை மகாராஷ்டிர குலத் தலைவர்கள் மதித்துணர்ந்தனர். ஆங்கிலேயரின் ஆதிக்கம் ஓங்குவதைக் கண்டு ஸிந்தியாவும், பான்ஸ்லேயும் போருக்கு ஆயத்தமாயினர். கவர்னர் ஜெனரலின் சோதரனான ஸர் ஆர்தர் வெல்லஸ்லி என்பான் சேனைத்தலைமை பூண்டு எழுந்தான். அஸ்ஸே என்னும் இடத்தில் பிரமாதமான சண்டை நடந்தது. மகாராஷ்டிரர் தோல்வி யடைந்தனர். பான்ஸ்லே அது கண்டு பேஷ்வாவைப்போல் தானும் ஆங்கில ஏகாதிபத்யத்துக்கு உட்பட்டனன். அப்போது கட்டாக் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது.

வடக்கே ஸிந்தியா மீண்டும் போருக்கு எழுந்தான். லஸ்வாரி என்னும் இடத்தில் அவனுக்குத் தோல்வியே கிட்டிற்று. அவனது ஆதீனத்திலிருந்த டில்லி, ஆக்ரா இரண்டையும் ஆங்கிலேயர் பற்றிக் கொண்டனர்; அவனிடம் கட்டுண்டு கிடந்த ஷா அலத்தையும் விடுவித்தனர். அதன்மேல் ஆங்கில ஏகாதிபத்தியத்தின்கீழ் ஸிந்தியாவும் தங்கியிருக்க நேர்ந்தது. இவனுக்கும் கம்பனிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி (1) கங்கைக்கும் யமுனைக்கும்

இடையேயுள்ள பிரதேசத்தை அவன் ஆங்கிலேயருக்குக் கொடுத்தான். (2) புரோச் நகரும் அவர்களுக்குக் கிடைத்தது. (3) அஹ்மத்நகரம் பேஷ்வாவுக்குக் கிடைத்தது. (4) நிஜாம் அரசனுக்கும் கொஞ்சம் பூமி அகப்பட்டது. இரண்டாம் மகாராஷ்டிர யுத்தம் இவ்விதம் முடிவாயிற்று.

மூன்றுவது மகாராஷ்டிர யுத்தம் (1804-1805): ஹோல்கார் ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்திற்கு உட்பட மனமில்லாமலும் இதர மகாராஷ்டிரத் தலைவருக்கு உதவி புரியாமலும் ஒதுங்கி நின்ற போதிலும், ஆங்கிலேயர் ஓங்குவதுகண்டு அவன் மனம் பொறுக்கவில்லை. மாளவம், இராஜபுதனம் இந்த இடங்களில் புகுந்து, வரியில் நாலிலொருபங்கு (சௌத்) தரவேண்டுமென்று அவன் கேட்டான். ராஜபுத்திர மன்னவர் மறுக்கவே போர் மூண்டது. ராஜபுத்திரரோ ஆங்கிலேயரிடம் ஓலமிட்டனர். அன்னவர் நண்பராதலின், ஆங்கிலேயர் போருக்கெழ நேர்ந்தது. தவிர ஹோல்காரையும் அடக்கிவிட வேண்டுமென்பதே வெல்லஸ்லியின் கருத்து. அதுசமயம் ஹோல்காரிடம் எண்பதாயிரம் வீரர் இருந்தனர். ஆதலின் ஆங்கிலேயரின் சேனை பலமனைத்தையும் திரட்டலானன் வெல்லஸ்லி. மூன்று சேனைகள் ஹோல்காரை எதிர்க்கப் புறப்பட்டன. லேக் எனும் தளகர்த்தன் டில்லியிலிருந்து கிளம்பினன்; மர்ரே என்பான் கூர்ஜாரத்திலிருந்து புறப்பட, மத்திய இந்தியாவிலிருந்து மான்ஸன் எழுந்தனன். ஹோல்காரின் தலைநகரான இந்தூரை மர்ரேயின் சேனை பிடித்துக்கொண்டது. லேக்கின் சேனைக்கு முன்னே ஹோல்கார் பின்வாங்கினன். ஆனல் மான்

ஸன் சேனை ஹோல்காரிடம் சிக்கிக்கொண்டு சின்ன பின்னமாகியது. மற்றச் சேனைகளோ அவனுக்குச் சொந்தமான சிற்சில இடங்களை வசஞ்செய்து கொண்டன. ஹோல்காருக்குத் துணையாக நின்ற வேந்தனது பரதபுரக் கோட்டையை வசஞ்செய்ய ஆங்கிலேயர் பன்முறை முயன்றும் முடியவில்லை. முடிவில் அக்கோட்டையின் அரசன் ஹோல்காரின்



பரதபுரக் கோட்டை

நட்பைத் துறந்து, ஆங்கிலேயரிடம் சமாதானம் செய்துகொண்டான். ஹோல்காரின் நிலையினைக் கண்ட கெயிக்வாரும் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு உட்படலானுன். ஆயினும் ஹோல்காரின் சேனைகளோ சில இடங்களில் ஆங்கிலேயரை எதிர்த்து வெற்றியும் புகழும் பெற்று வந்தன.

ஓய்வில்லாமல் சண்டை நடந்து வருவதைக் கேட்டு இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகள் மனம் புழுங்கி இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து விடும்படி

வெல்லஸ்லிக்கு உத்தரவிட்டார்கள். அவ்விதமே அவர் தம் பதவியை ராஜீனமாச் செய்துவிட்டு இங்கி லாந்துக்குப் போகலானர். இதற்குள் ஸிந்தியா



வெல்லஸ்லியின் காலத்திய இந்தியா

ஆங்கிலேயருடன் முன்னம் கொண்ட உடன்படிக்கையை உதறித்தள்ளி ஹோல்காருக்குப் போரிலே ஆதரவு தர முன்வந்தனன்.

இவர் காலத்தில் இந்தியாவிலே ஆங்கிலேயரின் அரசு நிலைத்துக் கிளைக்கலாயிற்று. இதனை உணராமல் இங்கிலாந்திலே சிலர் முதலில் வெல்லஸ்லியின் மீது அதிருப்தி அடைந்தனர்; அப்பாலோ அரசை நிலை நாட்டிய ஆண்மையாளன் என்று புகழத் தவறவில்லை.

---

5. ஸர் ஜார்ஜ் பார்லோ (1805—1807)

மூன்ருவது மகாராஷ்டிர யுத்தம் முடிவதற்குள் வெல்லஸ்லி இங்கிலாந்துக்குத் திரும்ப நேர்ந்தது. அவர் நடத்திய சண்டைகளால் கம்பனியாருக்குச் செலவு பெருகியதுடன், பொறுப்பும் வளர்ந்தது. அது கண்டு மேலதிகாரிகள் பிரமித்து, இனிமேல் சுதேச மன்னர்களின் விஷயத்தில் தலையிடக் கூடாதென்று முடிவு செய்து, லார்டு காரன்வாலிஸையே மறுபடியும் கவர்னர் ஜெனரலாக இந்தியாவுக்கு அனுப்பலாயினர்.

அறுபத்தேழாவது வயதில் மறுபடியும் காரன்வாலிஸ் இங்கு வந்ததும், ஹோல்காருடன் நடத்தி வந்த போரை நிறுத்தவும், சிந்தியாவுடன் சமாதானம் கொள்ளவும் எண்ணினர். அவ்விதம் ஏற்பாடு செய்வதற்குள் அவர் நோய் கண்டு இறந்துபோனர். பின்பு ஸர் ஜார்ஜ் பார்லோ என்பார் இரண்டு வருஷகாலம் இங்கே கவர்னர்ஜெனரலாக வேலை பார்த்தார். அந்த ஸர் ஜார்ஜ் மேலதிகாரி

களின் உத்தரவுப்படி, ஸிந்தியாவுடன் உடனே சமாதானம் செய்து கொண்டார்; பின்பு, பிடித்த நாடுகளை யெல்லாம் திரும்பக் கொடுத்து ஹோல்காரிடம் ராஜியானார். உடனே ஹோல்கார் கிளம்பி ராஜபுத்திரரைத் தாக்கி ஆங்கிலேயரின் மீதிருந்த கோபத்தைத் தீர்த்துக்கொண்டனன். நேசர்களான ராஜபுத்திரருக்கு அவ்வேளை உதவிபுரிய ஆங்கிலேயர் முன்வர வில்லை. மகாராஷ்டிர யுத்தத்தில் ஆங்கிலேயருக்குத் துணைபோயும் ஆபத்தில் கைவிட்டனரென்று ராஜபுத்திரர் பெரிதும் வருந்தினர். இந்நிலையில் பேஷ்வாவும் நிஜாம் அரசனும் தத்தம் உடன்படிக்கைகளை ரத்து செய்துவிட வேண்டுமென்று விரும்பினர். ஆனால் இதற்கு ஸர் ஜார்ஜ் பார்லோ சம்மதிக்கவில்லை.

வேலூரில் சிப்பாய்க் கலகம்: திப்புவின் மைந்தர் இருவர் உபகாரச் சம்பளம் பெற்று வேலூரில் இருந்து வந்தனரல்லவா? அங்கே ஆங்கில வீரரும் இந்திய வீரருமடங்கிய சேனை யொன்று காவலாக இருந்து வந்தது. அவ்வீரரில் பலர் மைசூர்வாசிகள்; முன்னம் திப்புவினிடம் சேவகம் புரிந்தவர்கள். இது ஒருபுறமிருக்க, புது மாதிரியான தலை உடை கொள்வதோடு, தாடியையும் ஒருவிதமாக வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், நெற்றியில் மதச் சின்னம் தரிக்கக்கூடாதென்றும், இந்தியவீரருக்கு உத்தரவு பிறந்தது. மதவிஷயத்தில் அரசாங்கம் தலையிடுவதா என்று அவ் வீரர் மனம் புழுங்கி, ஆங்கிலேயரில் நூற்றுக்கு மேற்பட்ட மக்களைக் கொன்று போட்டனர். பின்னரே ஆறுகாட்டிலிருந்து ஒரு படை வந்து, இந்தியரில் நானூற்றுக்கு

மேற்பட்டவரைச் சுட்டுக் கொன்று, கலகத்தை அடக்கிற்று. திப்புவின் மைந்தர் அக்கலகத்திற்குக் காரணமென்று அதிகாரிகள் கருதியதனுல், இருவரையும் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டனர். அச்சமயம் சென்னைக் கவர்னராக இருந்தவரின்மீதும், சேனுதிபதியின்மீதும் கம்பனியின் மேலதிகாரிகள் நம்பிக்கை இழந்து, இருவரையும் வேலையைவிட்டு நீக்கினர்; கலகத் தலைவர்களில் சிலரை ஆவி வாங்கினர்; சிலரை வேலையிலிருந்து விலக்கினர். ஸர் ஜார்ஜ் பார்லோவும் உடனே இங்கிலாந்துக்குப் போய்விட நேர்ந்தது.

---

6. மிண்டோ பிரபு (1807—1813)

அடுத்தபடி கவர்னர் ஜெனரல் மிண்டோபிரபு. இவரும் சுதேச ராஜாக்களின் விஷயத்தில் தலையிடாது நடந்து வந்தார். ரெகுலேடிங் ஆக்டு எனும் சட்டம் ஏற்பட்டதுமுதல் இருபது வருஷத்துக்கு ஒரு தரம் கம்பனியின் உரிமை சாஸனம் புதிப்பிக்கப் பட்டு வந்தது. இவர் காலத்திலோ கடைசியாக அச் சாஸனம் புதுப்பிக்கப்பட, இந்தியாவில் ஏகபோகவியாபார உரிமையைக் கம்பனியார் இழந்தனர்; ஆங்கிலேயரில் யாவரும்

மிண்டோ பிரபு

இங்கு வந்து வியாபாரம் செய்யலாம் என்றும் ஏற்பட்டது. சீனதேசத்தோடு செய்யும் வியாபாரத்தில் மட்டும் கம்பனியார் தனி உரிமை அடைந்தனர்.

பாரசீகம், ஆப்கானிஸ்தானம் இந்தத் தேசங்களின் வழியே பிரஞ்சுக்காரர் படைகொண்டு இந்தியாவில் புகுவரோ என்று ஆங்கிலேயருக்கு வீணை பீதி உண்டாயிற்று. ஆதலினல் அவ்விரு தேசங்களுக்கும் ஆங்கிலத் தூதுவர் சென்று, பிரஞ்சுக்காரர் வரின் அவர்களுக்கு அனுமதி தரக் கூடாதென்று கேட்டுக்கொண்டனர். தரை மார்க்கமாக அன்னிய நாட்டார் இந்தியாவில் புகுவதானல் வட மேற்குக் கணவாய் வழியே தான் வருதல் வேண்டும். அக்கணவாய்க்கு இப்பாலுள்ள பஞ்சாப் அரசனையும் சரிப்படுத்திக் கொள்ள ஆங்கிலேயர் முயன்றனர்.

ரஞ்சித சிம்மன்

ரஞ்சித சிம்மன்: சீக்கியரிலே பத்துக் குருமார்கள் ஒருவர்பின் ஒருவராய்த் தோன்றி மறைந்த பின்பு, குருமார் ஏற்படவில்லை. ஆனல் **கால்ஸா** எனும் சமூக

சபை தோன்றியது. லார்டு மிண்டோவின் காலத்தில் சீக்கிய ஜாதியாருக்கு ரஞ்சித சிம்மன் எனும் ஓர் அரசன் இருந்தான். அவன் நாற்பது வருஷம் அரசு செலுத்தி, ஸீக்கியர் அனைவரையும் ஒருமைப்படுத்தியவன். பஞ்சாப் தேச முழுவதும் அவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

அப்போது பாடியாலா, நாபா எனும் சிற்றரசர் இருவர் கலகம் விளைவிக்கவே, தனது அரசுக்கு ஆபத்து நேருமோ என்று அவன் அஞ்சி, அவ்வரசரின் சண்டையில் தலையிடலானான். அவ்விரு வேந்தரும் ஆங்கிலேயரின் உதவியை நாடினர். உடனே ஸர் சார்லஸ் மெட்காப் என்பவரை பஞ்சாப் வேந்தனிடம் மிண்டோ அனுப்பினர். ஸர் சார்லஸும் ரஞ்சித சிம்மனும் கலந்துபேசவே, அமிருதசரஸ் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஆங்கிலேயருடன் நேசமாயிருக்க, ரஞ்சித சிம்மன் சம்மதித்தான். ஆங்கிலேயரும் அவனுடைய அரசில் தலையிடுவதில்லை என வாக்களித்தனர். ரஞ்சிதசிம்மன் உயிருடன் இருந்தவரையில் (1839-ஆம் வரையில்) ஆங்கிலேயரும் சீக்கியரும் மிக்க சமாதானமாகவே வாழ்ந்து வந்தனர். அவனுக்கு லாகூர்ச் சிங்கம் எனும் சிறப்புப் பெயரும் உண்டு. அவனுடன் நேசம் உண்டாகவே, வடமேற்கெல்லை வழியாக அன்னிய நாட்டார் எவரும் இந்தியாவுக்குள் வரமுடியாதென ஆங்கிலேயர் ஒருவாறு கவலையற்றிருந்தனர்.

பூனாவில் பேஷ்வாவிடம் காவலுக்கிருந்த ஆங்கிலச் சேனையின் செலவுக்கு ஈடாக, பண்டில்கண்டு எனும் பிரதேசம் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. அங்கே பாளையக்காரரான பலர் குறுநில மன்னவர்

போல் இருந்து வந்தனர். அவர்களோ ஒருவர்க்கொருவர் சண்டை சச்சரவு கொள்ள, நாடு நாசமாகத் தலைப்பட்டது. குழப்பம் தலைமிஞ்சி விடவே மிண்டோ பிரபு ஒரு சேனையை அனுப்பிக் குழப்பத்தை அடக்கவே, அமைதி நிலவிற்று.

மிண்டோவின் காலத்தில் **மோரிசுத் தீவு** பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமாக இருந்தது. அத்தீவினை வசஞ் செய்துகொள்ளுதல் நலமென்று கருதி, 1810 ஸூ ஒரு சேனையை அனுப்பினர் மிண்டோ. சண்டை செய்யாமலே அத் தீவு பணிந்துவிட்டது. அதனை ஆங்கிலேயர் சேர்த்துக் கொண்டனர். திருவாங்கூரிலே ஒரு சிறிய கலகம் கிளம்ப, அதனையும் மிண்டோ அடக்கினர்.

---

7. ஹேஸ்டிங்ஸ் பிரபு (1814-1823)

அடுத்தபடி கவர்னர் ஜெனரலாக வந்தவர் மார்க்விஸ் ஆப் ஹேஸ்டிங்ஸ். மத்திய இந்தியாவிலே பிண்டாரிகள் எனும் கொள்ளைக் கூட்டத்தாரின் அட்டகாசம் சகிக்கமுடியவில்லை. மகாராஷ்டிரரும் தொல்லை கொடுத்தனர். நேபாள வாசிகளான **கூர்க்கர்** என்போரும் ஆங்கிலேயருக்குச் சொந்தமான இடங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றி வந்தனர்.

ஹேஸ்டிங்ஸ் பிரபு

நேபாள யுத்தம்: நேபாளம் என்பது இமய மலையின் அடிவாரத்திலுள்ள ஒரு பிரதேசம். அந் நாட்டு மக்கள் கூர்க்கர் எனப்படுவர். அவர்கள் ராஜபுத்திரரின் சந்ததியார். ஆங்கில ராஜ்யத்தில் அவர்கள் புகுந்து பல கிராமங்களைச் சூறையாடினார்கள்; அப்பால் அயோத்தி நாட்டிலும் பிரவேசித்து இரண்டு பிரதேசங்களைப் பிடித்துக் கொண்டார்கள். உடனே ஆங்கிலச் சேனைகள் நான்கு, சண்டைக்கு எழுந்தன.

மலைகளில் இருந்துகொண்டு கூர்க்கர் சுலபமாகச் சண்டை செய்யமுடிந்தது. முதலில் ஆங்கிலச் சேனைகள் ஜெயிக்கவில்லை. பின்பு விடாப் பிடியாக ஆங்கிலேயர் போர் புரிந்து நேபாளத்தின் தலைநகரைக் கைப்பற்றிக் கொண்டனர். அதன் மேல் கூர்க்கர் சமாதானத்துக்கு வந்தனர். 1816-ம் வருஷம் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி (1) சிம்லா, நைனிடால், முஸ்ஸோரி, ஆல்மோரா ஆகிய இடங்கள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. அந்நான்கும் கோடைவாச ஸ்தலங்கள். (2) மலையின் அடிவாரத்திலுள்ள காட்டுப் பிரதேசமான தேரேய், சிக்கிம் இந்த இடங்களையும் கூர்க்கர் விட்டுக் கொடுத்தனர். (3) ஆங்கில ஸ்தானீகர் ஒருவரை அங்கே வைத்துக் கொள்ளவும் அவர்கள் இசைந்தார்கள். (4) ஆங்கிலேயரும் கூர்க்கரும் என்றும் நேசமாயிருப்பதென்றும் ஏற்பாடாயிற்று. தற்காலத்தில் ஆங்கிலச் சேனையிலே கூர்க்கப் பட்டாளம் உள்ளது.

பிண்டாரிகளின் அழிவு: மொகலாயர், மகாராஷ்டிரர் இவர்களிடம் தலைமுறை தலைமுறையாகப் பலர் போர்ச் சேவகம் புரிந்து வந்தனர். அவ்விரு

வரின் அரசும் செல்வாக்குக் குறைந்தவுடனே, அப்போர்ச் சேவகரின் சந்ததியாருக்குப் பிழைப் பில்லை. ஆதலின் அவர்கள் மத்திய இந்தியாவில் கூட்டங் கூட்டமாகக் கூடிக் கொள்ளையடித்துக் காலங் கழித்து வந்தனர். நிஜாம் அரசனது நாட் டிலும் 1815-ஆம் அவர்கள் புகுந்து கருந்தூளி செந்தூளி கொண்டனர். மகாராஷ்டிர குலத் தலைவர்களான ஸிந்தியாவும் பான்ஸ்லேயும் அவர் களுக்கு உடந்தையாக இருந்து வந்தனர். அவ்விரு வருடனும் ஹேஸ்டிங்ஸ் முதலில் ராஜிசெய்து கொண்டார். பின்பு ஆங்கிலச் சேனைகள் அக் கொள்ளைக் கூட்டத்தை நோக்கிப் புறப்பட்டன. அவர்கள் தலைவர்களிலே கரிம்கான் எனும் ஒருவன் சரண் புகுந்தான்; வாலிஸ் முகம்மது என்பவன் குண்டுக்கு இரையானான்; சிட்டு என்பவனோ கான கத்தில் வேங்கைப் புலிக்கு உணவாயினன்; அமீர் கான் என்பவன் டாங்க் எனும் பிரதேசத்தின் நவா பாகி அடங்கி வாழ்ந்தான். பின்பு பிண்டாரிகளின் தொல்லை தீர்ந்தது.

நான்காவது மகாராஷ்டிர யுத்தம் (1817—1819): பஸ்ஸீன் நகரில் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டது முதல், இரண்டாம் பாஜி ராவ் எனும் பேஷ்வா சுயாதீனம் இழந்து நின்றனன். ஆங்கிலேயரின் ஆதிபத்தியத்திலிருந்து தப்பிப் போக அவன் முயன்று வந்தான். நேபாள யுத் தத்தில் ஹேஸ்டிங்ஸ் மும்முரமா யிருக்கும் சமயத் தில், கப்ப விஷயமாய் அவனுக்கும் கெயிக்வாருக் கும் விவாதம் ஏற்பட்டது. கெயிக்வாரின் மந்திரி யான கங்காதர சாஸ்திரி ஆங்கிலேயரின் காப்பில்

பூனுவுக்கு ராஜிபேச வந்தனன். அப்போது அம் மந்திரி திடீரென்று கொலையுண்டான். இக் கொலைக்கு பேஷ்வாவின் மந்திரியான திரியம்பக்ஜி என்பவனே காரணமென்று ஆங்கிலேயர் கருதி, அவனைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லினர். பேஷ்வா ஒப்படைக்கவே, தாணு எனும் கோட்டையில் அவன் சிறைகிடந்தான்.

இனி, மகாராஷ்டிர சமூகத்திற்கு முதல் தலைவனாக ஆகிவிடின், ஆங்கிலேயரை எதிர்க்க இயலுமென்று பேஷ்வா எண்ணி, அத்தலைமைப் பதவியை அடையுமாறு முயலா நின்றான். இதற்கு இடையில் திரியம்பக்ஜி என்பான் சிறையிலிருந்து தப்பி, ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்ப முயலுகையில், அதற்குப் பேஷ்வா உடந்தையாக இருந்தான். அதன்மேல் ஹேஸ்டிங்ஸ் போருக்கு ஆயத்தமாக நேர்ந்தது. அப்போது பேஷ்வா, ஸிந்தியா, ஹோல்கார் ஆகிய மூவரின் சேனைகளும் ஆங்கிலேயரை எதிர்க்கலாயின. கார்க்கி எனுமிடத்தில் பேஷ்வாவின் சேனைகள் தோல்வியுண்டன. பான்ஸ்லேயின் துருப்புகள் நாகபுரியில் அபஜயமடைந்தன. ஹோல்காரின் வீரர்களும் மற்றோரிடத்தில் முறிபட்டார்கள். அதன் பலாபலன்கள்:—

(1) பேஷ்வா பாஜிராவின் ராஜ்யத்தை ஆங்கிலேயர் சேர்த்துக்கொண்டனர். (2) அவன் வாழ்வுக்கு வருஷா வருஷம் எட்டு லட்சம் ரூபாய் கிடைத்தது. (3) சிவாஜியின் சந்ததியைச் சேர்ந்த ஒருவனைப் பெயரளவில் மகாராஷ்டிர அரசனாக்கி, சதாரா நகரில் ஆங்கிலேயர் அமர்த்தினர். (4) பான்ஸ்லே தனது ராஜதானியான நாகபுரியை இழக்க,



ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் காலத்தில் இந்தியா

வேறொருவன் அரசனுக நியமனம் பெற்ருன் பான்ஸ்லேயின் அரசில் ஒரு பாகம் ஆங்கிலேயரின் வசமாயிற்று. (5) ஹோல்காரும் தனது ராஜ்யத்தில் பெரும் பாகத்தை இழந்தான். யுத்தம் தீர்ந்தவுடனே, ஹோல்கார், ஸிந்தியா, பான்ஸ்லே இந்த மூன்று குலத்தலைவரும் ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டனர்.

ஹேஸ்டிங்ஸ் காலத்தில் வடமேற்கு மூலையைத் தவிர இந்தியாவின் எல்லாப்பாகமும் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு உட்பட்டது. போர்கள் முடிந்தபின், ஜனங்களுக்கு நன்மை செய்வதில் இவர் கவனஞ் செலுத்தலானர். வங்காளத்திலே கலாசாலைகளும் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டன. ரஸ்தாக்கள் போடுவதும் பாலங் கட்டுவதுமாகிய பல வேலைகள் நடந்தன. கிறிஸ்தவப் பாதிரிமார் வந்து பாடசாலைகளும் அச்சுக்கூடங்களும் ஏற்படுத்தினர்.

கிளைவின் காலத்தில் வங்காள அரசுரிமை கிட்டிற்று; வெல்லஸ்லியின் காலத்தில் சென்னை மாகாணம் உண்டாயிற்று; ஹேஸ்டிங்ஸ் காலத்திலே பம்பாய் மாகாணம் தோன்றியது; மேலும் ஆங்கில அரசு இங்கே நன்கு கிளைத்தது.

---

8. பெண்டிங் பிரபு (1828—1835)

ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்குப் பின் கவர்னர் ஜெனரலாக வந்தவர் ஆமர்ஸ்ட் பிரபு. இவர் 1823-முதல் 1828-வரையில் ராஜரீகம் நடத்தினர். இவர் பர்மிய வேந்தனுடன் போருக்குப் போக நேர்ந்தது.

முதல் பர்மிய யுத்தம் :—பர்மா என்பது இந்தியாவுக்குக் கிழக்கேயுள்ள ஒரு வளமையான தேசம். அலம்பொரா எனும் அரச வமிசத்தார் ஆவா நகரை



பர்மா

ராஜதானியாகக் கொண்டு, நெடுங்காலம் பர்மாவை ஆண்டு வந்தனர். ஆமர்ஸ்ட் பிரபுவின் காலத்திற்கு முன்பே, அரக்கான், அஸ்ஸாம் ஆகிய நாடுகளை

அவ்வரசர் வசஞ் செய்திருந்தனர். அரக்கான் வாசிகளிலே பலர் அந்த ஆட்சிக்கு அஞ்சி ஆங்கில ராஜ்யத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர். அவர்களை அனுப்பிவிடுமாறு அவ் வேந்தன் பன்முறை கேட்டான். ஆங்கிலேயர் மறுத்து விட்டனர்.

அதன்மேல் பர்மிய வேந்தன் தன் படைகளை அனுப்பி, ஆங்கிலேயருக்குச் சொந்தமான சில இடங்களைப் பிடித்துக் கொண்டான்; வங்காளத்தின் கிழக்குப் பாகம் தனக்குச் சேர்ந்ததென்றும் உரிமை பாராட்டி எழுந்தான். அதன்மேல் ஆங்கிலச் சேனைகள் சண்டைக்குப் புறப்பட்டன. முதலில் அவை சற்றே தோல்வியுண்டன; பின்னரோ பர்மிய அரசனது பல பிரதேசங்களை வசஞ்செய்து கொண்டன. பர்மிய சேனபதியான மகா பந்துலா என்பவனும் கொல்லப்பட்டுப் போனான். அதன்மேல் பர்மியவேந்தன் சமாதானத்துக்கு வந்தான். அதன் பலனாக, அஸ்ஸாம், அரக்கான், டெனஸரிம் பிரதேசங்கள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. யுத்தச் செலவுக்காகவும் ஒரு கோடி ரூபா கிட்டியது.

மகா பந்துலா

வெல்லஸ்லியின் காலம் முதல் பரதபுர சமஸ்தானம் ஆங்கிலேயரின் ஆதீனத்தில் இருந்து வந்தது. 1825-ஞு அதன் அரசன் இறந்து போனான்.

உடனே அவன் மைந்தன்—ஏழு வயதுப் பாலன்—பட்டத்துக்கு வந்தான். அதுசமயம் தாயாதி யொருவன் கிளம்பி பரதபுரத்தை வசஞ் செய்து, தானே அரசுக்குரியவன் என்று சிம்மாசனம் ஏறினான். ஆதலின், ஆமர்ஸ்ட் பிரபு ஒரு சேனையை அனுப்ப நேர்ந்தது. முன்னம் அழியாது நின்ற அக் கோட்டையை வெடி வைத்து ஆங்கிலேயர் தகர்த்தனர். முடிவில் அத்தாயாதி சிறையுண்டான். அரசுக்குரிய பாலன் சிம்மாசனம் ஏறினான்.

பின்பு பெண்டிங் பிரபு கவர்னர் ஜெனரலாக வந்தார். இவர் முன்னம் சென்னையில் கவர்னராக இருந்தவர். நாட்டில் அமைதி உண்டாக வேண்டும், நாட்டு மக்கள் சுகமாக வாழ வேண்டும், என்பது இவர் விருப்பம். அண்டை அயலிலுள்ள நாடுகளும் அவ்விதமே இருந்தால்தான், கம்பனியின் அரசும் செவ்வனே நடக்கும் என்று இவர் நினைத்தார். அப்போது மைசூர், குடகு இந்த இரண்டு ராஜ்யங்களிலும் கொந்தளிப்பு மிகுந்திருந்தது.

பெண்டிங் பிரபு

குடகு நாட்டின் காவலன் குரூரமாக ஆட்சி நடத்தி வந்தான். குடிமக்கள் பெரிதும் வருந்தி

னர். நாட்டிலே கலகமும் குழப்பமும் மலிந்தன. கம்பனியின் ஆதீனத்தில் உள்ள அரசரைப் பகைவரினின்று காப்பதுபோலவே, சமஸ்தான மக்களேயும் மன்னரின் கொடுமையினின்று காக்கவேண்டுமென்று பெண்டிங் பிரபு கருதினர். ஆதலினல், அக்காவலனே அரியணையலிருந்து நீக்கி, உபகாரச் சம்பளங் கொடுத்து அவனேக் காசிக்கு அனுப்பிவிட்டு, அந்த ராஜ்யத்தையும் சேர்த்துக் கொண்டார். பின்பு அவ் வரசன் 1852-ல் தன் மகளுடன் இங்கிலாந்துக்குச் சென்று வாழ்ந்து வரலானன். அவன் மகள் அங்கே கிறிஸ்தவ மதத்தில் புகுந்து, ஓர் ஆங்கிலேயனே மணந்து கொண்டனள்.

மைசூர் ராஜ்யம்: நான்காவது மைசூர் யுத்தம் முடிந்ததும், கிருஷ்ண ராஜ உடையார் என்னும் பாலயர் மைசூர் அரசர் ஆனர். பூர்ணேயா என்பவர் மந்திரியாக இருந்து மன்னரின் சார்பாகத் திறமையுடன் ராஜ்யபாரம் நடத்திவந்தார். வயது வந்ததும், உடையார் தாமே ராஜ்யபாரம் வகித்து, நெறி தவறி நடக்கலானர். அதனல் 1830-ல் மைசூரிலே கலக மொன்று கிளம்பிற்று. பெண்டிங் பிரபு ஒரு சேனேயை அனுப்பி, அக்கலகத்தை யடக்கி, அரசனேயும் பதவியிலிருந்து விலக்கினர். ஆங்கில துரைத்தனத்தின் ஆதீனத்தில் ஐம்பது வருஷ காலம் அந்த ராஜ்யம் இருந்துவந்தது. பின்பு கிருஷ்ண ராஜரின் சுவீகார மைந்தன் சாமராஜ உடையாருக்கு அரசுரிமை கிடைத்தது.

சதியை நிறுத்தல்: மக்களின் நலத்தைக் கருதி பெண்டிங் பிரபு பற்பல சீர்திருத்தங்கள் செய்யலானர். வடக்கே சில இடங்களில் பெண்

சிசுக்களைக் கொல்லுவதும், நரபலி கொடுப்பதும், வழக்கமா யிருந்தன. அக்கொடிய வழக்கங்களை நிறுத்த இவர் பெரிதும் பாடுபட்டார்; மேலும் சதி வழக்கத்தையும் நிறுத்தினர். கணவனை இழந்த பின் உயிர்வாழ மனமில்லாத பெண்டிர் அத்துயரம் தாங்காமல் உடனே மனம் வெடித்து இறந்துவிடுவ துண்டு. அவ்விதம் இறவாத பெண்டிர் தம் கணவரது சிதையில் தாமும் படுத்து, அத்தீயில் வெந்து சாம்பராதலே சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் எனப்படும். ரஞ்சிதசிம்மன் இறந்ததும், அவன் மனைவியரும் பல பணிப்பெண்களும் உடன்கட்டை ஏறி உயிர் விடுத்தனர். தாமாக உடன்கட்டை ஏற மனமில்லாத பெண்களை வலுக்கட்டாயமாக உடன்கட்டை யேறச் செய்தலும் வழக்கமாக இருந்தது. ஆதலின் உடன்கட்டை ஏறுதல் கூடாதென இவர் 1829 ஸு ஒரு சட்டம் இயற்றினர். அக்பர் சக்கரவர்த்தி சாதிக்க முடியாத இக்காரியத்தைச் சாதித்த பெருமை இவரைச் சேரும்.

தக்கர் என்பவரைத் தொலைத்தல்: முன்னம் பிண்டாரிகள் கேடு இழைத்து வந்ததைப் போலவே தக்கர் என்போரும் நாடெங்கும் தீமை விளைத்து வந்தனர். தக்கரோ பிரயாணிகளைப் போலவும் சாதுக்களைப் போலவும் வேடம் பூண்டு, ஜனக் கூட்டத்தில் கலந்துகொண்டு, சமயம் பார்த்து வர்த்தகரையும் ஜனங்களையும் கொள்ளையடித்தல் வழக்கம். எனவே ஜனங்கள் வழிப்பிரயாணம் செய்வது கஷ்டமாயிற்று; வீட்டிலே நிம்மதியாக வாழவும் முடியவில்லை. ஆதலினல் தக்கர் கூட்டத்தை ஒழிக்குமாறு கர்னல் ஸ்லீமான் என்பவருக்கு

இவர் ஆணையிட்டார்; ஆயிரக்கணக்கான தக்கரைத் தூக்கிலிட்டும் தீவாந்தரங்களுக்கு அனுப்பியும், நாட்டிலே அமைதியை உண்டாக்கினர்.

இந்தியருக்கு வேலை: முன்னம் காரன் வாலிஸ் பிரபு செய்த ஏற்பாட்டினல், இந்தியருக்கு அரசாங்கத்திலே தக்க உத்தியோகங்கள் கிடைக்கவில்லை. ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கோ சம்பளம் அதிகம் கொடுக்க வேண்டியிருந்தது. இதனல் கம்பனிக்குச் செலவு அதிகம் உண்டாயிற்று. தவிர, ஐரோப்பிய அதிகாரிகளோ மக்களின் நடை உடை பாவனைகளை நன்கறிந்து காரியம் நடத்த முடியவில்லை. இந்நிலையில், அரசாங்கத்திலே இந்தியருக்கு உத்தியோகங்கள் கொடுக்க முற்பட்டவர் பெண்டிங் பிரபுவே. அப்போது முனிசிப், டெபுடி கலெக்டர், ஸப் ஜட்ஜ் முதலிய உத்தியோகங்கள் நம்மவருக்குக் கிட்டின. குறைந்த செலவில் நல்ல வேலை நடந்துவருதல் கண்டு, மக்களுக்குச் சற்றே ஆறுதல் ஏற்பட்டது.

ராஜ பாஷை: மொகலாயரின் காலத்தில் பாரசீக பாஷையே ராஜ பாஷையாக இருந்து வந்தது. கம்பனியரசிலும் நீதிஸ்தலங்களில் அப்பாஷையே கையாளப்பட்டு வந்தது. கம்பனியாட்சி பெருகவே, ஆங்கிலத்தை ராஜபாஷையாக ஆக்க வேண்டுமென்று பெண்டிங் பிரபு விரும்பினர். அப்போது இவருடைய சபையில் மெகாலே என்பவர் சட்ட மெம்பராக இருந்தார். இந்தியருக்கு அப்பாஷையைப் புகட்டினல்தான், அதனை ராஜ பாஷையாக்க முடியும் என்று மெகாலே வற்புறுத்தினர். நம் நாட்டிலே அதுபற்றிக் கட்சிப் பிரதிகட்சிகள்

தோன்றின. தாய் மொழிப்பற்று தளர்ந்துவிடு மென்று பலர் வாதாடினர். எனினும் ராஜா ராம் மோகன் ராய், துவாரக நாத தாகூர் இவர்களின் உதவி யை நாடி, ஆங்கிலத்தை ராஜபாஷையாகச் செய் தார் பெண்டிங். நாடெங்கும் ஆங்கிலத்தைக் கற் பிக்க ஏற்பாடாயிற்று. பல கல்லூரிகளும் பாட சாலைகளும் தோன்றின. கல்கத்தாவில் வைத்திய கலாசாலை யொன்றும் கிளம்பிற்று. தேசமக்களும் நாளடைவில் ஆங்கில பாஷையில் மோகங்கொண்டு, அதனை நன்கு பயின்று நலமும் எய்தினர்.

பெண்டிங் பிரபுவின் காலத்தில் கம்பனியின் வர்த்தக உரிமைச்சாஸனம் ஆராயப்பட்டது. அதன் விளைவாக (1) வியாபாரத்தை அறவே விடுத்து, தேச நிர்வாகத்தைமட்டும் கம்பனியார் கவனிக்க நேர்ந்தது. (2) ஜாதி, மத, வர்ண பேதமின்றி யோக்கியதையைமதித்து நம்மவருக்கு உத்தியோகம் கிடைக்க வழி பிறந்தது. (3) வங்காளகவர்னர் ஜெனரல்கள் இந்தியாவின் கவர்னர் ஜெனரல்கள் எனப்பட்டனர். (4) இந்தியா முழுதுக்கும் சட்ட திட்டஞ் செய்யும் அதிகாரம் கவர்னர் ஜெனரலையும் ஆலோசனை சபையையுங் கொண்ட இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஏற்பட்டது. இவர் புரிந்த நல்ல காரியங்களை மதித்து, கல்கத்தாவிலே இவருக்குச் சிலையொன்று வைத்துளர்.

---

9. ராஜா ராம் மோகன் ராய்

பெண்டிங் பிரபு நம்மவருக்கு நன்மை புரிந் தாரென்றால், அதற்குப் பக்கபலமாக இருந் தவர் ராஜா ராம் மோகன ராய் என்பவர். தேசம்

சமூகம் இரண்டையும் கைதூக்கிவிட அந்நாளில் உழைத்தவர்களிலே ராம் மோகன் முதல்வராவார்.

ராஜா ராம் மோகன் ராய் 1774ல் வங்காளத்திலே வேதிய குடும்பத்தில் பிறந்தவர். இவர் தந்தையின் பெயர் ராம காந்த ராய்; நவாபுகளிடமும் ராஜாக்களிடமும் உத்தியோகம் வகித்து உயர்வு பெற்றவர் இவர் தந்தை. இளமையிலேயே இவர் மதிவன்மையும் மேதையுங் கொண்டு விளங்கினர்; முதலில் தாய் மொழியான

ராஜா ராம் மோகன் ராய்

வங்க பாஷையை நன்கு கற்றறிந்தார்; பின்பு அரபி, பாரசீகம் ஆகிய பாஷைகளையும் பயின்றார்; வடமொழியையும் கற்றுத் தேர்ந்தார்; வேதம், உபநிஷதம் இவற்றை நன்கு பரிசீலனை செய்தார். நம் சமூகத்தில் பரவியிருந்த சில பழக்கவழக்கங்கள் அர்த்தமற்றவை என்றும், சாஸ்திர சம்பந்தம் இல்லாதன என்றும் இளமையிலேயே இவருக்குப் புலப்பட்டது.

பதினாறுவது வயதிலேயே விக்கிரக ஆராதனையைக் கண்டித்து இவர் ஒரு நூல் எழுதினர். பலருக்கும் அதுகண்டு இவர்மீது வெறுப்பு ஏற்பட்டது. தந்தையும் இவரை வெறுக்கலானர். எனவே இவர்

தம் வீட்டைத் துறந்து நாடோடியாக வாழ நேர்ந்தது. தந்தை காலகதி யானபின்பே, தாயுடன் சேர்ந்து இவர் வாழலானுர். அப்போது, ஹீப்ரு, கிரீக், லத்தீன், பிரஞ்சு முதலிய பாஷைகளிலும் தேர்ச்சி எய்தினர். கொஞ்சகாலம் ஒரு சமஸ்தானத்தில் திவானுக வேலைபார்த்தார். அப்போது இவரது நெறி கண்டு, அனைவரும் போற்றினர்.

இந்து மதத்தை இவர் நன்கு ஆராய்ந்தார். முடிவில் எம்மதமும் சம்மதமே யென இவருக்குப் புலப்பட்டது. வேதங்களையும் உபநிஷதங்களையும் விளக்கி, இவர் நூல்கள் வெளியிட்டார்; முகம்மதிய வேதமாகிய குர்ஆனையும் கற்றுணர்ந்தார். கடவுள் ஒருவரே என்பது இவர் கொள்கை. அதுவே உபநிஷதங்களின் உயர் போதம். எம்மதமாயினும் சரி, அதிலுள்ள மூடப் பழக்க வழக்கங்களை இவர் கண்டித்தார்; கல்கத்தாவிலே ஆத்மீக சபையொன்று நிறுவினர்; **பிரம்ம சமாஜம்** எனும் சபையையும் தோற்றுவித்தார்.

ஜாதி பேதத்தை இவர் ஒப்பவில்லை. உடன் கட்டை ஏறும் வழக்கம் கண்டு இவர் சகிக்கவில்லை. இத்துறையில் பெண்டிங் பிரபுவுக்கு வலது கை போல் விளங்கியவர் இவரே. அவ் வழக்கத்தின் கொடுமையைக் குறித்து வடநாட்டிலே இவர் செய்த பிரசாரம் பலரையும் பரவசப்படுத்தியது. ஒருவர் பல மனைவியரைக் கொள்வதையும் இவர் கண்டித்தார்; சின்ன வயதில் கணவரை இழந்து தவிக்கும் பால்ய விதவைகளுக்கு மறுமணம் வேண்டுமென்றுர்; ஆங்கிலப் படிப்பு பிரபலம் ஆகவும் பாடுபட்டார்; பெண் கல்வி பரவுமாறு பெரிதும் முயன்றுர்.

இவர் புகழ் எங்கும் பரவியது; மதி நலமும் மன உறுதியும் மிகப் பிரகாசித்தன. அதன்மேல் 1830-ஆம் டில்லி பாதுஷா பகதூர்ஷா இவருக்கு ராஜா என்னும் அரிய பட்டம் வழங்கிப் பெருமை செய்தார். பின்பு இவர் பாதுஷாவின் தூதராக இங்கிலாந்து சென்று, அவர் கட்சியை எடுத்து வாதித்தார். அங்கிருந்த ஆங்கிலேயர் இவரது தகவும் திறமும் கண்டு மெச்சினர். 1833-ஆம் அங்கே பிரிஸ்டல் நகரில் இவர் பரகதி சென்றார். உண்மையில் உடல் பொருள் ஆவி மூன்றையும் தேசம், சமூகம் இரண்டினுக்கும் அர்ப்பணஞ் செய்ததை இந்தியர் மறக்க ஒண்ணாது. இவரது ஆண்டு நாளை இன்றும் பலர் கொண்டாடி வருகின்றனர்.

---

10. ஆப்கன் யுத்தமும் சிந்து நாடும்

ஆதியிலே பாரசீகரென்ன, அப்பால் கிரேக்கரென்ன, அதன்பின் மங்கோலியரென்ன, முதலிய பலரும் வடமேற்கெல்லை வழியே நம்தேசத்தின்மீது படை கொண்டு புகுந்தனர். வியாபார நிமித்தம் ஐரோப்பியர் கடல்மார்க்கமாகவே வந்தனர். நாளடைவிலே இத் தேசத்தின் பெரும் பகுதியில் ஆதிக்கங்கொண்ட ஆங்கிலேயர் கடற்படையில் வல்லவர்கள். ஆகவே இங்கிலாந்துக்குக் கடலரசி என்று ஒரு சிறப்புப் பெயருண்டு. இந்தியாவில் தங்களது ஏகாதிபத்தியத்தைக் குலைக்கக் கடல்வழியே வரும் பகைவரைத் தடுத்தல் ஆங்கிலேயருக்கு அவ்வளவு கஷ்டமன்று.

இந்தியாவின் வடக்கிலோ கிழமேலாக நெடுகி லும் இமயமலை ஒப்பற்ற அரணுகும். வடகிழக் கெல்லையிலே ஆமர்ஸ்ட் பிரபுவின் காலத்தில் பர் மிய யுத்தம் நடந்தது. அதன் முடிவாக, அஸ்ஸாம், அரக்கான் பிரதேசங்கள் ஆங்கிலேயரின் வசமா யின. பின்னுளில் பர்மா முழுதும் ஆங்கில ஏகாதி பத்தியத்துக்குள் அடங்கிவிடலாயிற்று. ஆதலினுல் வடகிழக்கெல்லை வழியே பகைவர் படை கொண்டு வர வகையில்லை. அல்லாமலும், வடகிழக்கெல்லை வழியே இந்தியாவுக்குள் புகுவதற்கு இலகுவான கணவாய்கள் கிடையா. எனவே அத்திக்கிலிருந்து அபாயம் ஏற்படக் காரணமில்லை. வடமேற்கெல்லை அப்படியன்று. அங்கே கைபர், போலன் எனும் இரு கணவாய்கள் உள்ளன. அவை இந்தியாவின் கோட்டை வாயில்கள் போன்றவை.

இங்கே பெரிய ஸாம்ராஜ்யங் கொண்டிருந்த மௌரிய மன்னவர்களும், அப்பால் மொகலாய வேந்தர்களும் அவ்விரு கணவாய்களைத் தங்கள்வசம் வைத்திருந்தனர்; அல்லாமலும் அக் கணவாய் களுக்கு மேற்கிலுள்ள ஆப்கானிஸ்தானத்திலும் தங்கள் ஆட்சியைப் பரப்பியிருந்தனர். 1761-ஆடு மூன்ருவது பாணிபத் யுத்தத்தில் மகாராஷ்டிரரை முறியடித்த அஹ்மத்ஷா அப்தாலி என்பான் ஆப்கானிஸ்தானத்தில் அரசு செலுத்தியவன். அவனைப் பின்பற்றி அவன் சந்ததியாரும் அங்கே ஆட்சி செலுத்தி நின்றனர்.

நாளடைவில் அச் சந்ததியார் தம்மிடமிருந்த கைபர் கணவாயையும் பஞ்சாப் நாட்டையும் இழந்து விட்டனர். 1800-ஆடு சீக்கியர் தலைவஞன ரஞ்சித

சிம்மன் பஞ்சாப் முழுவதையும் தனது வசமாக்கிக் கொண்டான்; கைபர் கணவாயைப் பாதுகாப்ப தற்கு உதவியான பிஷாவர் நகரையும் கைப்பற்றிக் கொண்டான். 1809-ஆ மிண்டோ பிரபுவுக்கும் ரஞ்சித சிம்மனுக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்ட தல்லவா? அதற்கிணங்க அவன் ஆங்கிலேயருடன் நேசமாகவே இருந்து வந்தனன். ருஷியரோ மத்திய ஆசியாவிலும் துருக்கிஸ்தானத்திலும் செல்வாக்குப் பெறலாயினர். அதுகண்டு ஆங்கிலேயருக்குத் திகில் உண்டாயிற்று. ஆதலின் மத்திய ஆசியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயுள்ள நாடுகளைத் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள ஆங்கிலேயர் முயன்றுவரலாயினர்.

ஆக்லண்டு பிரபு (1837-1842) கவர்னர் ஜெனரலாக வந்ததும், ஆப்கானியருடன் சண்டைக்குப் போகநேர்ந்தது. விவரம் யாதெனில்: அஹ்மத்ஷா அப்தாலியின் சந்ததியைச் சேர்ந்த ஷாஷுஜா என்பவன் ஆப்கானிஸ்தானத்தை ஆண்டுவந்தனன். மந்திரி வமிசத்தைச் சேர்ந்த டோஸ்ட் முகம்மது என்பவனுக்கும் ஷாஷுஜாவுக்கும் அரசு காரணமாகப் போர் மூண்டது. அதில் ஷாஷுஜா அபஜெயமடைந்து பஞ்சாபுக்கு வந்து ரஞ்சித சிம்மனிடம் சரண் புகுந்தான். உடனே டோஸ்ட் முகம்மது சிம்மாசனம் ஏறினன்.

அதற்குமுன்னம், ஆப்கானிஸ்தானத்துக்குச் சொந்தமாயிருந்த பிஷாவர் என்னும் நகரம் அதுபோது ரஞ்சித சிம்மன் வசமிருந்தது. அந்நகரை ரஞ்சித சிம்மனிடமிருந்து வாங்கித் தரும்படி ஆக்லண்டு பிரபுவை டோஸ்ட் முகம்மது கேட்டுக்கொண்

டான். நண்பனுன ரஞ்சித சிம்மனிடம் அதனைக் கேட்க ஆக்லண்டு துணியவில்லை. அதனுல் ஆப்கானிய அரசன் கோபம் கொண்டிருந்தான்.

இது இப்படியிருக்க, ருஷியருடன் டோஸ்ட் முகம்மது நேசங்கொள்ளலானுன். ருஷியத் தூதர் வந்து, ஆப்கன் அரசவையில் ஆடம்பரமாக வீற்றிருந்தனர். ஆக்லண்டு அனுப்பிய தூதனை டோஸ்ட் முகம்மது சட்டை செய்யவில்லை. ருஷிய பீதியைப் போக்க வேண்டுமாயின், டோஸ்ட் முகம்மதைப் பட்டத்திலிருந்து நீக்கிவிடவேண்டுமென ஆக்லண்டு கருதினுர். அதன்மேல், ரஞ்சித சிம்மன், ஷாஷுஜா, இந்தியா கவர்ன்மெண்டார் ஆகிய மூவரும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, அவனைப் பட்டத்திலிருந்து இறக்கிவிடத் தீர்மானித்தனர்.

பம்பாய், சென்னை இந்த இடங்களிலிருந்து 1839-ஆு ஆங்கிலச் சேனை கிளம்பியது. போலன் கணவாய் வழியே அச்சேனை ஆப்கானிஸ்தானத்தில் புகுந்து போர் புரியவே காண்டகார், காபூல், கஜனி ஆகிய மூன்று நகரங்களும் ஆங்கிலேயரின் கையில் சிக்கின. டோஸ்டு முகம்மதும் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான். வருஷாவருஷம் இரண்டு லட்சம் ரூபா திரவிய சகாயம் கொடுத்து, அவனை ஆங்கிலேயர் இந்தியாவுக்கு அனுப்பினர். பின்பு ஷாஷுஜா ஆப்கன் அரசுக அரியணை ஏறினுன். ஷாஷுஜாவுக்குப் பக்க பலமாக அங்கே ஆங்கிலச்சேனையொன்று தங்கியிருந்தது. ஆங்கில தளகர்த்தரும் பிறரும் காபூலிலே சுகமாய் வாழவிரும்பி, இந்தியாவிலிருந்து தங்கள் மனைவி மக்களைத் தருவித்துக் கொண்டனர்.

ஆங்கிலேயரின் உதவிகொண்டு ஷாஷூஜா அரசனானதை ஆப்கானியப் பெருமக்கள் விரும்ப வில்லை. அவர்கள் கலகமாய்க் கிளம்பி, ஆங்கிலே யரை எதிர்க்கத் தொடங்கினர். அதுகண்டு ஆங்கி லேயர் அச்சங்கொண்டு, இந்தியாவுக்குத் திரும்பி



வடமேற்கு எல்லைப்புறம்

விடுவதாகச் சொல்லி, ஊர்போய்ச் சேரும் வரையில் தங்களை உபத்திரவம் செய்யக்கூடாதென்று வேண் டிக்கொண்டனர். ஆப்கானியரும் தலையசைத்தனர். அவர்களை நம்பி, ஆங்கிலேயர் திரும்பி வருகையில், மலையின்மீதிருந்து பாறைகளை உருட்டித் தள்ளியும், துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் வெட்டியும் ஆப்

கானியர் துன்பம் செய்யலாயினர். அதனுல் ஆயிரக் கணக்கான ஆங்கிலேயரில் ஒருவனே உயிருடன் இந்தியாவுக்கு வந்துசேர்ந்தான். இத்தகைய அனர்த்தம் ஆங்கிலேயருக்கு என்றும் நேர்ந்த தில்லை. இதுவே முதல் ஆப்கன் யுத்தமாம்.

ஆப்கானிஸ்தானத்திலே காபூல்நகரில் நேர்ந்த கோரத்தினுல் ஆக்லண்ட் பிரபு வேலையை விட்டுப் போக நேர்ந்தது. பின்பு லார்டு எல்லன்பரோ என்பவர் (1842—1844) கவர்னர் ஜெனரலாக வந்தார். ஆப்கானியரைப் பழிக்குப் பழிவாங்கி, ஆங்கிலேயரின் மதிப்பை நிலைநாட்டுதல் எல்லன்பரோவின் கடமை ஆயிற்று. ஆப்கன் யுத்தங்காரணமாக ஆங்கிலேயர் பலர் அங்கே மாண்டுவிட்ட போதிலும் ஜெனரல் ஸேல் என்பவன் ஒரு சில வீரருடன் ஜலாலபாத் என்னும் நகரில் சிக்கிக்கொண்டான்.

ஜெனரல் ஸேலை மீட்கவும், ஆப்கானியரைப் பழிவாங்கவும், புருஷபுர நகரிலிருந்து ஜெனரல் போல்லாக் என்பவன் தலைமையில் ஓர் ஆங்கிலச் சேனை கிளம்பிற்று. கைபர் கணவாயின் வழியே அது ஆப்கானிஸ்தானத்தில் நுழைந்ததும் டோஸ்ட் முகம்மதின் புதல்வன் அக்பர்கான் என்பவன் அச்சேனையை எதிர்க்கலானுன். ஆயினும் அவன் தோற்றோட நேர்ந்தது. பின்பு ஆங்கிலச் சேனை காபூல் நகரைக் கைப்பற்றி, அங்கே எல்லா இடங்களையும் தரைமட்டமாக்கிற்று; கஜனி கோட்டையையும் தகர்த்தெறிந்தது; இன்னும் பல இடங்களையும் மண்ணோடு மண்ணுக்கியது.

பின்னர், ஆப்கானியர் தமக்கு இஷ்டமான ஒருவனை அரசனுகக் கொள்ளலாமென்றும், அதில்

ஆங்கிலேயர் தலையிடாரென்றும், புதியஅமீர் நேசப் பான்மை காட்டின், ஆங்கிலேயரும் நேசம் பாராட் டுவரென்றும், எல்லன்பரோ அறிவித்தார். பழி வாங்கச் சென்ற ஆங்கிலச்சேனை ஜெனரல் ஸே லுடன் இந்தியாவுக்குத் திரும்பியது. டோஸ்டு முகம் மது விடுதலை பெற்றுத் தனது ஊர்போய்ச் சேர்ந் தான். இதற்குள் அங்கே ஷாஷுஜா கொல்லப் பட்டுப் போயினன். உடனே டோஸ்ட் முகம்மது அமீர் ஆனன். ஆங்கிலேயருக்கும் இவனுக்கும் இடையே நேசப்பான்மை பிறந்தது.

சிந்து நாட்டை அமீர் என்போர் ஆண்டு வந்த னர். ஆப்கன் யுத்த சமயத்தில் அவர்களில் பலரும் ஆங்கிலேயருக்குப் பேருதவியாக இருந்தார்கள். சிலரோ விரோதம் கொண்டிருந்ததாகத் தெரிய வந்தது. மேலும் அவர்கள் சரிவர ஆட்சி செய்து வரவில்லை. ஆகவே ஸர் சார்லஸ் நேப்பியர் என் பவன் தலைமையில் எல்லன்பரோ ஒரு சேனையை அனுப்பினர். மியானி, ஹைதராபாத் என்னும் இடங்களில் சண்டைகள் நிகழ, அவற்றில் அமீர்கள் தோற்றுப்போனர்கள். உடனே அந்த நாட்டை எல்லன்பரோ வசஞ்செய்துகொண்டார். பின்பு, சிந்துநாடு பம்பாய் மாகாணத்துடன் சேர்ந்தது.

---

11. ஹார்டிஞ்சு பிரபுவும் சீக்க யுத்தமும்

எல்லன்பரோ பிரபுவுக்கு அப்புறம் ஹார் டிஞ்சு பிரபு (1844-1848) கவர்னர் ஜெனர லாக வந்தார். சுதேச மன்னவருடன் சண்டை நேராதபடி, ராஜ்ய பரிபாலனத்தை மட்டும் பார்க்க

வேண்டுமென்பதே அவர் எண்ணம். ஆயினும், சீக்கியருடன் அவர் யுத்தத்துக்குப் போகநேர்ந்தது. அதன் விவரம் யாதெனில்:—

லாகூர்ச் சிங்கமான ரஞ்சித சிம்மன் 1839-ல் காலகதியானுன். அவன்காலத்தில் சீக்கிய ராஜ்யம் மிகவும் விசாலமா யிருந்தது. அவன் சேனையிலே பதினயிரக்கணக்கான வீரரும் இருந்தனர். அவன் காலகதியானதும், சீக்கிய அரசியலில் அலங்கோலம் ஏற்படலாயிற்று. அரசை நச்சி அநேகர் சூழ்ச்சி புரியத் தொடங்கினர். அதனுல் ஐந்து வருஷகாலத்திற்குள் ஒருவர்பின் ஒருவராக நால்வர் பட்டத்துக்கு வந்து மாண்டுபோயினர்.

முடிவில் ரஞ்சித சிம்மனது கடைசிப்பிள்ளையான திலீப சிம்மன் சிம்மாசனம் ஏறினுன். அப்பொழுது திலீபனுக்கு வயது பத்து. மைந்தனது மாதாவும், லால்சிம்மன் என்னும் சேனைத்தலைவனும் தேஜசிம்மன் எனும் முதன்மந்திரியும் சேர்ந்து ஆட்சியை நடத்திவந்தனர். படைத்தலைவர்கள் பதட்டமாய் நடக்கவே அன்னவரை அடக்க வேண்டுமென்று முதன் மந்திரி முயன்ருன்; அதில் அவன் உயிரிழக்க நேர்ந்தது. அதுகாரணமாக சீக்கிய அரசுக்குள் கொந்தளிப்பும் குழப்பமும் கட்சிப் பிரதிகட்சிகளும் தலையெடுத்தன.

அந்நிலையில் சீக்கிய சேனை துடித்து நின்றது. சண்டைபோட்டும் வெற்றி பெற்றும் வீரப்பிரதாபம் கொள்ள வேண்டுமென்று படைத்தலைவர்கள் கருதினுர்கள். கட்டுக் கடங்காத சேனையை ஒரு போக்கில் விட்டே திருப்ப வேண்டுமென்று திலீபன் தாயும் சேனுதிபதியும் தீர்மானித்தனர்.

அப்போது ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைக் கண்டு, சீக்கிய சேனை சீற்றங் கொண்டு, கம்பனி யாருக்குச் சொந்தமான பல இடங்களைத் தாக்கிப் பிடிக்க எழுந்தது. ஆங்கிலச்சேனைகளும் போருக்கு ஆயத்தமாயின. கவர்னர் ஜெனரல் படைத்தலைமை பூண்டு சென்றார். மூட்கி, பிரோஸ்பூர், அலிவால், சோப்ரயான் முதலிய இடங்களில் 1845-ஆம் சண்டைகள் பல நிகழ்ந்தன. முடிவில், ஆங்கில வீரர்களே பெரு மித வெற்றி அடைந்தார்கள். பின்பு 1846-ஆம் லாகூரிலே இரு தரப்பாருக்கும் சமாதான உடன் படிக்கை யொன்று ஏற்பட்டது.

அச்சமயம் (1) சீக்கியருக்குச் சொந்தமான பிரதேசங்களில் ஒரு பகுதி (ஸட்லீஜ், பீயாஸ் நதிக ளுக்கு இடையிலுள்ள பிரதேசம்) ஆங்கிலேயருக் குக் கிடைத்தது. (2) திலீப சிம்மனே அரசனென ஆங்கிலேயர் ஒப்புக்கொண்டனர். அக்குமரனுக்கு வயது வரும் வரையில் அரசை நடத்திவர ஒரு சபை ஏற்பட்டது. ஆங்கில ஸ்தானீகன் அச்சபைக்கு ஸர்வாதிகார புருஷனாயினன். (3) யுத்தச்செலவுக் காக ஆங்கிலேயருக்கு ஸீக்கியர் ஒன்றரைக் கோடி ரூபா கொடுக்க நேர்ந்தது. அத் தொகையைக் கொடுக்க வழி இல்லாததால், குலாப் சிம்மன் என்ப வனுக்குக் காஷ்மீரத்தை ஒரு கோடி ரூபாய்க்கு விற்றனர். இதுவே முதல் சீக்கிய யுத்த முடிவின் முக்கியமான சாரமாம்.

சீக்கிய யுத்தம் தீர்ந்தவுடனே பொது நன் மைக்கான சீர்திருத்தங்கள் செய்ய ஹார்டிஞ்சு பிரபு முயலா நின்றார்: (1) ரயில் பாதை போட அவர் பூர்வாங்க ஏற்பாடு செய்தார். (2) கங்கையி

லிருந்து ஒரு பெரிய கால்வாய் வெட்டிவைக்க வகை தேடினர். (3) சுதேச ராஜாக்களின் பிரதேசத்திலும் உடன்கட்டை யேறும் வழக்கத்தை நிறுத்தச் செய்தார். (4) கல்கத்தாவில் நகர பரிபாலன சபை ஏற்படுமாறு சட்டம் செய்தார். (5) சேனையின் தொகையையும் செலவையும் குறைத்தார். (6) ரூர்க்கி எனுமிடத்தில் எஞ்சினீரிங் கலாசாலையொன்று வைத்தார்.

சீக்கிய யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொணர்ந்து, சில சீர்திருத்தங்களும் செய்த பின்னர், 1847-ஆம் ஹார்டிஞ்சு பிரபு இங்கிலாந்து சென்றார். முதல் சீக்கிய யுத்தம் தீர்ந்த பிறகு, பஞ்சாப் பிரதேசம் பல பிரிவுகளாயது. அவற்றில் ஒன்று மூல்டான். அதன் தலைவன் பெயர் மூலராஜன். அவனுக்கு மேலதிகாரி திலீப சிம்மன். சீக்கிய அரசின் சர்வாதிகார புருஷனை ஆங்கில ஸ்தானீகனோ கணக்குவழக்கு அறிவிக்குமாறு மூலராஜனைக் கேட்டான். அதில் அவ்விருவருக்கும் மனக்கசப்பு உண்டாயிற்று. அதன்மேல் மூலராஜன் தன் பதவியை வீசி யெறிந்தான்.

இதற்கிடையில் திலீபனது தாயாரை லாகூரைத் துறந்து, காஷ்மீரத்துக்குப் போகுமாறு ஆங்கிலேயர் சொல்லினர்; திலீபனுக்கு மணம் புரியும் விஷயத்திலும் தடங்கல் செய்தனர். இக் காரணங்களால் சீக்கியருக்கு ஆத்திரம் மிகுந்தது. அங்ஙன மிருக்கையில், ஆங்கிலப் படையொன்று சென்று, மூல்தானை வசஞ்செய்து கொண்டது. மூலராஜன் அது கண்டு, ஆங்கில தளகர்த்தனைக் கொன்று, ஆத்திரங் கொண்டு நின்ற சீக்கியரையும்

ஆங்கிலேயரின்மீது தூண்டிவிட்டான். இரண்டாவது சீக்க யுத்தத்துக்கு அதுவே காரணம்.

சீக்கியரின் கொதிப்பைக் கண்டவுடனே, ஆங்கிலப் படைஞர் கவ் என்னும் தளகர்த்தன் தலைமையில் போருக்கு எழுந்தனர். சிலியன்வாலா எனுமிடத்தில் சீக்கியருக்கும் ஆங்கிலேயருக்கும் போர் மூண்டது. அதில் ஆங்கிலேயரே ஜெயித்தனர். மூல்தானும் அவர்களின் வசமாயிற்று. மூலராஜனும் சிறையுண்டான். எனினும் சீக்கியர் சலியாமல் மீண்டும் கறுவி எழுந்து, குஜராத் எனுமிடத்தில் (1849-ஆல்) ஆங்கிலேயருடன் பொருதனர். அங்கும் சீக்கியருக்குத் தோல்வியே கிட்டிற்று. உடனே சமாதானஞ் செய்துகொள்ள அவர்கள் இசைந்தனர். அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த டல்ஹௌஸி பிரபு, திலீப சிம்மனுக்கு ஏராளமான பணங் கொடுக்கவே அரசுரிமையைத் துறந்து அவன் இங்கிலாந்து சென்றான். பஞ்சாபை ஆங்கில அரசுடன் அவர் சேர்த்துக்கொண்டார். இரண்டாவது சீக்க யுத்தம் அவ்விதம் முடிந்தது.

புதிதாகக் கிடைத்த பஞ்சாபின் ஆட்சியை நடத்திவர டல்ஹௌஸி பிரபு ஓர் ஏற்பாடு செய்தார். அதன்படி ஆட்சியை நடத்திவர ஹென்றி லாரன்ஸ், ஜான் லாரன்ஸ், ஜார்ஜ் லாரன்ஸ் எனும் சோதரர் மூவரடங்கிய ஒருசபை அமைக்கப்பட்டது. சீக்கிய சேனையும் தட்சணமே அடியோடு கலைக்கப்பட்டது. அம்மூவரும் பஞ்சாபை வெகு திறமையுடன் பரிபாலித்து வந்தனர். ஹென்றி லாரன்ஸ் என்பவர் மகா தந்திரசாலி; மிக்க மதியூகியுமாம். ஆதலினால், சீக்கிய வீரர்களை அவர் அன்புடன்

அணைத்து ஆதரித்துத் தம் வசஞ் செய்து கொண் டார்; அவர்களுக்குப் பல நன்மைகளும் புரிந்தார். ஜான் லாரன்ஸோ பஞ்சாபைப் பல ஜில்லாக்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு கலெக்டரை நிய மித்து, நாட்டின் வரவுசெலவை நன்கு கவனித்து வந்தார்; நிலவரியைச் சீராக்கினர்; நியாய விசாரணை சபைகளைச் செம்மைப்படுத்தினர். நாளடைவில் சீக்கிய மக்கள் வேளாண்மையில் முனைந்தனர்.

சிறிது காலமானவுடனே டல்ஹௌஸி பிரபு 1852-ஆம் அச்சபையைக் கலைத்துவிட்டு, ஜான் லாரன்ஸையே பஞ்சாபின் அதிபதி யாக்கினர். லாரன்ஸ் சீக்கியரை மேலும் தட்டிக்கொடுத்து, ஆங்கில ராணுவ சேவையில் அவர்களைச் சேர்த்துக் கொண்டார். பிடியுண்ட சிங்கம் தன் எஜமான னுக்கு அடங்கி, அவன் சொன்னபடி நடந்து வரு வதேபோல், முன்னம் பரம வைரிகளாக விளங்கிய சீக்கியர் இப்போது தாஸர்களாகத் துலங்கினர்.

ஆங்கில அரசுடன் பஞ்சாப் சேர்ந்துவிட்ட தனால், அதற்கு மேற்கேயுள்ள எல்லைப்புறத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆங்கிலேயரின்மீது சுமந் தது. லாரன்ஸ் அத்துறையில் அதிக கவனம் செலுத்தினர்; சிறிதும் மனத்தாங்கல் தோன்றா வண்ணம் சீக்கியரை வசமாக்கிக் கொள்வதையே தம் வாழ்க்கையின் நோக்கமாகவும் கொண்டார். ஆதலினால்தான், சிப்பாய்க் கலகத்தில் சீக்கியர் சேராமல் விலகிநின்று, ஆங்கிலேயருக்கு உதவியும் புரியலாயினர்.

———

12. டல்ஹௌஸி பிரபு

இங்கே டல்ஹௌஸி பிரபு 1848 முதல் 1856 வரையில் கவர்னர் ஜெனரலாக இருந்தார். கிளைவ், வெல்லஸ்லி, ஹேஸ்டிங்ஸ், இவர்களைவிட, டல்ஹௌஸியே ஆங்கில ஆதிக்கத்தை இந்தியாவிலே வானுற வளர்த்தவர். அவர் காலத்தில் இந்தியாவின் பற்பல பிரதேசங்கள் ஆங்கிலேயரின் வசமாயின. முதன் முதலாக அவர் சீக்கியருடன் போர் புரிய நேர்ந்தது. அப்பொழுது பஞ்சாப் சேர்ந்தது. அதனை முன்பே சொல்லியுள்ளோம்.

டல்ஹௌஸி

இரண்டாவது பர்மிய யுத்தம்: இவர் காலத்தில் இரண்டாவது பர்மிய யுத்தம் மூண்டது. பர்மிய அரசன் முன்னம் கொண்ட உடன்படிக்கையின்படி நடக்கத் தவறிவிட்டான். இரங்கூன் நகரில் வியாபாரம் செய்துவந்த ஆங்கிலேயருக்குப் பல தொல்லைகள் இழைக்கப்பட்டன. ஆவா நகரிலே பர்மிய அரசவையிலிருந்த ஆங்கில ஸ்தானீகன் அவமானத்திற்கு ஆளாகி, அந்நகரை விட்டோட நேர்ந்தது. இந்தியா கவர்ன்மெண்டார் அதற்கு அம் மன்னவனை முகாந்தரம் கேட்டனுப்பினர். பர்மிய அரசனோ அதற்கு அவமதிப்பான பதில்

விடுத்தான். உடனே டல்ஹௌஸி பிரபு ஒரு பெருஞ் சேனையை பர்மாவின்மீது ஏவினார்.

ஆங்கிலச் சேனை இரங்கூன் சென்று, பர்மியரை முறியடித்து, அந்நகரையும் பிடித்துக்கொண்டது பின்பு பஸ்ஸீன், புரோம், பெகு முதலிய இடங்களையும் ஆங்கில வீரர் வசஞ்செய்துகொண்டனர். முடிவில் பர்மிய வேந்தன் சமாதானத்துக்கு வந்தான். அப்போது தென் பர்மா முழுதும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. உடனே அங்கு ஆங்கில ஆட்சி ஏற்படலாயிற்று.

வார்சு இல்லா அரசுகள்: தனி மனிதனும் சரி, மன்னவரும் சரி பிள்ளை இல்லாதுபோனால், சுவீகாரம் செய்துகொள்ளுதல் நமது தேசத்தின் புராதனமான தர்மம்; சாஸ்திர விதியுமாம். ஆயினும் அதற்கு ஒப்பாமல், வார்சு இல்லாத சுதேச அரசரின் நாடுகளை ஆங்கில அரசுடன் சேர்த்துக்கொள்வதென்று டல்ஹௌஸி பிரபு தீர்மானித்தார். சுதேச அரசரின் ஆட்சியைக் காட்டிலும், ஆங்கில ஆட்சியில் ஜனங்களுக்கு நன்மை பல கிட்டும் என்பதே அவர் கொண்ட கொள்கையாம்.

மகாராஷ்டிர அரசனொருவன் சதாரா நகரிலிருந்து ஆண்டு வந்தானல்லவா? 1848 ஆ அந்த அரசன் புத்திர சந்ததி யில்லாமையால், ஒருவனை சுவீகாரம் செய்துகொண்டான். அதனை டல்ஹௌஸி பிரபு ஒப்பாமல், அவ்வரசன் இறந்ததும், சதாரா ராஜ்யத்தை ஆங்கில அரசுடன் சேர்த்துக்கொண்டார். அவ்விதமே, நாகபுரி, ஜான்ஸி, ஸம்பல்புரி முதலிய பல நாடுகள் ஆங்கில அரசுடன் சேர்ந்தன. 1853 ஆ பேஷ்வா பாஜி ராவ் தான் இறக்

கும் சமயம் தன் தோழன் புதல்வனை நானு சாகிப் என்பவனை மைந்தனாகக் கொண்டான். அதுவரையில் அவனுக்கு ஆண்டுதோறும் எட்டு லட்சம் ரூபா ஆங்கிலேயர் கொடுத்து வந்தனர். பேஷ்வா இறந்தவுடனே, அம்மைந்தனுக்குப் பணங் கொடாமல் நிறுத்திவிட்டார் டல்ஹௌஸி பிரபு.

அயோத்தி: அயோத்தி நவாப் திறமை யற்றவனாகவே இருந்துவந்தான் என்பர். முன்னிருந்த கவர்னர் ஜெனரல்கள் அவனுக்கு அது விஷயமாக எச்சரிக்கை செய்துவந்தார்கள். அதை அவன் மதியாமல், கண்டபடி செலவு செய்து, பெரிய கடனாளியாகி, மக்களைத் துன்புறுத்தி வந்தனன். முடிவில் அந்த நவாபை டல்ஹௌஸி பிரபு நீக்கிவிட, அயோத்தியும் ஆங்கில அரசுடன் ஐக்கியமாகிவிட்டது. இங்ஙனம் டல்ஹௌஸியின் காலத்திலே, ஆங்கில இந்தியா மிகவும் பரந்ததாகி விட்டது. அதன்மேல், வங்காளத்துக்குத் தனியே லெப்டினண்டு கவர்னரொருவன் நியமனமானன்.

சீர்திருத்தங்கள்:—டல்ஹௌஸி பிரபுவின் காலத்தில்தான் முதன்முதல் இந்தியாவிலே ரயில் பாதை ஏற்பட்டது. அப்போது இருபது மைல் தூரமே போட்டனர். தந்தி ஆபீசும் ஏற்பட்டது. அவர் காலத்துக்கு முந்தி மனிதர்களே தபால்களைச் சுமந்து சென்றனர். அதற்கு ஆகும் செலவோ மிக அதிகமாக இருந்தது. இங்கிலையில் அரையணு தபால் முத்திரைகள் அவர் காலத்தில் உண்டாயின. ரஸ்தாக்கள் போடுதல், பயிர்களுக்கு நீர்பாய்ச்சல், வாய்க்கால் வெட்டுதல், ஏரிகள் கட்டுதல், அணைக்கட்டுக்கள் அமைத்தல் முதலிய பற்பல

காரியங்களைக் கவனித்து வர, மராமத்து இலாகா ஏற்பட்டது ; கங்கைக் கால்வாய் வெட்ட ஹார்டிஞ்சு பிரபு வகைதேடி வைக்க, டல்ஹௌஸியின் காலத்தில் அது வெட்டி முடிந்தது ; ஜில்லாக்கள் தோறும் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன ; கலா சாலைகளும் ஆங்காங்கே தோன்றின ; அதன்மேல் வித்தியா இலாகா ஒன்றும் உண்டாயிற்று ; சர்வகலாசாலைகளைக் காணவும் முயற்சிகள் நடக்கலாயின.

1833ஆு உரிமைச் சாஸனம் லண்டனிலுள்ள பார்லிமெண்டு சபையினால் பரிசீலனை செய்யப்பட்டதல்லவா ? 1853 இல் அவ்விதம் அது பரிசீலனை செய்யப்படவில்லை. பழைய சாஸனமே அமுலில் இருக்கலாமென ஏற்பாடாயிற்று. அப்போது இந்திய ஸிவில் சர்விஸ் எனும் உத்தியோகத்தில் இந்தியரையும் சேர்த்துக் கொள்வதென்றும், அதற்காக அவர்கள் பரீட்சை கொடுக்கவேண்டு மென்றும், தீர்மானமாயிற்று.

13. சிப்பாய்க் கலகம்

அவ்விதமெல்லாம் திருத்தங்கள் செய்து, டல்ஹௌஸி போன பின்பு, கானிங் பிரபு கவர்னர் ஜெனரலாக வந்தார். இந்தியாவின் நல பலங்களைப் பெருக்க வேண்டுமென்பதே அவரது முக்கிய நோக்கம். அதற்குரிய வகை துறைகளை அவர் ஆராய்ந்து வருகையில், தேசத்திலே பெருங் கலகமொன்று திடீரென ஏற்பட்டது. அது சிப்பாய்க் கலகம் எனப்படும்.

காரணங்கள்: (1) சந்ததி இல்லை யென்று சொல்லி, சமஸ்தானங்களில் பலவற்றை டல்ஹௌஸி பிரபு ஆங்கில அரசுடன் சேர்த்துக் கொண்டா



1857-ல் இந்தியா

ரல்லவா? அதுகண்டு, ராஜ வமிசத்தார் பலரும் மனங் கொதித்துக் கறுவி நின்றனர்; அவ்வரசு

களின் குடிமக்களும் மனம் புழுங்கிக் காலங் கருதி யிருந்தனர். தங்கள் நாடுகளுக்கும் அக்கதி என் றைக்கு நேருமோவென இதர சுதேச அரசர்களும் பீதிகொண்டு கிடந்தார்கள்.

(2) அயோத்தி நவாபைத் தள்ளிவிட்டு, அந் நாட்டையும் சேர்த்துக் கொண்டவுடன், பரம்பரை யாக அங்கே சேனையில் சேவகம் புரிந்து வந்த பல் லாயிரக் கணக்கான போர்க்குல மக்களுக்கு வேலை இல்லாது போயிற்று. பிழைப்புக்கு வகையில்லாமல் அன்னவர் மனம் மறுகி நின்றனர்.

(3) டில்லி பாதுஷாவான பகதூர் ஷாவைப் பரம்பரையான டில்லிமாநகர் அரண்மனையிலிருந்து போகச் சொல்லி, மற்றோரிடத்திலே சாமானிய மனிதனைப் போல் வசித்து வரச் செய்தனர். மூந் நூற்றைம்பது வருஷகாலம் மேன்மையுடனிருந்த மொகலாய ராஜ பரம்பரைக்கு இத்தகைய அவதி யும் அவமதிப்பும் நேர்ந்தமை கண்டு டில்லி வாசி களிலே பலரும் மிக்க ஆத்திரமடைந்தனர்.

(4) கடைசி பேஷ்வாவுக்கு ஆங்கிலேயர் ஆண்டுதோறும் திரவிய சகாயம் செய்து வந்திருக்க, அவன் சுவீகார புத்திரனான நானா சாகிபுக்கு அவ் விதம் பணங்கொடுத்து ஆதரிக்க ஆங்கிலேயர் மறுத்தனர். அதனால் நானா சாகிப் கோபாவேசங் கொண்டு, ஆங்கிலேயரைப் பழிவாங்கப் பெருஞ் சூழ்ச்சி செய்து வந்தான்.

(5) ஜான்ஸி நாட்டின் ராணியான இலட்சுமீ பாய் என்பாள் தன் புருஷன் உயிருடனிருக்கும் போதே சுவீகாரம் செய்து கொள்ள விரும்பியும், அதற்கு ஆங்கிலேயர் சம்மதிக்கவில்லை. ஆதலினால்

அவளும் வஞ்சம் தீர்க்கக் கருதி அச் சூழ்ச்சியில் கலந்து கொண்டனள். இவ்விதம் இந்தியாவின் மேற்கே பஞ்சாபிலிருந்து கிழக்கே வங்காளம் வரையில், ஜனங்களுக்குள்ளே கொதிப்பும் ஆத்திரமும் பழிவாங்கும் பான்மையும் பொங்கி வழிந்தன.

(6) கைம்பெண்கள் கடிமணங் கொள்ளக் கூடாதென நெடுநாளாகத் தடை இருந்து வர, அத் தடைகளை நீக்கியும், ஒருவன் பல மனைவியரைக் கொள்வதில் தடைகள் செய்தும், உடன்கட்டை ஏறக்கூடாதென்று கூறியும், பற்பல சட்ட திட்டங்களும் ஏற்பட்டிருந்தன. மேலும் ஒப்பந்தத்துக்கு மாருகக் கடல் கடந்து சென்றும் போர்வீரர் சேவகம் செய்ய வேண்டுமென்று ராணுவச் சட்டம் பிறந்தது. தவிர ஆங்கிலேயரில் சிலரோ தம்மிடம் வேலை பார்த்து வந்த இந்தியரைக் கிறிஸ்தவ மதத்தில் சேருமாறு தூண்டி வந்தனர். அல்லாமலும் பன்றிக் கொழுப்பும் பசுவின் கொழுப்பும் பூசியிருந்த புதிய தோட்டாக்களைக் கையாளுகையில், இந்திய வீரர் பல்லால் கடித்திழுத்தே அவற்றின் மூடியை நீக்கநேரும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கையில் இந்தியரின் ஜாதி மத விஷயங்களிலே ஆங்கில அரசாங்கம் தலையிடுவதாகப் பலரும் திகிலடைந்தனர்.

(7) வரி வசூல் மிகவும் கண்டிதமாக இருந்ததனால், அதனைக் கொடுக்க வகை இல்லாமல், பரம்பரையான பெருமக்களில் சிலர் தங்களது சொத்தை இழந்து தவித்தனர். மானியங்களும் உரிமைகளும் பறிக்கப் படவே, மேலும் பலர் மனப்புண் கொண்டார்கள்.

(8) ரயில் பாதையும் தந்திக் கம்பிகளும் போடுகையில் தேசத்தையே ஆங்கிலேயர் வளைத்துக் கட்டுவதாகப் பலருக்கும் ஒரு தப்பெண்ணம் உண்டாயிற்று.

(9) விரைவிலே எங்கும் புதிய ஆட்சி ஏற்பட்டு வருகையில் பரம்பரையாக இருந்துவந்த சலுகைகளும் சௌகரியங்களும் சுதந்திரமும் போய்விடவே பெரும்பாலார் அதுகண்டு துடித்தனர்.

இத்தகைய நிலைமையில் டில்லி, அயோத்தி, மகாராஷ்டிரம் இந்த இடங்களிலிருந்த ராஜகுடும்பத்தினர் தேசத்திலே ஆங்காங்குச் சென்று, சிப்பாய்களையும் மகாஜனங்களையும் கம்பனியாட்சிக்கு விரோதமாகத் தூண்டிவந்தார்கள்.

கலகத்தின் மூல புருஷர்களாக நானாசாகிப், ஜான்ஸி ராணி, பாதுஷா பகதூர்ஷா, தாந்தியா தோபி, முதலியவர்களையே சொல்லவேண்டும்.

மீரத் நகரில் கலக உதயம்: ஏககாலத்தில் தேசமெங்கும் கொந்தளிப்புத் தோன்றினால், கருதிய காரியம் கைகூடும் என்பதே கலகத் தலைவர்களின் கருத்தாம். அது கைகூடா வண்ணம், குறித்த தேதிக்கு முன்னதாகவே முதன் முதலில் மீரத் நகரிலே அமளி ஏற்படலாயிற்று. அந்நகரிலிருந்த சிப்பாய்களில் சிலர் புதிய தோட்டாக்களைத் தொடுவதில்லையென்று பிடிவாதம் செய்தனர். உடனே அவர்களில் சிலரை அதிகாரிகள் சிறைசெய்ய, ஆங்கிருந்த இந்திய வீரர் அனைவரும் கோபங்கொண்டு மேலதிகாரிகளைக் கொன்று, சிறைக் கதவுகளை உடைத்தெறிந்து, அப்பால் டில்லி சென்று, பகதூர்ஷாவைப் பட்டத்தில் இருத்தி, மொகலாய

ஆட்சியை மீண்டும் நிலைநாட்டி விட்டதாக விளம்பரம் பண்ணினர். பகதூர்ஷா பாதுஷாவாக ஆடம்பரத்துடன் அரியணையில் ஏறியவுடனே, முகம்மதியரிலே பலரும் அவனுக்குப் பக்க பலமாயினர். உடனே டில்லிமாநகரம் கலகத்துக்குத் தலைமை ஸ்தலமாயிற்று. ஐரோப்பியரில் ஆணும் பெண்ணுமாக அங்கே பலர் கொலையுண்டனர்.

நானா சாகிப் என்பான் கான்பூர் நகருக்கு அருகே ஓரிடத்தில் வசித்திருந்தான். அவன் சிப்பாய்களைத் திரட்டிக்கொண்டு, கான்பூரிலிருந்த ஐரோப்பியரைத் தாக்கலானான். அவர்கள் அஞ்சியழிந்து ஊரைவிட்டு ஓடிவிடுவதாகச் சொல்லி அபயம் வேண்டினர். அதன்மேல் அவர்களை ஒன்றும் செய்வதில்லையென அவன் வாக்களித்தான். உடனே ஐரோப்பியர் தம் குழந்தை குட்டிகளுடன் பிரயாண மாயினர். அப்போது சிப்பாய்களோ கோபவெறிகொண்டு, பலரையும் மாய்த்து எங்கும் அல்லோல கல்லோலம் கண்டனர்.

இலட்சுமணபுரி எனப்படும் லக்னோ நகரிலும் சிப்பாய்கள் கிளம்பி, ஆங்கிருந்த ஆங்கிலேயருக்கு அனர்த்தம் விளைத்தனர். ஜான்ஸி ராணி இலட்சுமீ பாய் தன் நாட்டிலிருந்த ஆங்கிலேயருக்கு முதலில் தஞ்சமளிப்பதாக உறுதிகூறினாள். அப்பாலோ அவளது போர்வீரர் பதைத்தெழுந்தனர். அன்னவரின் கையில் சிக்கிய ஆங்கிலேயர் படாதபாடு படநேர்ந்தது. பின்பு ஜான்ஸி ராஜ்யம் தனியரசாகிவிட்டதென அவள் அறிக்கை செய்து, ஆண்மை காட்டலானாள். அவ்விதம் இன்னும் பல இடங்களிலும் 1857 ஆம் மே, ஜூன், ஜூலை மாதங்களில்

திடீரென்று கலகங்கள் கிளம்பியதால், ஆரம்பத்தில் அதனை ஆங்கிலேயர் சமாளிக்க முடியவில்லை. பின்பு ஆங்கிலச் சேனைகள் சீறி யெழலாயின. ஹாவலக் என்னும் தளகர்த்தன் ஒரு பெரிய சேனையுடன், கான்பூர் நகரம் சென்று, நானு சாகிபை எதிர்த்தான். நானு சாகிப் உடனே ஓடி யொளிய, அதன்பின் அவன்கதி யாதென்று தெரியவே இல்லை. மற்றொரு சேனை டில்லிக்குச் சென்று, அங்கே இரவு பகல் ஓயாமல் ஒரு வாரம் சண்டை போட்டது. கடைசியில் ஆங்கிலேயருக்கு அந்நகரம் வசமாயிற்று. டில்லி பாதுஷாவை அவர்கள் சிறை செய்து, இரங்கூனுக்கு அனுப்பினர். அவனது புதல்வர் இருவர் கலக சமயத்திலே ஆங்கிலேயரின் குண்டுக்கு இரையாயினர்.

மற்றோர் ஆங்கிலச் சேனையோ ஜான்ஸி ராணியை எதிர்க்க, அவ்வரசி ஆணுடை தரித்து, அருஞ் சமர் புரிந்து, முடிவுவரையில் முதுகு கொட மனமில்லாமல் போர்முனையில் உயிர் துறந்தனள்.

லக்னோ நகரில் தாந்தியா தோபீ என்பான் கலகத்தின் தலைவனுகி, நெடுநாள் கொடும் போர் முறுக்கினன். ஆங்கிலேயர் பெருமுயற்சி செய்து கடைசியில் அவனைத் தூக்கில் போட்டனர்.

கலகம் முழுதும் அடங்குவதற்கு இரண்டு வருஷ காலம் பிடித்தது. அச்சமயத்திலே கலகக்காரரும் சரி, ஆங்கிலச் சேனைகளும் சரி, இழைத்த கொடுமைகளும், புரிந்த கொலைகளும் கணக்கில்லை.

அவ்விதம் இரு பக்கத்தாரும் கோபவெறி கொண்டு, குரூரமாக நடந்து வருகையில், ஆங்கிலேயரிடம் வேலை பார்த்துவந்த இந்தியரில் பலர்

எஜமான விசுவாசமும் கருணையுங் கொண்டு, தம் உயிரையும் பொருட்படுத்தாமல், ஆங்கில மாதரை யும் குழந்தைகளையும் ஒளித்துக் காத்து வந்தனர். இந்தியரிலும் வேறு சிலர் அவ்விதமே ஆங்கில மக் களைக் காத்தனர். அக்கொந்தளிப்பில் நிரபராதி யர் யாதொரு துன்பத்திற்கும் ஆளாகக் கூடா தென்று கானிங் பிரபு பெருங் கவலை கொண்டார். 'கருணை வாய்ந்த கானிங்' என்று முதலில் சிலர் வஞ்சப் புகழ்ச்சியாகப் பேசிய போதிலும், அது அப்பால் சிறப்புப் பெயராக முடிந்தது.

கலகத்தின் விளைவாக அன்றளவும் நடந்து வந்த கம்பனியாரின் ஆட்சி இங்கே ஒழிந்தது; இங்கிலாந்திலுள்ள ஆங்கில துரைத்தனத்தாரின் நேர்முகமான ஆட்சி ஏற்படலாயிற்று.

கலகம் குலைந்ததின் காரணம்: பிரமாதமாகக் கிளம்பிய சிப்பாய்க் கலகம் பின்னால் பெரிய ஜனக் கலகமாக மாறி, ஆங்கில ஆட்சியை அடியோடு ஒழித்திருக்கக் கூடும். ஆயினும் அங்ஙனமின்றி அது குலைந்து போனதற்குக் காரணங்கள்:—(1) ஆங்கிலச் சேனைகள் நான்கு திக்கிலிருந்தும் கிளம்பிச் சென்று வீரதீரங் காட்டிப் போர் புரிந் தன. அத்துடன் கானிங் பிரபுவும் தடுமாற்றங் கொள்ளாமல், கருணை காட்டிக் காரியம் நடத்த முயன்றார். (2) ஆங்காங்கே கலகத் தலைவர் களுக்கு இடையில் போக்குவரத்து இல்லாமல் போயிற்று. (3) சென்னை, பம்பாய், பஞ்சாப் இந்த மாகாணங்களில் கலகம் அவ்வளவாக உண் டாக வில்லை. (4) நிஜாம் அரசன், ராஜபுத்திர மன்னவர், சீக்கியர் முதலியோர் ஆங்கிலேயருக்

குப் பக்கபலமா யிருந்தனர். (5) இந்தியரிலும் பலர் பேருதவியாக இருந்து வந்தனர்.

---

14. மகாராணியின் மகா சாஸனம்

பிளாஸி சண்டையில் ராபர்ட் கிளைவ் ஜெயங்கொண்டு, 1757 ௵ ஆங்கில அரசு முளைக்க இங்கே விதை தூவினன். அப்பால், சிப்பாய்க் கலகம் தோன்று முன்னர், கம்பனியாட்சி ஒரு நூற்றுண்டுக்குள் ஒழிந்துவிடுமென்று சிலர் ஜோஸ்யம் சொல்லி வந்தனர். அவ்விதமே 1857-ம் ௵ கம்பனியாரின் ஆட்சி முடிந்து விட்டது.

கிளைவ் தூவிய விதை பயிராகிச் செழித்து வந்தது. அப்பால் 1774-ம் ஆண்டிலே 'ரெகுலேடிங் ஆக்ட்' எனும் சட்டம் ஏற்பட, அக் கம்பனியாரின் ஆட்சியில் ஆங்கில துரைத்தனத்தார் அப்போது ஓரளவு அதிகாரம் பெறலாயினர். பின்பு 1784-ம் ஆண்டில் 'பிட் இந்தியா சட்டம்' ஏற்படவே, கம்பனியின்மீது ஆங்கில துரைத்தனத்தின் அதிகாரம் இன்னும் பெருகலாயிற்று. இச்சட்டம் ஏற்பட்ட பின், இருபது வருஷத்துக்கு ஒரு தரம் கம்பனியின் வியாபார உரிமைச் சாஸனம் பரிசீலனை செய்யப்படுகையில், தங்கள் மேற்பார்வை அதிகாரத்தை அத் துரைத்தனத்தார் வளர்த்துக் கொண்டே வந்தனர். 1857 ௵ வர்த்தகரின் ஆட்சி அடியோடு போய்விட்டது. 1858-ம் ௵ 'இந்தியா சட்டம்' உண்டாக, இந்தியாவிலே இங்கிலாந்தின் நேரான ஆட்சி உதயமாயிற்று.

அப்போது விக்டோரியா மகாராணி இங்கிலாந்தை ஆண்டுவந்தார். இந்தியரின் மனப்புண்ணை மாற்றி, ஆங்கிலேயரையும் இந்தியரையும் நேசத்தினுல் பிணைக்க வேண்டுமென்று அவருக்கு விருப்பமும் கவலையும் உதித்தன. ஆனதுபற்றி, இந்திய மன்னவருக்கும் மகா ஜனங்களுக்கும் மகத்தான விளம்பரமொன்று அவர் விடுத்தார்.

விக்டோரியா மகா ராணி

அதன் சாரம்: (1) இனிமேல் இந்தியாவில் நாடு பிடிக்க ஆங்கிலேயருக்கு நாட்டமில்லை. (2) இந்திய மன்னர்களது உரிமை, மதிப்பு, அந்தஸ்து இவற்றிற்கு ஒரு குறையும் நேராது. (3) தேச மக்களின் மத விஷயத்தில் தலையிட ஆங்கிலேயருக்கு உத்தேசமே இல்லை. (4) தகுதியையும் திறமையையும் மதித்து, ஜாதி மத வர்ண பேதமின்றி, அனைவருக்கும் அரசாங்கத்தில் எந்த உத்தியோகமும் கொடுக்கப்படும். (5) தேசக் கைத்தொழில்களுக்கு ஆதரவளித்துப் பொதுநல வேலைகளை விருத்தி செய்து, மக்களின் நன்மைக்காகவே ஆங்கில அரசு நடந்துவரும். (6) தேசமக்க

ளின் க்ஷேமமே ஆங்கில அரசின் பலத்துக்கு அடிப் படை; அவர்களின் திருப்தியே அவ்வரசுக்குப் பாது காப்பாம்; அவர்களின் நன்றியே ஆங்கில அரசுக் குரிய வெகுமதி யாகும்.

கானிங் பிரபு 1858-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதி அலகாபாத் நகரிலே மன்னர் பலரையும் கூட்டி, தர்பார் நடத்தி, மகாராணியின் சாஸ னத்தை வாசித்து விளக்கினார்; சந்ததி யில்லாத அரசர் சுவீகாரம் கொள்ளலாமென்றும், சுதேச மன்னவரின் சுதந்திரத்தில் துரைத்தனத்தார் தலை யிடாரென்றும் வாக்குறுதி கொடுத்தார். மன்னர் அனைவரும் அதுகேட்டு மகிழ்ச்சி கொண்டனர். அப்போது, இதர தேசங்களுடன் சுதேசமன்னர் சம்பந்தம் கொள்வதாயின், ஆங்கில துரைத்தனத் தின் சம்மதிபெற வேண்டுமென்றும், மன்னரின் நாட்டிலே பெருங்கலகம் தோன்றினலன்றி ஆங்கில துரைத்தனத்தார் தலையிடாரென்றும், ஓர் ஒப்பந் தம் உண்டாயிற்று.

அதுமுதல் இந்தியாவின் கவர்னர் ஜெனரல், இங்கிலாந்து அரசரின் பிரதிநிதியாக இங்கிருந்து பரிபாலனம் பண்ணத் தொடங்கினார். அவருக்கு வைஸிராய் அதாவது ராஜப்பிரதிநிதி எனும் பெயரும் ஏற்பட்டது.

---

15. கானிங் பிரபு: அமைதியும் திருத்தங்களும்

சிப்பாய்க் கலக சமயத்திலும் அதற்குப் பின்னும் கானிங் பிரபு கவர்னர் ஜெனரலாக இருந் தார்; அக் கலகம் அடங்கியவுடனே ராஜப் பிரதி

நிதியாகவும் விளங்கினர். அவரும் அவருக்குப்பின் கவர்னர் ஜெனரல்களாக வந்தோரும் மாகாண கவர்னர்களின்மீது மேலதிகாரம் கொண்டனர்; அத்துடன், இங்கிலாந்து வேந்தரின் பெயராலேயே இங்கே அரசாட்சி நடத்தி வரலாயினர். கானிங் பிரபு ஆதிமுதல் இந்தியரிடம் கருணை காட்டியே நடந்து வந்தார்; பழி வாங்கும்பான்மை கூடாதெனவும், தனக்குக் கீழுள்ள யாவருக்கும் வற்புறுத்தி வந்தார். ஆதலினால் 'கருணை வாய்ந்த கானிங்' எனும் பெயர் பிரபலமாயிற்று.

கானிங் பிரபு

சிப்பாய்க் கலகம் குலைந்தபின்பு, சுமார் 30 வருஷ காலம் வரையில் தேசத்திலே கொந்தளிப்பு நேரவில்லை. அதனால் இந்தியரின் நன்மைக்கான காரியங்கள் பல, அரசாங்கம் செய்ய முடிந்தது. இங்கிலாந்தின் நேர்முகமான ஆட்சி தோன்றியதும், துரைத்தனத்தின் பான்மை வெகுவாக மாறிற்று. இங்கிலாந்திலுள்ள அரசாங்க மந்திரி யொருவர் அங்கே இந்தியாவின் மந்திரி என்று பெயர் பெற்று, ராஜப் பிரதிநிதியுடன் கலந்து, இந்தியாவின் பரிபாலனத்தை மேற்பார்த்து வரலானர். அந்த மந்திரிக்கு உதவியாக அங்கே ஓர் ஆலோசனை சபை ஏற்பட்டது. சில அம்சங்களில் இந்தியா மந்திரிக்கு உட்பட்டே ராஜப்

பிரதிநிதி நடந்து வருதல் வேண்டும்; தாம் செய்யும் காரியங்களையும் அவ்வப்போது அம்மந்திரிக்கு அறிவித்து வருதலும் கடமையாம்.

அவ்விதம் துரைத்தனப் பான்மை மாறியதும் கானிங் பிரபு நான்கு வருஷகாலம் மிக நேர்மையாகப் பரிபாலனம் பண்ணி வந்தார். அதுசமயம் (1861) இந்தியா சட்டசபையின் அங்கத்தினர் அதிகமாயினர். அதற்குமுன்னம், அரசாங்க உத்தியோகஸ்தர்களே அச்சபையில் அங்கம் வகித்தனர். அப்பாலோ, உத்தியோகஸ்தர் அல்லாதவர்களும் அச்சபையில் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர். இவர்களை அரசாங்கத்தாரே நியமித்தல் நியதியாம். சென்னை, பம்பாய் இந்த மாகாணங்களிலும் சட்டசபைகள் தோன்றின. இச்சபைகளிலும் இந்தியர் சிலர் இடம் பெற்றனர்.

அக்காலத்தில்தான், மதராஸ், பம்பாய், கல்கத்தா இந்த இடங்களில் ஹைகோர்ட்டு (உயர்தர நீதி மன்றம்) உண்டாயிற்று. கீழ்த்தர நீதி மன்றங்களின் தீர்ப்புக்களைக் கண்டு ஒப்பாதவர்கள் அந்த உயர் நீதி மன்றங்களுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். ஹைகோர்ட்டுகளின் தீர்ப்புக்களைக் கண்டும் ஒப்பாதவர்களோ லண்டன் மாநகரிலுள்ள பிரிவி கௌன்சில் எனும் நியாய விசாரணை சபைக்கு அப்பீல் செய்து கொள்ள உரிமை உண்டாயிற்று.

இனி, சென்னை, பம்பாய், கல்கத்தா இந்த மூன்று இடங்களிலும் அப்போது யூனிவர்சிடி எனும் சர்வ கலாசாலைகள் ஏற்பட்டன. ஸிவில், கிரிமினல் சட்டங்களும் பிறக்கவே, வழக்கு விசாரணையும் நியாய பரிபாலனமும் முற்போக்கு அடையலாயின.

சிப்பாய்க் கலகத்தின்போது அரசாங்கத்தை ஆதரித்து நின்ற இந்தியருக்குப் பட்டமும் பதவி களும் அப்பிரபு வழங்கினர்; இன்னும் பல வழி களிலும் கௌரவம் செய்தார்; புத்திரப் பேறு இல்லாதவர்கள் சுவீகாரம் கொள்ளவும் தாராள மாக அனுமதி யளித்தார்.

மேலே கண்டவாறெல்லாம் திருத்தங்கள் நடை பெற்று வர, நம் தேசத்திலே ஜனங்களுக்கு ஓரளவு நிம்மதி பிறந்தது. சேனையை அவர் திருத்தியமைத்து ஆங்கில ஸோல்ஜர்களை முன்னையிலும் அதிகமாக அமர்த்தினர். தேச பரிபாலன விஷயத்தில் அவருக்கு அவர் மனைவி உற்ற துணைவியாக இருந்து வந் தாள். அவர் 1862-இல் இங்கிலாந்து திரும்பினர்.

லாரன்ஸ் பிரபு: கானிங் பிரபுவுக்கு அடுத்த ராஜப்பிரதிநிதி லார்டு லாரன்ஸ். இவர் ஜான் லாரன்ஸ் எனும் பெயருடன் பஞ்சாபின் சர்வாதி காரியாக இருந்து, சீக்கியரை அணைத்து ஆதரித்த வர்; சிப்பாய்க் கலக சமயத்திலும் படைத் தலைமை பூண்டு பேருழியம் புரிந்தவர்.

இமயமலையின் மீது நேபாளத்தை யடுத்துள்ள பூடான் நாட்டுடன் இவர் சிறு சண்டை செய்ய நேர்ந்தது. சண்டையின் முடிவில் அந்நாட்டினுக் கும் ஆங்கில அரசுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்படவே, சமாதானம் நிலவியது. 1865ஆ ஒரிஸாவில் ஒரு பஞ்சம் தோன்ற, அதில் இலட்சக்கணக்கான மனி தர் மடிந்தனர். பின்னர் இப்பிரதேசத்தின் நீர்ப் பாசன வசதிகளை அதிகாரிகள் விருத்திசெய்தனர்.

இவர் காலத்தில்தான் ஆப்கானிஸ்தானத்திலே டோஸ்டு முகம்மதின் மைந்தரான ஷேர் அலி, அப்சல்

கான் என்ற இருவரும் அமீர் பதவிக்காகப் போர் புரிந்தனர். முதலில் ஷேர் அலி சிம்மாசனம் ஏறினன். பின்பு ஷேர் அலியைத் தள்ளிவிட்டு அரியணை ஏறினன் அப்சல் கான். அப்போது ஷேர் அலி இங்குள்ள ஆங்கில அரசின் உதவியை நாடினன் பட்டம்பெற. அப்போது அச்சண்டையில் கலந்துகொள்ள அதிகாரிகளுக்கு மனமில்லை.

அப்பால் ஷேர் அலி சும்மா இருக்கவில்லை; ஆப்கானிஸ்தானத்திலே துணை திரட்டி, அப்சல் கானை நீக்கிவிட்டு, 1868ஆ அரியணையில் அமர்ந்தான். ஆபத்தில் தனக்கு உதவிபுரியவில்லையே யென அவனுக்கு ஆங்கிலேயரின்மீது அதிருப்தி பிறந்து வளரலாயிற்று. இங்கே 1864 முதல் 1869 வரையில் வேலைபார்த்துவிட்டு, லாரன்ஸ் பிரபு சொந்த தேசம் சேர்ந்தார்.

---

16. மேயோ பிரபுவும் அரசிறைத் திருத்தமும்

பின்பு மேயோ பிரபு ராஜப் பிரதிநிதியாக வந்தார்; 1869 முதல் 1872 வரையில் இங்கிருந்து பல நன்மைகள் செய்து போனர். ஆப்கானிஸ்தான அமீரான ஷேர் அலி ஆங்கிலேயரின் மீது மனங் கசந்து நிற்பதை அவர் உணரலானர். உடனே பஞ்சாபிலுள்ள அம்பாலா நகரில் ஒரு தர்பார் நடத்தி, அதற்கு ஷேர் அலியை அழைத்து, ஆடம்பரமாக வரவேற்று உபசரித்தார்.

ருஷியாவுடன் நட்புக் கொள்ளாமல், ஆங்கில அரசின்மீது அன்புகாட்டவேண்டுமென்று, ஷேர்

அலியை அவர் கேட்டுக்கொண்டார். அந்த அமீரும் நல்லது என்ருன். ஆயினும், தனக்கு ஆண்டுதோறும் மிகுந்த பணம் கொடுத்துதவ வேண்டுமென அவன் கோரினன். வருஷந்தோறும் பணங் கொடுக்க அப் பிரபு விரும்பவில்லை; எனினும் ஒரு லட்சம் பவுன் இனமாகக் கொடுத்தார்; தவிர நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்கி, வேண்டும்போது ஆதரவு தருவதாகவும் வாக்களித்தார். எல்லைப்புறத்தை யடுத்துள்ள அயலரசுடன் சுமுகமாய் இருக்கவேண்டும் என்பதே அவர் கருத்து.

அரசிறை விஷயத்தில் அவர் செய்த திருத்தம் மிக்க விசேஷமாகும். நில வரி, உப்பு வரி என்று பல வரிகளை அரசாங்கத்துக்கு ஜனங்கள் செலுத்தி வந்தனர். அந்த வரிகளை வசூல் செய்வதில்தான் மாகாணங்களுக்குப் பொறுப்பு உண்டு. அவ்வரிகளை வசூல் செய்ததும் ராஜப்பிரதிநிதியிடம் கொடுத்துவிட வேண்டும். தமக்கு வேண்டிய செலவுகளுக்கோ இந்தியா கவர்ன்மெண்டினிடமிருந்து வாங்கிக் கொள்ளவேண்டும். வருஷா வருஷம் இவ்வளவு பணம் கிடைக்கும் என்று ஒரு திட்டம் இல்லை. கிடைத்துவந்த பணமும் செலவுக்குப் பற்றவில்லை. அதனல், செலவினங்களை முன்னதாக வரையறுத்துக் கொள்ளவும் வகையில்லை.

மன்ருடிக் கேட்கும் மாகாணங்களுக்கே அதிகப் பணம் கிடைக்கும். தவிர, வருஷா வருஷம் கிடைக்கும் பணத்தை அந்தந்த வருஷத்தில் செலவு செய்துவிட வேண்டும் என்று விதியுண்டு. இல்லையேல் மிச்சமிருக்கும் பணத்தைத் திரும்பக் கொடுத்துவிட நேரும். எனவே வகைதுறை இல்

ளாமல், எல்லாப் பணத்தையும் செலவு செய்யும் படியான அவசியம் ஏற்படலாயிற்று. சில மாகாணங்களோ அதிகப் பணம் பெற வேண்டித் தம் செலவை அதிகப்படுத்திக் கொண்டும் வந்தன. இதனல் மாகாண மக்கள் பலவாருன கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாயினர்.

இவற்றை எல்லாம் மேயோ பிரபு கவனித்தார். ஒவ்வொரு மாகாணத்துக்கும் வருஷா வருஷம் இவ்வளவு பணம் கிடைக்கும் என்று அவர் ஒரு திட்டம் செய்தார். அத் திட்டம் ஐந்து வருஷத்துக்கு ஒருமுறை பரிசீலனை செய்யப்படும் என்றும் விதித்தார். வரவு இவ்வளவு என்று தெரிந்ததும், அதற்கு ஏற்றவாறு மாகாணங்கள் தங்கள் செலவை வரையறுத்துக் கொண்டன. மிஞ்சும் பணத்தையும் எதிர்பாராத செலவுக்காகச் சேமித்து வைத்து வந்தன. இந்த ஏற்பாட்டினல், பொது நன்மைக்கான வேலைகள் செய்ய மாகாணங்களுக்குச் சௌகரியம் வாய்த்தது.

அவர் இன்னும் பல நற்காரியங்களும் செய்தார். உதாரணமாக நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினர்; தனியே விவசாய இலாகா ஒன்றை அமைத்தார். வங்காளத்தில் பல ஆரம்பப் பாடசாலைகளை ஏற்படுத்தினர்; ராஜகுமாரருக்காகத் தனியே ஒரு கலாசாலையையும் நிறுவினர். இவர் காலத்தில்தான், தேச ஜனத்தொகையைக் கணக்கிட்டறியும் வழக்கம் (Census) உதித்தது.

ஏழை மக்களிடம் அவருக்கு அபிமானம் மிகுதி. சிறையாளரின் துன்பங்களைப் போக்குவதிலும் அவருக்கு அக்கறை அதிகம். இத்துறையில்

பல திருத்தங்கள் அவர்காலத்தில் உண்டாயின. சிறைவாசிகளின் நிலையை நேரில் கண்டறிய அவர் அந்தமான் தீவுக்கு ஒரு சமயம் சென்றார். (பெருங் குற்றவாளிகளை அத்தீவினுக்கு அனுப்பிக் காவலில் போடுதல் முன்னம் வழக்கமாய் இருந்தது). அங்கே மூர்க்கனொருவன் அவரைக் கொன்றுபோட்டான்.

மேயோவுக்குப் பின்பு, ராஜப்பிரதிநிதியாக வந்தவர் நார்த்புரூக் பிரபு. 1872 முதல் 1876 வரையில் இவர் ஆட்சி நடத்தினர். அப்போது வங்காளத்திலே கொடும் பஞ்சமொன்று தோன்றியது. ஜனங்களிலே பலர் பசியால் வாடி இறந்துபோயினர். உடனே இவர் ஏராளமான பணத்தைச் செலவழித்து, அப்பஞ்சத்தின் கொடுமையை ஒருவாறு தீர்க்க முயன்றார்; உப்பு வரியைக் குறைத்து மக்களுக்கு நன்மை செய்தார்.

பரோடா சமஸ்தானத்தின் மன்னவன் கெயிக்வார் என்பவன் அங்கிருந்த ஆங்கில ஸ்தானீகருடன் பிணங்கி, அவரைக் கொல்ல எண்ணினன். அதனால் அவ்வரசனை அரியணையிலிருந்து நார்த்புரூக் பிரபு நீக்கினர்; உடனே சிம்மாசனத்தில் ஒரு பாலனைத் தூக்கிவைக்க நேர்ந்தது.

அவருக்குப்பின் லிட்டன் பிரபு (1876—1880) ராஜப் பிரதிநிதியாக வந்தார். வந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் டில்லிமாநகரிலே இவர் பெரிய தர்பார் ஒன்று கூட்டினர். சமஸ்தான மன்னர்கள் அனைவரும் அதற்கு அழைக்கப்பெற்றனர். அப்போது விக்டோரியா ராணி இந்தியாவின் சக்கரவர்த்தினி என்று இவர் விளம்பரம் செய்தார். வேந்தர் அதுகேட்டுக் காணிக்கை செலுத்தினர்.

இவர்காலத்திலே சென்னை மாகாணத்தில் ஒரு பஞ்சம் உண்டாயிற்று. அதனை தாதுவருஷப் பஞ்சம் என்பர். தென்னிந்தியாவிலே அந்நாளில் போக்கு வரவு சாதனங்கள் மிகவும் குறைவு. ஆதலின் பிற இடங்களிலிருந்து விரைவில் உணவுப்பொருள்களைத் தருவிக்க முடியவில்லை. அதனால் மக்கள் பெரிதும் பரிதபித்து, இலட்சக்கணக்கில் இறந்து போயினர். கால்நடைகளும் ஆயிரக்கணக்கில் மாளலாயின.

---

17. இரண்டாவது ஆப்கன் யுத்தம் (1878—1881)

லிட்டன் பிரபுவின் காலத்தில் ஐரோப்பாவிலே ருஷியா தேசம் ஒரு பெரிய வல்லரசு. பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய ஆசியா நாடுகளில் செல்வாக்குப்பெற அது முயன்று வந்தது. அதனால், பிரிட்டிஷ் மகுடத்தின் மாமணிபோன்ற இந்தியாவுக்கு ஆபத்து நேருமோ என்று ஆங்கிலேயர் கவலை கொண்டனர். ஆதலின் லிட்டன் பிரபு வடமேற்கிலே நம் தேசத்தை யடுத்துள்ள பெலுசிஸ்தான் நாட்டினுடன் நேசம் கொள்ள ஒரு தூதரை அனுப்பி வழி தேடினர்; பகைவர் எவரும் வந்து தாக்கா வண்ணம் பெலுசிஸ்தானத்தைப் பாதுகாப்பதாகவும் வாக்களித்தார். அதன்மேல் அந்நாடு ஆங்கிலேயருடன் நட்புரிமை கொண்டது; மேலும் தனக்குச் சொந்தமான குவெட்டா நகரையும் ஆங்கிலேயருக்குக் கொடுத் துதவிற்று. போலன் கணவாய்க்கு அருகேயுள்ள அந்நகரை ஆங்கிலேயர் பல வகையிலும் பலப்படுத்திக் காவல்செய்யலாயினர்.

பின், ஆப்கானிஸ்தான அமீரிடமும் அவ்வி தம் நேசப் பான்மை பெறவேண்டி, லிட்டன் பிரபு ஒரு தூதரை அங்கு அனுப்பினர். அப்போது அமீ ரின் சபையில் ருஷியாவின் தூதர் ஆடம்பரமாக வீற்றிருந்தார்; மிக்க மரியாதையும் பெற்ருர். ஆங்கி லத் தூதரை அந்த அமீர் வரவேற்காமல், அசட் டையே செய்தான். அதுகண்டு லிட்டன் பிரபு வுக்குக் கோபம் பிறந்தது. இரண்டாவது ஆப்கன் யுத்தத்துக்கு இதுவே காரணம்.

ஆங்கிலப் படைகள் உடனே திரண்டு கைபர், போலன் கணவாய்களின் வழியே காபூல் நகரை நோக்கிச் சென்றன. ஆப்கன் அமீரான ஷேர் அலி அதுகேட்டு, அஞ்சி ஓடிவிட்டான். ஆங்கில வீரரோ ஜலாலபாத், காண்டகார், காபூல் முதலிய இடங்களைப் பிடித்துக் கொண்டனர். இதற்குள் ஷேர் அலி இறந்துபோனன். அவன் மைந்தன் யாகூப் கான் 1879-ல் கண்டமக் என்னும் இடத்தில் ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான்: ஆப்கானிஸ்தானத்துக்கும் இந்தி யாவுக்கும் இடையேயுள்ள கைபர் கணவாய், குர்ரம் பள்ளத்தாக்கு இரண்டையும் அவன் ஆங்கிலேய ருக்குக் கொடுத்தான்; வேறு எந்த ஐரோப்பிய தேசத்தாருடனும் நேசங் கொள்ளுவதில்லை என்று உறுதி கூறினன்; தனது சபையில் ஆங்கில ஸ்தானிகனை அமர்த்திக்கொள்ளவும் இசைந்தான்.

சிறிது காலம் ஆனபின், தங்கள் தலைநகரில் ஆங்கில ஸ்தானீகன் இருப்பதைக் கண்டு ஆப்கானி யர் வெறுப்புக் கொண்டனர்; ஆங்கிலேயருக்கு அடங்கி வாழுவதா என்றும் ஆர்த்தெழுந்தனர்.

அப்போது ஆங்கில ஸ்தானீகன் கொலையுண்டான். மூன்றுவது ஆப்கன் யுத்தத்துக்கு இதுவே காரணம்.

ஆப்கன் யுத்த விஷயமாக லிட்டன் பிரபுவின் மீது இங்கிலாந்தின் துரைத்தனத்தார் அதிருப்தி யடைந்தனர். அதன்மேல் அவர் தமது வேலையை விட்டு விலகிக் கொண்டார். அப்போது ரிப்பன் பிரபு ராஜப் பிரதிநிதியாக நியமனம் ஆனர்.

ஆங்கிலச் சேனை சீறி ஆப்கானிஸ்தானத்தில் புகவே காபூல் நகரம் ஆங்கிலேயரின் வசமாயிற்று. யாகூப் கானும் சிறையாகி இந்தியாவுக்கு அனுப்பப் பட்டான். ரிப்பன் சமாதானப் பிரியர். ஆதலின் இவர் 1880-ல் டோஸ்டு முகம்மதின் பேரனை அப்துர் ரஹிமான் என்பவனை அமீராக்கி அவனுடன் ஓர் உடன்பாடு கொண்டார்; அதன்படி அமீருக்கு ஆண்டுதோறும் ஒரு பெருந்தொகை கொடுத்து வரவும் ஒப்பினர்; ஆபத்தில் அவனுக்கு உதவி செய்யவும் சம்மதித்தார். புதிய அமீரான ரஹிமான் தான் இறந்துபோகும் வரையில் (1901) ஆங்கிலேய ருடன் தோழமையே பூண்டு நின்ருன்.

ரஹிமானுக்குப் பின் அவன் மைந்தன் ஹபி புல்லா அமீர் ஆனன். இவனும் ஆங்கிலேயருடன் நட்புரிமை பாராட்டி நடந்து வந்தான். அப்பால் 1919 ல் அமனுல்லா கான் அமீர் ஆயினன். அப்போது ஐரோப்பிய மகா யுத்தம் நின்ற சமயம். ஆங்கி லேயர் களைத்துப் போயிருப்பர் என்று கருதியே அவன் போருக்கு எழுந்தான். எனினும் ஆங்கி லேயர் சிறிதும் தாமதியாமல் படைகளைத் திரட்டி இரணகளத்தில் குதித்தனர். சண்டையின் மிடுக் கினைக் கண்டு அமனுல்லா கான் சமாதானத்திற்கு

வந்தான். அதன் முடிவாக, அமீருக்கு முன்னம் ஆண்டுதோறும் கொடுத்துவந்த தொகையை ஆங்கிலேயர் நிறுத்திவிட்டனர்.

அமனுல்லா கான் தனது நாட்டில் புதிய சீர்திருத்தங்கள் செய்ய முயன்றான்; மேனாட்டு நாகரிக முறைகளைப் புகுத்தவும் கருதினான். அது கண்டு ஆப்கானியர் கொதித்தெழுந்தனர். அதனால் அவன் பட்டமிழந்து, நாட்டைத் துறந்து ஐரோப்பாவுக்கு ஓடிப்போக நேர்ந்தது. பின்பு நாதர் ஷா என்பவன் அமீரானான். இவனோ சிறிது நாளில் கொலையுண்டு போனான். தற்சமயம் இவன் மைந்தனே ஆப்கன் அமீராக இருப்பவன். இந்த அமீர் ஆங்கிலேயரின் நட்புக்குப் பாத்திரமானான்.

வடமேற்கு எல்லைப்புறத்திலுள்ள கைபர் கணவாய், குர்ரம் பள்ளத்தாக்கு, குவெட்டா நகரம் இவை ஆங்கிலேயருக்குச் சொந்தமாய் உள்ளன. பெலுசிஸ்தானத்திலுள்ள கீலட் என்னும் இடத்தில் கான் என்று பட்டம் சூடி, ஆட்சி நடத்தி வருகிற முகம்மதியத் தலைவர் ஆங்கிலேயருக்கு அடங்கியவர். எனவே வடமேற்கெல்லை வழியே பகைவர் வருவரென ஆங்கிலேயர் அஞ்சுவதற்கில்லை.

18. ரிப்பன் பிரபுவும் ஸ்தல சுயஆட்சியும் (1880—1884)

கடந்த மூவாயிரம் ஆண்டுகளுக்குள் நமது தேசத்தில் எத்தனையோ வல்லரசுகள் தோன்றி மறைந்தன; எத்தனையோ அன்னியரும் படைகொண்டு வந்து பராக்கிரமம் காட்டிப் போயினர் ஆயினும் ஆதிமுதல் சமீபகாலம் வரையில், கிராமப்

பஞ்சாயத்து சபைகள் என்ன, நகர சபைகள் என்ன, இவை அழியாமல் நின்று ஸ்தல பரிபாலனத்தை நன்கு நடத்தி வந்துள.

சந்திரகுப்தன் காலத்திலே பாடலிபுர நகரில் அதி அற்புதமான நகர சபை இருந்து வந்தது பிரசித்தம். தென்னாட்டிலே தமிழரசரின் காலத்தில் கிராம சபைகள் சிறப்பாக இருந்து வந்தன. கிராமத்தைப் பற்றிய எல்லாக் காரியங்களையும் அச் சபைகளே கவனித்து வரும். அச் சபைக்குரிய அங்கத்தினர்கள், குறிப்பிட்ட காலத்துக்கு ஒருதரம் மகா ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கான சட்ட திட்டங்களும் நெறி முறைகளும் அப்போது மிக நேர்மையாக இருக்கலாயின.

ஆயினும் இத்தேசத்தில் கம்பனியாரின் ஆட்சி ஏற்பட்டது முதல், அச் சபைகள் அழிந்துபோகத் தலைப்பட்டன. இங்கே 1880 முதல் 1884 வரையில் ராஜப் பிரதிநிதியாக இருந்த ரிப்பன் பிரபு, 'அச் சபைகளைப் புதுப்பிக்க வேண்டும், ஸ்தல ஆட்சியில் மக்களுக்குப் பயிற்சி ஊட்டவேண்டும், அவ்விதம் செய்தால் மக்களுக்கு நன்மை நிரம்ப உண்டு, அரசாங்கத்துக்கும் நலமாயிருக்கும்,' என்று கருதினர்; உடனே ஸ்தல சுய ஆட்சி சபைகளின் சட்டம் என்று ஒரு சட்டம் செய்தார்.

ரிப்பன் பிரபு

அதன்படி, ஜில்லாக்கள், தாலூக்காக்கள், கிராமங்கள், ஊர்கள் இவற்றில் ஸ்தல சுய ஆட்சி சபைகள் ஏற்பட்டன. ஆங்காங்கே பாதைகள் போடுதல், அவற்றைப் பழுது பார்த்தல், கல்விச்சாலைகள் வைத்தல், வைத்திய சாலைகள் அமைத்தல் முதலிய பொது நன்மைக்கான பல காரியங்களை அவை செய்துவரத் தலைப்பட்டன. பெரிய நகரங்களில் முனிஸிபாலிட்டி, கார்ப்பொரேஷன் என்னும் பொது ஜன சபைகளும் உண்டாயின. இவை, சுகாதார ஏற்பாடுகளென்ன, தெருக்களில் விளக்குப் போடுதலென்ன, கல்வியைப் பரப்புதலென்ன, முதலிய காரியங்களைச் செய்து வரலாயின. தாலூக்கா போர்டு என்னும் சபை சிறிதுகாலத்திற்கு முன் எடுபட்டுப் போயிற்று. என்றாலும் இதர சபைகள் ஆங்காங்கே ஜனப் பிரதிநிதிகளின் உழைப்பினால் நன்கு நடைபெற்று நலம் புரிந்து வருகின்றன.

அத்தகைய சபைகளுக்கு உரிய அங்கத்தினர்களை யார் யார் தேர்ந்தெடுப்பது, எவ்விதம் தேர்ந்தெடுப்பது, யார் யார் அங்கத்தினராக இருப்பது, அவர்கள் எவ்வாறு நடந்துகொள்வது என்பதற்கும் நாளடைவில் விதிமுறைகள் எழுந்தன. அச்சபைகள் சரிவர நடைபெறின், பொதுமக்கள் நல்லபலன் அடையமுடியும். இதற்கு அடிகோலிய பெருமை ரிப்பன் பிரபுவையே சாரும். இவருடைய பரந்த நோக்கையும், விரிந்த அன்பையும் நம்மவர் மதித்து இவரை அப்பன் என்று சொல்லுவதுண்டு. இதற்கு அடையாளமாக நம் சென்னை நகரிலே இவருக்குச் சிலையொன்று அடித்து வைத்துளர். சென்னைக் கார்ப்பொரேஷன் மாளிகையும் ரிப்பன் மாளிகை

எனப்படும். ரிப்பன் அடிப்படை போட, நாளடை வில் அச் சபைகள் எங்கும் விரிந்து பரந்துள; அவற்றின் உரிமை, பொறுப்பு இவையும் வளர்ந்து வந்துள. அவற்றின் மேலதிகாரம் மட்டும் அரசாங் கத்தின் கையிலுள்ளது.

மற்ெறாரு திருத்தமும் செய்ய ரிப்பன் பிரபு கருதினர். ஆங்கிலேயரின்மீது கேஸ் ஏற்படின், ஆங்கில நீதிபதிதான் விசாரிக்க வேண்டுமென்பது விதி. இந்தியரின்மீது கேஸ் ஏற்படின் யாரும் விசாரிக்கலாம். அவ்விதம் ஆங்கிலேயருக்கும் இந்திய ருக்கும் ஏற்றத் தாழ்வு இருத்தலாகாதென்று கருதி, ஒரு சட்டஞ் செய்ய ரிப்பன் பிரபு கருதினர். அதற் காக ஒரு மசோதா தயாராயிற்று. அது இல்பர்ட் மசோதா எனப்படும். அதுகண்டு இங்குள்ள ஆங்கி லேயர் பிரமாதமாகக் கிளர்ச்சி செய்தனர். அதன் வேகத்தைத் தாங்கமுடியாமல், ரிப்பன் தத்தளிக்க நேர்ந்தது. முடிவில் அம்மசோதா சட்டமாகவில்லை.

தேசத்திலே கல்வியின் அபிவிருத்தியை நாடி ரிப்பன் பிரபு அநேக ஏற்பாடுகள் செய்தார்; அநீத மான வியாபார வரிகளில் சிலவற்றை நீக்கினர்: மைசூர் ராஜ்யத்தை அதன் அரசனிடம் திரும்பக் கொடுத்தார்; தேச பாஷைப் பத்திரிகைளுக்குத் தடங்கலாக லிட்டன் செய்துபோன சட்டத்தைப் போக்கினர். ராஜப்பிரதிநிதிகளிலே இவரைப் போல் நல்ல பேர் வாங்கியவர் அருமை.

டப்பரின் பிரபு: ரிப்பன் பிரபுவுக்குப் பின்பு டப்பரின் பிரபு (1884—1888) ராஜப்பிரதிநிதி ஆயினர். இவர் காலத்தில் வடபர்மாவும் ஆங்கிலேய ரின் வசமாகியது. அதன் விவரம்:—வட பர்மாவில்

தீபா என்னும் அரசன் மாண்டலே நகரிலிருந்து ஆண்டுவந்தான். அங்கே ஆங்கில வர்த்தகருக்குத் துன்பம் நேரிட்டது. அது தகாது, அனர்த்தம் விளையும் என்று டப்பரின் எச்சரிக்கை செய்தார். பர்மிய அரசன் அதற்கு இசையவில்லை. உடனே ஆங்கிலச் சேனை சென்று, மாண்டலே நகரைக் கைப் பற்றி அரசனையும் சிறை செய்தது. பின்பு வட பர்மாவும் ஆங்கிலேயரின் வசமாயிற்று.

டப்பரின் பிரபு காலத்தில் காங்கிரஸ் மகாசபை தோன்றியது. அதற்கு இவர் முதலில் ஆதர வாகவே இருந்தார். அம் மகாசபையின் முதல் கூட்டம் 1885-ஆம் பூனா நகரில் நடந்தது. ஆங்கில அரசில் உத்தியோகம் பார்த்து விலகிய ஹியூம் எனும் ஆங்கிலேயர் அச்சபையின் மூல புருஷரில் ஒருவர். ஐரோப்பியரே பார்த்துவரும் உத்தியோ கங்களில் இந்தியரை நியமிக்க வேண்டுமென்பதும், அரசியலில் இந்தியருக்குப் பங்குதர வேண்டுமென் பதும் ஆதியில் அம்மகாசபையின் நோக்கங்களாம்.

விக்டோரியா மகாராணி பட்டத்துக்கு வந்து ஐம்பது வருஷமானதும், 1887-ஆம் தேசமெங்கும் பொன் விழா கொண்டாடப்பட்டது. ஜனங்கள் அனை வரும் அக் கொண்டாட்டத்தில் ஆனந்தமாகக் கலந்து கொண்டார்கள். தேசமனைத்தும் குதூகலம் கொண்டது.

ஏழை இந்திய மாதருக்கு வைத்திய உதவி புரி யும் நோக்கத்துடன் டப்பரின் மனையாள் பெயரால் பெரு நிதியொன்று சேர்க்கப்பட்டது. அதுகொண்டு தேசத்திலே பற்பல இடங்களில் ஸ்திரீகளுக்காகத் தனியே வைத்தியசாலைகள் கட்டப்பட்டன. அதனால்

ஏழை எளியவர்க்கு இனமாக வைத்திய வசதி கிடைக்க வழி பிறந்தது.

லான்ஸ்டேளன் பிரபு (1888—1894): இவர் காலத்திலே அஸ்ஸாமிலுள்ள **மணிபுரம்** எனும் சமஸ் தானத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டது. அரசுக்கு உரியவன் உயிருக் கஞ்சி ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான். உடனே ஆங்கிலச் சேனை சென்று அவனை அரியணையில் அமர்த்தித் திரும்பியது.

சென்னை, பம்பாய், வங்காளம் முதலிய மாகா ணங்களிலே 1861ஆம் முதல் சட்டசபைகள் இருந்து வந்தன. மாகாண சட்டசபைகளைத் தவிர இந்தியா முழுவதுக்கும் ஒரு பொது சட்டசபையும் இருந்தது. இந்தியரில் சிலரை அச்சபைகளுக்கு அரசாங்கத் தாரே நியமித்து வந்தனர். லான்ஸ்டௌன் காலத் திலே 1892ஆம் அச்சபைகளின் அமைப்பு மாறியது. அதன் பலனாக, ஸ்தல சுயஆட்சி சபைகள், சில இந்தியரைத் தேர்ந்தெடுத்து, மாகாண சட்டசபை களுக்கு அனுப்பலாயின. இந்தியா சட்டசபைக்கோ மாகாண சட்டசபைகளே சிற்சில இந்தியரைத் தேர்ந்தெடுத் தனுப்பிவந்தன. சட்டசபைகள் முதன் முதலாக இவர் காலத்தில் திருந்தின.

எல்ஜின் பிரபு (1894—1899): இவரது காலத்திலே வடமேற் கெல்லைப்புறத்தில் வசித்து வந்த மலைநாட்டினரான **வகாபியர்** என்போர் இந்தி யாவின் கிராமங்களில் புகுந்து கொள்ளையும் கொலை யும் நடத்தி வந்தனர். உடனே ஆங்கிலப் படை யொன்று கிளம்பி, அவர்களை யடக்கி, அமைதி உண்டுபண்ணியது.

இவர்காலத்திலே தேசமெங்கும் பெரும் பஞ்ச மொன்று ஏற்படலாயிற்று. வானம் அடியோடு வறண்டு போனதே முதல் காரணம். லட்சக்கணக் கில் ஜனங்கள் செத்து வந்தார்கள். அப்போது அர சாங்கத்தாரும் இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயரும் சேர்ந்து பணஉதவி செய்து கஷ்டத்தைப் போக்கப் பெரிதும் முயன்றனர்.

பிளேக் எனும் கொடிய வியாதியொன்றும் பம்பாய் மாகாணத்தில் தோன்றலாயிற்று. அந்நோய் காணின், திடீர் திடீரென மக்கள் மாண்டுவிடுவர். அந்நோய் இதர இடங்களிலும் பரவிற்று. அதனை ஒழிக்க அரசாங்கம் எவ்வளவோ இன்றும் செய்துவருகின்றது. இவர் காலத்தில் பயங்கரமான பூகம்பமும் உண்டாயிற்று. இதிலும் பலர் கஷ்ட மடைந்தனர்.

19. கர்ஸன் பிரபுவும் சீர்திருத்தங்களும் (1898—1905)

கர்ஸன் பிரபு ஏழாண்டு ராஜப் பிரதிநிதியாக இருந்தார்.

அப்பொழுது அரசியலில் பலவாறான திருத்தங்கள் செய்யப்பெற்றன. கல்வித் துறையிலும் அரசாங்கத்தார் அதிக ஊக்கஞ்செலுத்தி அபிவிருத்தி செய்தனர்.

கல்வி யபிவிருத்தி: அவர் காலத்தில் இந்தியா முழுவதிலும் கல்வி விஷயத்தைக் கவனிக்க மேலான அதிகாரி ஒருவர் ஏற்பட்டார். விளையாட்டே போல் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட கிண்டர் கார்டன் முறை அப்போதுதான் உண்டாயிற்று. குழந்தைப் பருவமுதலே இயற்கை அறிவையும் ஊட்டுவதற்கான பாட திட்டங்களும் அமுலுக்கு

வந்தன. விஞ்ஞான சாஸ்திரக் கல்வியை அனுபவ முறையில் கற்பிக்கவும் வழிபிறந்தது. அரசாங்கத்தின் செலவில் இந்திய மாணவர் மேனுடு சென்று சாஸ்திரப் பயிற்சி பெற்று வரலாயினர்.

கர்ஸன் பிரபு

கல்விச் சாலேகளே மேற்பார்த்துப் பாட விஷயங்களேயும் நிர்ணயித்து, மாகாணங்களிலே கல்வியபிவிருத்தியைக் கவனித்து வர சர்வ கலா சாலேகள் என்னும் சபைகள் இருந்தன. அச்சபைகளில் இந்தியரும் ஐரோப்பியருமாகப் பல அங்கத்தினர் உண்டு. நாட்டின் தேவையையும் மக்களின் மனப் போக்கையும் மதித்து, அவ்வப்போது ஏற்ற காரியங்கள் செய்து வருதல் அச்சபைகளின் கடமை. அச்சபைகளின் விஷயத்தில் நம்மவருக்கு இருந்து வந்த உரிமை, அதிகாரம் இரண்டும் குறையுமாறு அவர் ஒரு சட்டம் செய்தார். ஆதலினல், இந்தியருக்கு அதிருப்தி உண்டாயிற்று.

புராதனச் சின்னங்கள்: நமது தேசத்திலே பற்பல இடங்களிலும் புராதனமான அநேக கோட்டைகள், கோயில்கள், மண்டபங்கள், கல்வெட்டுக்கள், ஸ்தம்பங்கள் இவை நிரம்பியிருக்கும். நமது முன்னேர்களின் அறிவுவளர்ச்சி, நாகரிக முதிர்ச்சி, சிற்பத்தேர்ச்சி, கலேப்பயிற்சி இவற்றை எடுத்துக் காட்ட அவை பெரிதும் பயன்படும். அர

சாங்கமும் ஜனங்களும் அசட்டையாக இருந்த தனுல் அத்தகைய அரிய புராதன நாகரிகச் சின்னங்கள் சிறிது சிறிதாக அழிந்து வரலாயின. அரசாங்கமும் அவற்றையெல்லாம் பாதுகாக்க ஓர் ஏற்பாடும் செய்யவில்லை.

கர்ஸன் பிரபு அதுகண்டு, மிகப் பரிவுகொண்டு அச்சின்னங்களை எல்லாம் பாதுகாக்கவும், அவற்றை ஆராயவும், அவற்றினுள் பொதிந்து கிடக்கும் விஷயங்களை உணரவும், பின்பு அவ்விஷயங்களை வெளியிடவும் ஓர் இலாகாவை ஏற்படுத்தினர். அதற்கு பூர்வீக நாகரிகச் சின்ன இலாகா என்று பெயர். அதை ஆங்கிலத்திலே ஆர்க்கியலாஜிகல் டிபார்ட்மெண்ட் (Archaeological Department என்பர். அதன் ஆதரவில் நம்மவரும் அன்னியருமான மேதாவிகள் பலர் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் செய்து, அரிய விஷயங்களை உணர்ந்து உலகினுக்கு அறிவித்து வருகிறார்கள். அதனுல் நம் மூதாதையரின் மேன்மையும் தன்மையும் பிரசித்தம் ஆகின்றன.

விவசாயப் பெருக்கு: நமது இந்தியா பெரும்பாலும் விவசாயத்தையே நம்பியுள்ள தேசமாம். குடிமக்களில் பலரும் உழு தொழிலையே ஜீவனோபாயமாகக் கொண்டுளர். பெரும்பாலான பிரதேசங்கள் வானம் பார்த்த பூமிகள். பருவ மழை தவருது பெய்தால்தான், பயிர்த் தொழில் பண்ண முடியும். ஆங்காங்குள்ள ஆறு, ஏரி, குளங்களும் மழை யின்றேல் வேளாண்மைக்கு உதவியாகா.

இவற்றை யெல்லாம் கர்ஸன் பிரபு கூர்ந்தறிந்து விவசாய இலாகாவைச் சீர்திருத்தினர்; நீர்ப்பாய்ச்சலுக்கான சாதனங்கள் பலவற்றைத் தேடி

யமைத்தார். புராதன வழியிலேயே நம் குடியானவர் உழு தொழில் புரிந்து வந்தனர். அதுகண்டு நவீன விவசாய முறைகளை உணர்த்தியும், சாஸ்திர முறையில் பயிர் பண்ணத் தூண்டியும், அந்த இலாகா உழைத்து வருகின்றது. மேலும் உழு தொழிலுக்கான உரம், விதை, கருவி முதலிய சாதனங்களைப் பற்றிய அறிவைப் பெருக்கியும், அதிகமான உற்பத்திக்கு வழிகாட்டியும் வருகின்றது.

கூட்டுறவு முயற்சி: சிறிது காலத்திற்கு முன் வரையில் விவசாயத்தைத் தவிர வேறு வகைதுறை நம்மவருக்கு இருக்கவில்லை. விவசாயத்தையே எல்லாரும் நம்பிக் கிடப்பதால் வறுமை தலைமிஞ்சி விட்டது. வேளாளர் தங்களுக்குத் தேவையான ஏர், எருது, உரம், விதை இவை வேண்டுமளவு கிட்டாமல் வருந்துதல் பிரசித்தம். எனவே கடன் வாங்கி உபகரணங்களைத்தேடிக் கொள்ளவேண்டும். வாங்கும் கடனுக்குக் கட்டவேண்டிய வட்டியோ மிக மிக அதிகம். இந்நிலையில் பயிர்பண்ணி அறுவடையானதும் அந்த மகசூலை விவசாயிகள் மிகவும் குறைவான விலைக்கு விற்று, முன்னம் வாங்கிய கடனைக் கட்டிவிட்டு அன்றாட உணவுக்கும் வகையின்றி வருந்திக் கிடக்கநேரும். 'உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது' என்று ஒரு பழமொழி உண்டு. கடன் சுமை அதிகரித்தவுடன் உழவர் தங்களது கால்நடைகளையும், தட்டுமுட்டுச் சாமான்களையும், சில சமயங்களில் வீடு வாசல்களையும் இழந்துவிட நேரும். இந்நிலையில் அவர்களுக்கு உதவிபுரிய ஐக்கிய நாணயச் சங்கங்களை அப்பிரபு அமைக்கலானர்.

ஏழை உழவரும், கைத்தொழிலாளரும் தங்களுக்குத் தேவையான பணத்தை அச் சங்கங்களிலிருந்து குறைந்த வட்டிக்கு வாங்கிக் கொள்ளலாம்; அதனை நாளடைவில் சிறிது சிறிதாகவும் கொடுத்து வரலாம்; தவிர, வருவாயில் சிறிது அளவேனும் மிச்சம் பிடித்து அதனை அச்சங்கங்களில் போட்டுச் சேமித்தும் வரலாம். இனி உழவுத் தொழிலுக்கு வேண்டிய உபகரணங்களை மொத்தத்தில் மலிவான விலைக்கு வாங்கி, இலகுவான விலையில் உழவருக்கு அச் சங்கங்கள் கொடுத்து உதவும். அவ்வாறே உழவரின் அறுவடை மகசூலையும் மொத்தத்தில் வாங்கி வைத்து, காலம் பார்த்து நல்ல விலையில் விற்றும் அச்சங்கங்கள் ஒத்தாசை புரியும்.

எல்லைப்புற விஷயம்: கர்ஸனது ஆட்சிக் காலத்தில் ஆப்கன் அமீரான அப்துர் ரஹிமான் காலமானன். அப்பொழுது அவன் மைந்தன் ஹபிபுல்லா அமீராகப் பட்டம் சூடிக் கொண்டான். எல்லைப் புறத்திலே தொல்லை நேரக்கூடாதென்று அவர் கருதினர். ஆதலினல் ஆண்டுதோறும் அமீருக்குக் கொடுத்துவந்த பண உதவியை மீண்டும் கொடுத்து வருமாறு அவர் ஏற்பாடு செய்தார். அதன் மேல் ஆங்கிலேயரிடம் அமீர் நட்பாளனுயினன்.

கர்ஸன் பிரபுவுக்கு முன்னம் வடமேற்கெல்லைப் பாதுகாப்புக்கு ஆங்கிலப் படைகளை அமர்த்தி யிருந்தனர். திருடனையே காவலாளியாக வைப்பதுபோல் எல்லைப் புறத்திலுள்ள முரட்டு ஜாதியாரையும் படையில் சேர்த்து அவர்களையே எல்லைப்புறக் காவலுக்கு அமர்த்தினர் அப்பிரபு. மேலும் சிந்து நதியை அடுத்துள்ள சில பிரதேசங்

களையும் அப்பிரதேசங்களுக்கு மேற்கிலுள்ள சில சிறிய ஏஜென்ஸி நாடுகளையும் ஒன்ருக்கி, வடமேற்கு எல்லை மாகாணம் என்னும் ஒரு புது மாகாணத்தையும் அவர் அமைத்தார்.

டில்லி தர்பார்: அவர் காலத்திலே 1901ஆு ஜனவரிமீ விக்டோரியா மகாராணி காலகதியாஞர். உடனே. அவர் மைந்தர் ஏழாம் எட்வர்ட் சிம்மாசனத்துக்கு வந்தார். அந்த வைபவத்தை யொட்டி, 1903ஆு ஜனவரிமீ முதல் தேதியில் டில்லியிலே மகாஆடம்பரமான ஒரு பெரிய தர்பார் நடத்தினர் கர்ஸன். அதற்கு உயர்தர உத்தியோகஸ்தர்கள் அனைவரும், சுதேச மன்னர் பலரும் சென்றிருந்தனர். அவ்வைபவம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

எட்வர்ட் சக்கரவர்த்தி

வங்காளப் பிரிவினை: கர்ஸன் பிரபுவின் ஆட்சிக் காலத்தில் வங்காளம், பீஹார், அஸ்ஸாம் இம்மூன்றும் வங்காள மாகாணமென்று வழங்கி வந்

தன. அதன் பரப்பு சுமார் 2 இலட்சம் சதுரமைல்; ஜனத்தொகை ஏறக்குறைய 8 கோடி. பரிபாலன நலத்தை மதித்து அதனை இரண்டு பாகங்களாக அவர் பிரித்தார். அந்நாளில் வங்காளிகள் மிக்க ஒற்றுமையும் நேசமும் கொண்டு குலவி வந்தனர். அந்த ஒற்றுமையைக் குலைக்கக் கருதியே அவர் வங்காளப் பிரிவினை செய்தார் என்று எங்கும் பிரமாதமான கண்டனம் உண்டாயிற்று.

அவ்விதம் ஜனங்கள் மனங்கசந்து நிற்கையில் நம்மவரையும் நமது புராதன பழக்க வழக்கங்களையும் நமது குணங்களையும் அவர் இழித்துப் பேசினர். இதனாலும் ஜனங்களின் கோபம் அதிகரித்தது. நாட்டிலே என்றுமில்லாத கிளர்ச்சி தோன்றியது. அதற்கு அடையாளமாக அரசாங்கத்தின் செயலை அனைவரும் கண்டித்துப் பேசினர்.

அது சமயம் விதேச சாமான்களை வாங்குவதில்லை என்றும், சுதேச சாமான்களையே வாங்குவது என்றும், ஜனங்கள் விரதம் பூண்டார்கள். நாட்டிலே அமைதி குன்றியது. அந்த அமைதிக் குறைவு அடங்காமல் ஓங்கி வளர்ந்து கொண்டே வந்தது. அப்பால் 1911 ல் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்தியாவுக்கு வந்து டில்லியிலே மகுடாபிஷேகம் செய்து கொண்டு, வங்காளப் பிரிவினையை ரத்து செய்ய நேர்ந்தது. அதன்மேல் தேசத்திலே அமைதியும் நிலவலாயிற்று.

கர்ஸன் பிரபு மேலும், போலீஸ், வாணிபம், தொழில், பஞ்ச நிவாரணம் முதலிய துறைகளிலும் பற்பல சிறந்த ஏற்பாடுகள் செய்தார். அவற்றால் குடிமக்களுக்கு நல்ல பலன் உண்டு.

ராஜப்பிரதிநிதியாக வந்தபோது அவருக்கு வயது 28. இவ்வளவு சிறிய வயதில் எவரும் ராஜப் பிரதிநிதியாக வந்தது கிடையாது. ஆண்டில் அவர் இளைஞராயினும் அறிவிலும் முன்யோசனையிலும் முதிர்ந்தவர். ஆனால் அவர் அதிகாரப் பிரியர்; ஏகாதிபத்தியச் செருக்கு மிகுந்தவர்; கட்டியாளும்



ஜார்ஜ் சக்கரவர்த்தி

மேரி சக்கரவர்த்தினி

கருத்துக் கொண்டவர். அத்தகைய குண விசேஷங்களால் அவர் இந்தியரிடம் நம்பிக்கை வைக்கவில்லை; இந்தியரை மதிக்கவுமில்லை; பழித்தே பேசினர்; உரிமைகளைக் குறைத்தார். ஆனது பற்றி ஜனங்கள் அவரை வெறுக்கலானர்கள்.

கர்ஸன் காலத்திலே இந்தியாவின் சேனதிபதியாக இருந்தவர் லார்டு கிச்சனர். இவருக்கும் கர்ஸ

னுக்கும் அபிப்பிராய பேதம் உண்டாயிற்று. இந்தியா மந்திரியோ கிச்சனரின் பக்க மிருந்தார். ஆனது பற்றி கர்ஸன் பிரபு தம் பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டு, இங்கிலாந்துக்குப் போனார்.

---

20. எல்லைப் பாதுகாப்புக் கொள்கை

வீட்டுக்குப் பூட்டும் சாத்தும் காவலும் அவசியம். தேசத்துக்கும் அவ்வாறேயாம். நமது தேசத்தைச் சுற்றி மேற்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் கடல் சூழ்ந்துள்ளது. வடக்கிலும் வட மேற்கிலும் மலைகளும் குன்றுகளும் நிரம்பி யுள்ளன. இங்கிலாந்திலுள்ள துரைத்தனத்தாரிடம் வன்மை வாய்ந்த பெரிய கப்பல்படை இருக்கிறது. ஆதலினால் கடல்வழியே பகைவர் வந்து இந்தியாவைத் தாக்குதல் சுலபமன்று. வடக்கே கிழமேலாக நெடுகிலும் இமயமலை நீண்டு பரவியுள்ளது. ஆதலின் அம்மலையைக் கடந்து இந்தியாவுக்குள் பகைவர் வருதல் கஷ்டமான காரியம்.

வடமேற்கு எல்லைப்புறத்திலோ கைபர், போலன் எனும் இரண்டு கணவாய்கள் இருக்கின்றன. கிரேக்க அலெக்சாந்தரின் காலம் முதல் அவ்வழியே பகைவர் நம் தேசத்தின்மீது படை கொண்டு வந்துளர். எனவே அந்த எல்லைப்புறத்தில் தக்க பாதுகாப்புக்கள் அவசியம். பிரான்ஸ் தேசத்தார் அவ்வழியே வருவரோ என்று ஒரு சமயம் ஆங்கில அரசாங்கத்தார் அஞ்சி யிருந்தனர். அப்பாலோ ருஷியர் வரக்கூடும் என்று ஆங்கில அரசு அஞ்ச நேர்ந்தது. ஆதலினால்தான் எல்லைப்

புறத்தை அடுத்துள்ள ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம் இரண்டிலும் செல்வாக்குப் பெற ஆங்கிலேயர் முயன்று வரலாயினர். ஆப்கன் அரசர்களுடன் சண்டைக்குப் போனதும், அப்பால் சமாதானங் கொண்டதும், அதன்பின் அவர்களுக்கு ஆண்டுதோறும் பண உதவி புரிந்து வந்ததும், எல்லைப்புற மக்களையே காவலுக்கு அமர்த்தியதும், அது பற்றியே யாம்.

இரண்டு பெரிய தனவந்தர்களிடையே வெளிப்படைக்கு நேச நிகழ்ச்சி காணக்கூடும். ஆயினும் உள்ளூர அச்சமும் முன்ஜாக்கிரதையான ஏற்பாடுகளும் மிகுந்து நிற்கும். ஐரோப்பாவிலே ருஷ்யாவும் இங்கிலாந்தும் வல்லரசுகளாய் விளங்கின. ருஷ்ய சாம்ராஜ்யமோ இந்தியாவுக்கு வடமேற்கேயுள்ள பிரதேசங்களின் எல்லை வரையில் பரவியிருந்தது; அப் பிரதேசங்களில் செல்வாக்குப் பெறவும் முயன்றது. இந்தியாவுக்கும் அந்த சாம்ராஜ்யத்துக்கும் இடையேயுள்ள பிரதேசங்களில் ருஷியரின் செல்வாக்கு ஓங்கிவிடின், இந்தியாவுக்கு ருஷியரால் ஆபத்து நேரக்கூடும்; ஆங்கில சாம்ராஜ்யத்துக்கும் அவதி தோன்றலாம். ஆதலினால் தான், ருஷிய சாம்ராஜ்யத்திற்கும் இந்தியா தேசத்திற்கும் மத்தியிலுள்ள நாடுகள் தங்களுக்கு அனுகூலமாய் இருக்க வேண்டுமென ஆங்கிலேயர் முன்ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யலாயினர்.

எல்லைப்புறப் பாதுகாவல் கொள்கையைத் தழுவி, ஆப்கன் தேச வியவகாரங்களில் இந்தியா கவர்ன்மெண்டார் தலையிடுவதுபற்றி ஆங்கில அறிவாளிகளுக்குள்ளும் அதிகாரிகளுக்குள்ளும் ஆதி

முதல் கருத்து வேற்றுமைகள் இருந்து வரலாயின. இயற்கையில் கடத்தற்கரிய மலைகளையும் நதிகளையும் கடந்து சென்று, ஆப்கன் வியவகாரங்களில் தலையிடுவது தவறு என்று சிலர் கருதினர். வேறு சிலரோ தலையிட்டே ஆகவேண்டும், இல்லாவிட்டால் அனர்த்தம் நேரும் என்று எண்ணினர்.

நம் தேசத்தின் பரிபாலனத்தில் சிரத்தை கொண்டு சில நன்மைகள் செய்து சென்ற **லாரன்ஸ்** பிரபுவோ ஆப்கன் வியவகாரங்களில் இந்தியா கவர்ன்மெண்டார் தலையிடக் கூடாது என்று கூறியுள்ளார். தெருச் சண்டையை விலைக்கு வாங்க வேண்டாம் என்பது அவர் கருத்து. அன்றியும் ஏழை இந்திய மக்கள் வருந்திக் கொடுக்கும் வரிப் பணத்தை அவர்களின் நன்மையைப் பெருக்கும் வழிகளில் செலவு செய்யவேண்டுமே யல்லாமல், எல்லைப்புறச் சண்டைகளுக்காக வாரியிறைக்கக் கூடாது என்பதே அவர் கட்சி. **கானிங், மேயோ** முதலிய கவர்னர் ஜெனரல்களும் இந்தியா மந்திரிகளில் சிலரும் லாரன்ஸின் கருத்தே சரியென்று சொல்லி நடந்துவந்தனர். **ஆக்லண்டு, எல்லன்பரோ** முதலிய கவர்னர் ஜெனரல்களும் இந்தியா மந்திரிகளில் வேறு சிலரும் ஆப்கன்விஷயத்தில் தலையிடுவதையே வற்புறுத்திக் காரியம் செய்து வரலாயினர்.

ஆப்கன் விவகாரங்களில் தலையிட்டு ஆதிக்கம் பெறவேண்டுமென்றே லிட்டன் பிரபு இரண்டாவது ஆப்கன் யுத்தத்தில் முனைய நேர்ந்தது. அதன் பலனாக ஆப்கன் அமீரான அப்துல் ரஹிமானும் அவன் மைந்தன் ஹபிபுல்லாவும் ஆங்கிலேயருடன் நட்புரிமை பூண்டு நடந்துவரலாயினர்.

எனினும் அப்பால் அமனுல்லாவோ அமீரானதும் ஆங்கிலேயரோடு முதலில் சண்டைக் கெழுந்து பிறகு சமாதானம் செய்துகொண்டான். அப்போதுதான் (1919) அமீருக்கு ஆண்டுதோறும் கொடுத்துவந்த உதவிப் பணம் நிறுத்தப்பட்டது. அமனுல்லா அரசிழந்து, நாதர்ஷா அமீரானதும் ஆங்கிலேயருக்குத் தீங்கிழைக்காது நேசமாகவே நடந்து வருகிறார்.

ஆங்கில சாம்ராஜ்யத்தின் ஒரு முக்கிய தேசமான இந்திய சாம்ராஜ்யத்திற்கு அன்னியரால் ஆபத்து நேரின் அந்த அன்னியரை அவர்களின் தேசத்திலேயே எதிர்த்துப் போர் புரிந்து பலன் காணுதல் நியாயமே யல்லாமல் எல்லைப்புறத்தில் இந்தியச் சேனைகளை ஏராளமாக நிறுத்தி அதற்காக இந்தியாவின் பணத்தை அபரிமிதமாகச் செலவிடுதல் அநீதி என்பதே சிறந்த சித்தாந்தமாம்.

---

21. மிண்டோ - மார்லி திருத்தங்கள்

கர்ஸன் பிரபுவை யடுத்து மிண்டோ பிரபு ராஜப் பிரதிநிதியாக வந்தார். இவர் 1905 முதல் 1910 வரையில் ராஜரீகம் செய்தார். புலியின் வாலை முறுக்கி விடுவதுபோல், வங்காளப் பிரிவினை செய்து தேசத்திலே அமைதிக் குறைவை உண்டாக்கிச் சென்றார் கர்ஸன் பிரபு. மிண்டோ பிரபு பதவி ஏற்றதும், தேசத்திலே பல இடங்களில் அமைதி குறைந் திருந்தது. குடிமக்கள் துரைத்தனத்தின்மீது வெறுப்புக்கொண்டு நின்றனர். விதேச சாமான் பகிஷ்காரம் விறுவிறுப்பாக

இருந்து வந்தது. அராஜகச் செயல்களும் தலை யெடுத்தன. ஆதலினால் அடக்கு முறைகளைக் கையாண்டு பார்த்தார் மிண்டோ பிரபு. தேசத்தில் அமைதி நிலவ வில்லை. மக்களிடம் நிம்மதி யுமில்லை. எனவே அரசியலில் சில திருத்தங்கள் செய்து சாந்தி உண்டு பண்ண வேண்டு மென்று அவர் நினைத்தார்.

மிண்டோ பிரபு II

அதற்கு முன்பே தாதாபாய் நௌரோஜி, கோபால கிருஷ்ண கோகலே போன்ற தலைவர்கள் அடக்கு முறை பயன் தராதென்றும், அரசியலில் இந்தியருக்குப் பங்கு வேண்டு மென்றும், வற்புறுத்தி வந்தனர். இந்தியா மந்திரியாக இருந்த மார்லி பிரபுவும் இந்தியாவில் அமைதி உண்டுபண்ணியாக வேண்டு மென்று தீவிர ஆவல்கொண்டார்.

கோபால கிருஷ்ண கோகலே

அந்த மிண்டோ, மார்லி இருவரும் கலந்து முயல, அரசியலில் திருத்தம் ஏற்பட்டது. அதனை மிண்டோ-மார்லி சீர்திருத்தம் என்பர்.

அத்திருத்தத்தின் முக்கிய அம்சங்களாவன :— அதற்குமுன் இந்தியா சட்டசபையில் 21 மெம்பர்களே இருந்து வந்தனர். திருத்தத்தின்படி, அவர்களின் தொகை 60 ஆயிற்று. அவர்களில் உத்தியோகஸ்தர்கள் 28 பேரே இருக்கலாம். மற்றைய அங்கத்தினர்களில் பலரும் வியாபாரச் சங்கங்கள், சர்வகலாசாலைகள், ஜில்லா போர்டுகள், முனிசிபாலிடிகள், நிலச்சுவான்கள் இவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒருசிலரை அரசாங்கம் நியமிக்கும்.

மாகாண சட்டசபை மெம்பர்களின் தொகை இருமடங்கு ஆயிற்று. இச்சபைகள் சட்டஞ் செய்யவும், பரிபாலனத்தை ஆராயவும், சில வரிகளை விதிக்கவும், அதிகாரமடைந்தன. ஆனால் இச்சபைகளின் மெம்பர்கள் அரசாங்கத்தின் வரவையோ செலவையோ குறைக்கவும் கூட்டவும் முடியாது. அச்சபைகளில் முகம்மதியருக்குத் தனியே பிரதிநிதி ஸ்தானங்கள் கிடைத்தன. இவர்களை முகம்மதியரே தேர்ந்தெடுக்கவும் வகை செய்தனர்.

மேலே சொல்லிய ஏற்பாடுகள் அமுலுக்கு வந்தபொழுது இந்தியா மந்திரியின் நிர்வாக ஆலோசனை சபையிலும் ராஜப்பிரதிநிதியின் நிர்வாக ஆலோசனை சபையிலும் இந்தியர் இடம் பெற்றிருந்தனர். இப்போது மாகாண நிர்வாக ஆலோசனை சபைகளுக்கும் இந்தியர் நியமனம் பெறலாயினர். இவ்விதம் இந்தியருக்கு முன்னையிலும் அதிகமான உரிமை கிடைக்கலாயிற்று.

ராஜப் பிரதிநிதியின் நிர்வாக ஆலோசனை சபையில், 1909-ஆம் சட்ட மெம்பராக இருந்த சத்யேந்திர பிரசன்ன சின்ஹா உதவி இந்தியா மந்திரியாக நியமனம் பெற்ருர். அப்போது அவருக்கு லார்டு (பிரபு) என்னும் பட்டமும் கிடைத்தது. இன்றளவும் எந்த இந்தியருக்கும் லார்டு பட்டம் கிட்டியதில்லை; உதவி இந்தியா மந்திரி பதவியும் கிடைத்ததில்லை. அப்பால் சின்ஹா பிரபு (லார்டு சின்ஹா) பீஹார் மாகாணத்தின் கவர்னராகவும் சிறிதுகாலம் திறமையாக வேலைசெய்தார்.



சின்ஹா பிரபு

மேலே கண்டவாறெல்லாம் இந்தியருக்கு உரிமைகளும் பதவிகளும் ஓரளவு கிட்டின போதிலும், தேசத்தில் திருப்தி ஏற்படவில்லை. முகம்மதியருக்குத் தனியே பிரதிநிதிகள் ஏற்பட்டதனுல், அவ்வாறே தங்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று சீக்கியரும் கிறிஸ்தவரும் விரும்பலாயினர். தேசமக்களிலே ஒரு சாராருக்கு மட்டும் தனிப் பிரதிநிதித்துவம் தருதல் தேச ஒற்றுமையைக் குலைப்பதாகும் என்றே பலர் எண்ணினர். ஜாதி மத வேற்றுமை இருப்பினும் எல்லாரும் இந்தியா மக்கள் எனும் தேசீய உணர்ச்சியும் ஒற்றுமையும் பெருகி வருகையில், தனிப் பிரதிநிதித்வம் அளித்தல் தவறென்றும் பலர் கண்டித்தனர். பொதுவாகப் பார்த்தால், மிண்டோ - மார்லித் திருத்தங் காரணமாக அரசிய

வில் இந்தியருக்கு ஓரளவு உரிமையும் செல்வாக்கும் அந்தஸ்தும் பதவியும் கிட்டின என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

——

22. இந்தியாவும் ஐரோப்பிய மகாயுத்தமும்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலே ஐரோப்பாவில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்டிரியா ஹங்கேரி, ருஷியா இவையே பேரரசுகள். அவற்றுள் முதல் நான்கும் தொழிலபி விருத்தியிலும் வியாபாரப் பெருக்கிலும் சிறந்தவை. இங்கிலாந்தே யாவற்றினும் தலை சிறந்தது. ஆனது பற்றி இங்கிலாந்தைக் கண்டு சில பேரரசுகள் உள்ளூர அசூயை கொண்டு, அதனைக் கவிழ்க்கும் வகையை ஆராய்ந்து வந்தன.

இங்கிலாந்து, பிரான்ஸ் இந்த இரண்டினுக்கும் ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களில் குடியேற்ற நாடுகளும் சார்பு நாடுகளும் மிகுதி. தானும் அவ்வாறே குடியேற்ற நாடுகள் பெறவேண்டுமென ஜெர்மனி முயன்று வந்தது. குடியேற்ற நாடுகள் கிடைத்தால், தொழிலுக்குரிய மூலப்பொருள்கள் பலவும் கிடைக்கும்; அத்துடன் கைத்தொழில் பொருள்களை அங்கே கொண்டுகுவித்து விற்கவும் இலகுவாய் இருக்கும். அவ் வரசுகளின் கைத்தொழில் சரக்குகளுக்கு ஆசியாவும் இந்தியாவுமே நல்ல சந்தைகளாய் விளங்கின. எனவே ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள நாடுகளில் தானும் ஆதிக்கம் கொள்ளவேண்டுமென்று ஜெர்மனிக்கு நெடுநாளாக ஆசை உண்டு.

ஆதலின் ஐரோப்பாவிலுள்ள **பால்கன்** நாடுக ளென்ன, சிறிய ஆசியா என்ன, இவற்றின் வழியே பாக்தாத் நகரம் வரையில் ஓர் இருப்புப் பாதை போட ஜெர்மனி முயன்று வந்தது. அப்போது ஜெர்மனிக்கு ஆபிரிக்காவிலே குடியேற்ற நாடுகள் கிடைத்தன. உலகிலே வியாபார ஆதிக்கம் பெற வேண்டின், பெரிய கப்பல்படை வேண்டும். அந்த ஐந்து பேரரசுகளில் இங்கிலாந்தின் கப்பல் படையே நிகரற்றது. அந்நிலையில் ஜெர்மனி தனது கப்பல் படையைப் பெருக்க ஏற்பாடு செய்ய லாயிற்று. ஜெர்மன் கப்பல்படை பெருகிவிடின், கடலிலே இங்கிலாந்துக்குள்ள ஆதிக்கமும் செல் வாக்கும் குறைந்துபோம். ஜெர்மன் கப் பல்படை பெருகுதல் கண்டு இங்கிலாந்து சகிக்கவில்லை.

முன்னாளில் ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் 1871-ஆு ஒரு சண்டை நடக்க, அதில் பிரான்சுக் குச் சொந்தமான **அல்ஸேஸ், லொரேய்ன்** என்னும் மாகாணங்கள் ஜெர்மனியிடம் சிக்குண்டன. அம் மாகாணங்களை மீட்டுக்கொள்ள பிரான்ஸ் தேசம் காலங் கருதி நின்றது. இவ்விதம் ஐரோப்பியப் பேரரசுகளுக்குள்ளே போட்டியும், பகைமையும், அசூயையும் நீறு பூத்த நெருப்பேபோல் நிரம்பி நின்றன. இவையே 1914-ஆு ஐரோப்பாவில் மூண்ட மகாயுத்தத்துக்கு முக்கிய காரணங்களாம்.

'சண்டைக்கு எடு பிடி மாடு பிடி' என்பர். அவ்வாறே, அந்த யுத்தம் மூளுவதற்கு ஒரு சிறு காரணம் ஏற்பட்டது. அது என்னவென்றால் ஆஸ்டிரியா ஹங்கேரியின் இளவரசன் 1914-ஆு ஜூலை மாதம் **சேர்வியா** தேசத்துக்குப் போனான்.

அங்கே செர்வியன் ஒருவன் அந்த இளவரசனைக் கொன்று போட்டனன். அதன்மேல் ஆஸ்டிரிய சக்கரவர்த்தி மூகாந்தரம் கேட்டான். செர்வியா தேசம் சரியான பதில் சொல்லவில்லை. அதுகண்டு ஆஸ்டிரியா போருக்கு ஆயத்தம் செய்தது. அப்போது செர்விய மக்களுக்கு உதவி புரிவதாக ருஷியா வாக்களித்தது. ஆஸ்டிரியாவுக்கோ ஜெர்மனி பக்கபலமாக நின்றது. பிரான்சோ ருஷ்யருக்கு உதவ முன்வந்தது.

சின்னாட்கள் வரையில் இங்கிலாந்து அந்த யுத்தத்தில் சேரவில்லை. அவ்வேளை இங்கிலாந்தினிடம் போர்ப்படைகள் குறைவு; இங்கிலாந்தைச் சார்ந்த அயர்லாந்தில் குழப்பங்கள் தோன்றிநின்றன. இக் காரணங்களால் யுத்தத்தில் தலையிட இங்கிலாந்து தாமதிக்கலாயிற்று. பிரான்சும் யுத்தத்தில் சேர்ந்தவுடனே அதனை எதிர்க்க ஜெர்மனி எண்ணிற்று. குறுக்கு வழியாகப் பிரான்சுக்குள் புகவேண்டுமானல், சிறிய பெல்ஜிய தேசமே ஏற்ற மார்க்கம். பெல்ஜியத்தை நசுக்கி அதன்வழியே பிரான்சின் மீது பாய்ந்தது ஜெர்மனி. நடுநிலைமையாக நின்ற பெல்ஜியத்துக்கு ஆபத்து நேரின், ஒப்பந்தப்படி அதற்கு உதவி புரிய இங்கிலாந்து கடமைப்பட்டது. ஆதலினல் யுத்தத்தில் இங்கிலாந்து இறங்கிற்று.

அந்த மகா யுத்தத்தில் பிரான்சு, இங்கிலாந்து, ருஷியா இம்மூன்றும் நேசக் கட்சிகளாக ஒருபுறம் நின்றன. ஆஸ்டிரியா-ஹங்கேரியும், ஜெர்மனியும் நட்புக்கொண்டு மற்ருெரு பக்கம் நிற்கலாயின. ஐரோப்பிய தேசங்களில் இத்தாலி தேசம் முன் சொன்ன கட்சியுடன் சேர்ந்தது. துருக்கி பின்

சொன்ன கட்சியுடன் கூடிக்கொண்டது. அப்பொழுது ஆங்கில சாம்ராஜ்யத்திலுள்ள எல்லாத் தேசங்களும் இங்கிலாந்துக்குப் பலவகையிலும் உதவின.

யுத்தங் காரணமாக உலகெங்கும் வியாபாரமும் தொழிலும் சீரழிந்தன. பிற நாடுகளிலிருந்து ஜெர்மனிக்கு எந்தச் சாமானும் போகா வண்ணம் இங்கிலாந்தின் கடல்படை தடுத்து நின்றது. யுத்தத்தின் பயங்கர நிகழ்ச்சிகளைச் சொல்ல முடியாது. ஆகாய விமானங்கள் நெடுந்தூரம் பறந்து சென்று, வெடிகுண்டுகளை வீசிப் பொழிந்து, ஜனங்களைக் கொன்றன; நாடுகளைப் பாழாக்கின. கடலிலோ சப்மரீன்கள் எனப்படும் நீர்மூழ்கிக் கப்பல்கள், கப்பல்களைத் தாக்கி அமிழ்த்திவந்தன. 70, 80 மைல் தூரம் குண்டுகளை வீசக்கூடிய ராக்ஷஸ பீரங்கிகள் குண்டுமழை பொழிந்து பல நகரங்களை அழித்தன. தரையிலே நடந்த சண்டையின் கடுமையும் கொடுமையும் கூறுந் தரமல்ல. உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஒரு கணக்கி லடங்கா. மானிடகோடிகளின் சுகவாழ்வினுக்குப் பயன்பட வேண்டிய விஞ்ஞானசாஸ்திர ஆராய்ச்சியைக் கொண்டு, விஷவாயு போன்ற கொலைச் சாதனங்களைக் கண்டுபிடித்து அனர்த்தம் விளைத்துவந்தனர்.

யுத்த சமயத்தில், ஜெர்மன் கப்பல்படை கடலிலே தலைகாட்ட முடியவில்லை. ஒரு சமயம் தலைகாட்டிய ஜெர்மன் கப்பல்படை ஒன்றை 1916-ல் ஜெட்லண்ட் எனும் இடத்தினருகே ஆங்கிலப் படை முறியடித்துவிட்டது; அத்துடன் நேசக் கட்சிக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் பல பாகங்களிலிருந்து தாராளமாய் வருமாறும் உதவி புரிந்தது.

ஐரோப்பிய மகா யுத்தங் காரணமாக லட்சோப லட்சம் ஜனங்கள் கொல்லப்பட்டுப் போயினர். இன்னும் பலர் காயமுண்டும், கைகால் குறைந்தும், கலங்கினர். இன்னும் பலர் வீடு வாசலையும் உத்தியோகத்தையும் இழந்து மிக்க அல்லல் எய்தினர். கோடானுகோடிக் கணக்கில் பொருட்சேதம் ஏற்பட்டது. கடைசியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் (United States of America) யுத்தத்தில் சேர நேர்ந்தது. நான்கு வருஷங்களுக்குபின் 1918-ஹூ அந்த யுத்தம் ஒருவாறு நின்றது.

அந்த யுத்த சமயத்தில் நமது இந்தியா தேசம் இங்கிலாந்தினுக்குச் செய்த உதவியும் ஊழியமும் இவ்வளவு அவ்வளவு அன்று. யுத்த ஆரம்பத்தில் நம் தேசத்திலே சேனையில் 80 ஆயிரம் ஆங்கிலேயரும், ஒரு லட்சத்து எழுபது ஆயிரம் இந்தியரும் சேவித்து வந்தனர். யுத்தத்தை முன்னிட்டு நம்மவரில் பத்து லட்சம் பேர் போர்ச் சேவகத்தில் புகுந்தனர். நான்கு லட்சம் பேர் அப்போர்ச் சேவகருக்குச் சௌகரியங்கள் அமைத்துத் துணை புரிந்தனர். நமது போர் வீரர் பிரான்சு, கிரீஸ், கிழக்கு ஆபிரிக்கா, மெசபொடேமியா, பாலஸ்தீன் முதலிய போர்முனைகளில் சென்று, பெருவீரங் காட்டிச் சமர் செய்து இரத்தஞ் சிந்தினர். ஒரு சமயம் பிரான்சிலே மகா நெருக்கடியான நிலைமை நேர்ந்த போது, இந்தியத் துருப்புகளே இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் தலைகொடுத்தனர்.

யுத்த சமயம் நம் தேசம் 150 கோடி ரூபாய் செலவு செய்தது; அதைத் தவிர இனமாக இங்கிலாந்துக்கு நூறுகோடி ரூபாய் கொடுத்து உதவிற்று.

நமது சமஸ்தான மன்னரும் பெருமக்களும் பிறரும் பல வகையிலும் யுத்தத்தின் பொருட்டு ஏழரைக் கோடி கொடுத் துதவினர். அல்லாமலும் நம்மவர் யுத்தக்கடன் நிதிக்கு அபரிமிதமாகப் பணம் கொடுத்தனர். நமது நடிகரும், பாடகரும், பாகவதரும் யுத்தத்தை முன்னிட்டு நாடகங்கள் நடத்தியும், சங்கீதக் கச்சேரிகள் பண்ணியும், கதா காலட்சேபங்கள் செய்தும் ஏராளமாகப் பணம் தேடிக் கொடுத்தனர். அப்போது இந்தியாவில் ராஜப் பிரதிநிதியாக விளங்கிய ஹார்டிஞ்சு பிரபு நம்மவரின் உதவியைக் கண்டு வியந்து பாராட்டிப் பேசினர்.

யுத்த சமயத்தில் அமெரிக்காவிலே ஜனதிபதியாக இருந்தவர் வில்சன். யுத்தத்தின் கோரத்தைக் கண்டு அவர் சகிக்கவில்லை. எளியாரை வலியார் வாட்டக்கூடாது; சிற்றரசுகளை வல்லரசுகள் விழுங்கக்கூடாது; எளியார், வலியார் யாவரும் தம்தம் இஷ்டப்படி தங்கள் நாட்டிலே சுகமே வாழ்தல் வேண்டும்; உலகிலே எங்கும் ஜனநாயகம் தலை தூக்க வேண்டும்; நீதியும் நியதியும் நிரம்புதல் வேண்டும் என்று பொருள்படும்படி சில கொள்கைகளை வெளியிட்டார். ஆங்கில ராஜதந்திரிகளும் மேதாவிகளும் எளியாரை வலியார் வாட்டாமல் எல்லாரும் சுகமே வாழவே சமர் செய்வதாகச் சாற்றினர்; இந்தியாவின் ஒப்பற்ற உதவியைக் கண்டு புகழ்ந்தும் பேசினர். ஆங்கில மக்களும் ஆங்கிலப் பத்திரிகைகளும் நம்மவரின் ஆண்மை, திண்மை, பராக்கிரமம், பரோபகாரம் இவற்றைப் புகழ்ந்தனர்.

இந்நிலையில் இங்கிலாந்தின் சார்பு நாடாகவுள்ள இந்தியாவும் சுயேச்சைபெற்று சுயராஜ்யப்

பேறு பெறுமென அனைவருக்கும் ஓர் எண்ணம் உதித்தது. உலகிலே இனி சண்டை நேராமல் சாந்தியே நிலவுமென்றும் பலர் எதிர்பார்த்தனர்.

——

23. மாண்ட்போர்டு திருத்தமும் பொறுப்பாட்சி உதயமும்

ஐரோப்பிய மகாயுத்த ஆரம்பத்தில் இங்கே ராஜப்பிரதிநிதியாக இருந்தவர் ஹார்டிஞ்சு பிரபு. அப்பால் 1916 முதல் 1921 வரையில் **செம்ஸ்போர்டு** பிரபு ராஜப்பிரதிநிதியாக விளங்கினர். இவர்காலத்தில் மகாயுத்தம் முடிவடைந்துவிட்டது. யுத்த முடிவில் தங்களது ராஜீய அபிலாஷைகள் கைகூடுமென இந்தியர் எதிர்பார்த்து நின்றனர். இலவுகாத்த கிளிபோல் ஆகிவிடுமோ என்றும் சிலர் அஞ்சிக் கிடந்தனர்.

அச்சமயம் **மாண்டேகு** என்பவர் இந்தியா மந்திரியாக இருந்தார். அவரும் செம்ஸ்போர்டு பிரபுவும் கலந்துபேசி, 1917-ம் வருஷம் ஆகஸ்டுமீ 20ந் தேதி ஓர் அறிக்கை இட்டனர். அதனை ஆகஸ்டு அறிக்கை என்பர். தேச நிர்வாகத்தின் ஒவ்வொரு துறையிலும் வரவர இந்தியரை அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாம். சுய ஆட்சிக்குரிய ஸ்தாபனங்கள் படிப்படியாக ஏற்படும். நாளடைவில் பொறுப்பாட்சி ஏற்படுவதற்கான மார்க்கங்கள் கிட்டும். காலக்கிரமத்தில் சுய ஆட்சியை இந்தியர் எய்துதற்கு உரிய வகை துறைகளையும் காலத்தையும் நிர்ணயிக்கும் அதிகார

உரிமை இங்கிலாந்தின் பார்லிமெண்டுக்கே உண்டு. இதுவே அந்த அறிக்கையின் சாரம். அவ்வறிக்கை கண்டு இந்தியரில் பலருக்குந் திருப்தியில்லை.

அந்த அறிக்கை வெளியானதும் இங்கிலாந்திலிருந்து மாண்டேகு இந்தியாவுக்கு வந்து, எங்கும்

செம்ஸ்போர்டு பிரபு

இங்கே பிரயாணஞ் செய்து, பற்பல ஜனத்தலைவர்களையும் நேரில் கண்டு பேசினர். அதன் பிறகு அவர் செம்ஸ்போர்டு பிரபுவுடனும் கூடி ஆலோசித்து எழுதிய ரிபோர்ட்டு வெளியாயிற்று. அந்த

ரிபோர்ட்டில் கண்டுள்ள சுதந்திரங்கள் போதா என்றும், பரிபூர்ணமான சுய ஆட்சி உடனே கொடுக்க வேண்டுமென்றும் இந்தியர் பெரிதும் மன்ருடினர். முடிவில் அந்த ரிபோர்ட்டை ஆதார மாகக் கொண்டு இங்கிலாந்தின் பார்லிமெண்டார் இந்திய அரசியல் சட்ட மொன்று செய்தனர். அதற்கு 'மாண்டேகு-செம்ஸ்போர்டு திருத்தங்கள்' என்று பெயர். சுருக்கமாக அதனை மாண்ட்-போர்டு திருத்தம் என்னலாம். அதன் முக்கிய அம்சங்களாவன :

இந்தியா மந்திரி சபை : இங்கிலாந்தின் அரசர் பார்லிமெண்டு சபையின் உதவிகொண்டு, இந்தியா வைப் பரிபாலனம் பண்ணிவருகிருர். இங்குள்ள வைஸிராய் அந்த அரசரின் பிரதிநிதி. இங்கிருந்து இந்தியாவை ராஜப்பிரதிநிதியே ஆண்டுவந்தபோதி லும், அவர் இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரியைக் கலந்துகொண்டு நிர்வாகத்தை நடத்தவேண்டும்.

அந்த இந்தியா மந்திரி இங்கிலாந்திலுள்ள மந்திரி சபையின் ஓர் அங்கத்தினர். அந்த மந்தி ரியே இந்தியாவைப்பற்றிய விஷயங்களை அரசருக் கும் பார்லிமெண்டு சபைக்கும் அறிவித்து வரக் கடமைப்பட்டவர். இந்தியாவின் பரிபாலன விஷய மாய் அந்த மந்திரிக்கு ஆலோசனை சொல்ல ஒரு சபை உண்டு. அதுவே இந்தியா மந்திரி சபை எனப்படும். அதன் அங்கத்தினர் பதினைந்து பேர். அவர்கள் பெரும்பாலும் இந்திய விஷயங்களில் அனுபவம் வாய்ந்தவர்களா யிருப்பர்.

இந்தியாமந்திரி அச் சபையின் கருத்துக்களைக் கலந்தும் கலவாமலும் மீறியும் நடக்கலாம். சில அம் சங்களில் இந்தியா மந்திரியின் அனுமதிபெற்றே

ராஜப்பிரதிநிதி காரியம் செய்யலாம்; அவரைக் கலவாமல் செய்யும் காரியங்களை அவ்வப்போது அவருக்கு அறிவித்து வரவேண்டும். இதற்கு முன் இந்தியா மந்திரிக்கும் அவரது சபைக்கும் ஆன செலவை இந்தியா ஏற்றுக்கொண்டது. மாண்ட்-போர்ட் திருத்தம் ஏற்பட்டபின்பு, இங்கிலாந்து அச்செலவை ஒப்புக்கொண்டது.

இந்தியா கவர்ன்மெண்டு: இந்தியாவின் பரிபாலன விஷயத்தில் சர்வாதிகாரி ராஜப்பிரதிநிதியே. அவர் ஐந்து வருஷம் பதவி வகிப்பார். மாகாண கவர்னர்கள் அவருக்கு உட்பட்டவர்கள். அவருக்கு உதவியாக நிர்வாக ஆலோசனை சபை ஒன்றுண்டு. அச்சபையில் ஐரோப்பியர் அதிகமாகவும் இந்தியர் குறைவாகவும் இருப்பர். அச்சபை மெம்பர்கள் தனித்தனி சில இலாகாக்களைக் கவனித்துவருவர்.

ராஜப்பிரதிநிதிக்கு உதவியாக இரண்டு சட்ட சபைகளும் உண்டு. ஒன்று இந்தியா சட்டசபை எனப்படும். மற்றொன்றை ராஜாங்க சபை என்பர். அச் சபைகளின் மெம்பர்களில் பெரும்பாலார் ஜனப்பிரதிநிதிகளாக இருப்பர். சட்ட திட்டங்கள் செய்வதானல், அவ்விரண்டு சபைகளும் ஒப்புக்கொண்டபின் ராஜப்பிரதிநிதி அங்கீகரிக்கவேண்டும். இந்தியா சட்டசபையின் மெம்பர்கள் தங்களிலிருந்து ஒருவரை சபையின் தலைவராக நியமித்துக் கொள்ளலாம். மெம்பர்கள் மூன்று வருஷமே பதவி வகிப்பர்; அவர்கள் சுமார் 140 பேர்.

ராஜாங்க சபையில் மொத்தம் 60 மெம்பர்கள். அவர்களில் 20 பேரை ராஜப்பிரதிநிதியே நியமிப்பார். மற்றவர்களோ சீமான்களாலும் பிரபுக்களா

லும் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள் ஐந்து வருஷ காலம் பதவி வகிக்கலாம். இந்தியா சட்டசபை செய்யும் தீர்மானங்களை ஒப்பவோ மறுக்கவோ ராஜாங்க சபைக்கு உரிமையுண்டு.

மாகாண கவர்ன்மெண்டு: மாகாணத்தின் நிர்வாகத் தலைவரை கவர்னர் என்பர். அவருக்கு உதவியாக ஒரு நிர்வாக ஆலோசனை சபையும், ஒரு சட்டசபையும் இருக்கும். நிர்வாக சபைக்குரிய இருவர் அல்லது மூவர் சட்டசபையினல் தேர்ந்தெடுக்கப் பெற்று, மந்திரிகள் என்று நிர்வாக சபையில் அங்கம் வகிப்பர். மற்றவர்கள் அரசாங்கத்தாரால் நியமிக்கப் படுவர். மந்திரிகளும் அந்த மெம்பர்களும் தனித்தனி சில இலாகாக்களை நிர்வகித்து வருவார்கள். மந்திரிகள் சட்ட சபைக்குக் கட்டுப்பட்டே காரியம் நடத்த வேண்டும்; இல்லையேல் தங்கள் பதவியை இழக்க நேரும். கல்வி, சுகாதாரம், வைத்தியம், கூட்டுறவு, ஸ்தல சுய ஆட்சி, கைத்தொழில் முதலிய இலாகாக்களே மந்திரிகளின் மேற்பார்வையில் இருக்கும். வரவு செலவு, போலீஸ், நியாய விசாரணை முதலிய முக்கிய இனங்கள் அந்த மெம்பர்களின் மேற்பார்வையில்தான் நடக்கும்.

மாகாண சட்ட சபை அங்கத்தினரின் தொகை அந்தந்த மாகாணத்தின் ஜனத்தொகையைத் தழுவியிருக்கும். இச்சபை அங்கத்தினரில் பலரும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். சிலர் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர். நமது சென்னை மாகாணத்தில் முகம்மதியர், கிறிஸ்தவர், பிராம்மணரல்லாதார் இவர்களுக்குத் தனித் தனியே பிரதிநிதிகள்

உண்டு. சட்ட சபை மெம்பர்கள் மூன்று வருஷம் பதவி வகிப்பார்கள். சட்டசபையினுல் செய்யப்படும் சட்ட திட்டங்கள் கவர்னரினுலும் ராஜப்பிரதியினுலும் ஒப்பம் பெற்ற பின்பே அமுலுக்கு வரும்.

---

24. தேசீய இயக்கத்தின் வளர்ச்சி

நமது தேசத்தில் நிலையான ஆங்கில ஆட்சி ஏற்பட்டு ஒரு நூறு வருஷங்களுக்கு மேல் ஆகிறது. அதற்கு முன்னம் அன்னியரின் படையெடுப்புக்கள் நேர்ந்தன; பலபல ராஜ வமிசங்களும் தோன்றின; சண்டை சச்சரவுகளும் மிகுந்திருந்தன; சுதேச மன்னர்களும் தம்முள் வேற்றுமை கொண்டு சண்டையும் போட்டு வந்தனர். ஆங்கில ஆட்சி நிலைத்த பின்னரோ, அன்னியரின் படையெடுப்புக்கள் நேரவில்லை; சுதேசஅரசரும் தம்முள் பிணங்கி நில்லாமல் ஒற்றுமை கொண்டுளர்; கலகங்களும் குழப்பங்களும் தோன்றவில்லை. குடிமக்கள் தங்கள் இஷ்டம்போல் தெய்வங்களை வணங்கி, மனம்போல் வாழ்ந்து, சொத்து சுதந்திரங்களுக்குத் தீங்கு நேராமல் காலங்கழித்து வருகின்றனர்.

என்றுலும் சில அசௌகரியங்களும் பிரதிகூலங்களும் உண்டு. உதாரணமாக, முக்கியமான அதிகாரங்களெல்லாம் அரசாங்க அதிகாரிகளிடமேயுள்ளன. மிக்க பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அநேகமாக ஐரோப்பியரே இருக்கிறுர்கள். மேனுடுகளைப்போல், இங்கே பலவகையான தொழில் முயற்சி ஓங்கவில்லை. அரசாங்கத்தின் முக்கிய செல

வினங்களில் மக்களுக்குச் செல்வாக்கில்லை. அரசாளும் இனத்தைச் சேர்ந்த ஆங்கிலேயரும் இந்திய மக்களும் ஏற்றத்தாழ்வின்றி நெருங்கிப் பழகுவதும் அருமையாம்.

ஆங்கிலக்கல்வி பரவப்பரவ, நம் மக்களிடையே சுதந்திர உணர்ச்சியும் பெருகிக் கொண்டே வரலாயிற்று. மேனாடுகளில் குடியரசும் ஜனநாயகமும் நிலைக்குமாறு புரட்சியும் கிளர்ச்சியும் நடப்பதை நம்மவர் கூர்ந்து நோக்கி வந்தனர். இதற்கிடையில் 1885-ஆம் காங்கிரஸ் மகாசபை தோன்றியது. ஆண்டுதோறும் ஓரோரிடத்தில் அச்சபை கூடி, அரசியலில் மக்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்தது. மிகச் சிறிய ஜெப்பான் தேசம் மிகப் பெரிய ருஷியா தேசத்தைப் போரில் புறங்கண்டதும் நம்மவரின் சுதந்திர உணர்ச்சியைப் பெரிதும் வளர்த்தது. பாரசீகம், சீனு இத்தேசங்கள் ஐரோப்பியரின் ஆதிக்கத்தை விரும்பாமல் தலை தூக்கியதும் நம்மவருக்கு உற்சாகத்தை எழுப்பி வந்தது. பல்லாண்டு பல்லாண்டாக உயரிய நாகரிகம் வாய்ந்த இந்தியாவும், ஐரோப்பிய தேசங்களுக்குச் சரிசமமான பதவி வகிக்க வேண்டுமென்று தேச மக்கள் அனைவரும் விரும்பி நின்றனர்.

ஆதலினால் அரசியலில் பெரும்பதவி கிடைத்தால் போதுமென்று முன்னம் வாதாடிய காங்கிரஸ் மகாசபை 1906-ஆம் சுயராஜ்யம் வேண்டுமென்று கோரியது. கர்ஸன் பிரபுவின் கன மிடுக்கான ஆட்சிமுறையைக் கண்டு மகாஜனங்களுக்குள்ளே சுதந்திரத் துடிப்பும் சுயராஜ்யப் பற்றும் பொங்கின. அத்துடிப்பையும் பற்றையும் சாய்த்துவிட

அடக்குமுறைகள் பல எழுந்தன. அவையெல்லாம் எரியும் நெருப்பில் நெய்யை வார்த்தது போலவே முடிந்தன. சில இளைஞர்கள் நெறிதவறி அராஜக வழிகளில் இறங்கினர். பலரும் அதனைக் கண்டித்தனராயினும், சுயராஜ்ய சுதந்திரம் வேண்டுமென்பதில் எவரும் தயங்கவில்லை.



மகாத்மா காந்தி

முன்னம் நடந்த ஐரோப்பிய மகா யுத்தத்தில் அபரிமிதமாக இந்தியர் உதவி புரிந்து வந்தபோது ஆங்கில ராஜதந்திரிகள் மிகவும் பிரமாதமகப் பேசி இந்தியரைப் பாராட்டினர்; யுத்தம் முடிந்ததும் இந்தியரின் ராஜீய அபிலாஷைகள் பூர்த்தியாகும் என்

றும் சொல்லினர்; யுத்த சமயத்தில், ஜனநாயகமே லட்சிய மென்றும் ஓயாமல் பேசி வந்தனர். ஆயினும் 1917-ஞு ஆகஸ்டு அறிக்கையோ இந்தியரில் பலருக்கும் திருப்தி தரவில்லை. யுத்தம் முடிந்தபின் தோன்றிய மாண்ட்-போர்டு திருத்தங்களோ இந்தியர் எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாய் இருந்தன. அவற்றைக் காங்கிரஸ் மகாசபை வெறுத்துக் கண்டித்து வந்தது. ஆயினும் அத் திருத்தங்கள் இந்தியாவின்மீது புகுத்தப்பட்டன. காங்கிரஸ் மகாசபை அத்திருத்தங்களை எதிர்த்து சட்டசபைகளுக்குப் போக மறுத்து, சட்ட மறுப்பு, ஒத்துழையாமை எனும் இயக்கங்களைக் கிளப்பியது. அவ்வியக்கங்களின் கர்த்தா மகாத்மா காந்தி. அவருடைய தலைமையில் காங்கிரஸ் மகா சபை நடத்திய கிளர்ச்சியை அடக்கப் பலவிதமான முறைகளை அரசாங்கம் கையாண்டது. அதன் பலனுக அரசாங்கத்துக்கும் காங்கிரஸ் மகாசபைக்கும் இடையே வேற்றுமை மிகுந்தது. அச்சமயத்தில் ரீடிங் பிரபு ராஜப்பிரதிநிதியாக இருந்தார்.

மாண்ட்-போர்டு திருத்தத்தின்படி அரசாங்கம் நடந்து வர நாட்டிலே ஒரு சாரார் அரசாங்கத்துக்கு ஆதரவா யிருந்தனர். அப்போது காங்கிரஸ் மகா சபையினரில் ஒரு சாரார் காங்கிரசின் போக்கைக் கண்டு திகைத்து மிதவாதிகள் என்று பிரிந்து நிற்கலாயினர். ஜஸ்டிஸ் கட்சியாரோ அரசாங்கத்தில் மந்திரிப் பதவி ஏற்று அதிகாரிகளுக்கு ஆதரவாக நடந்துவந்தனர்.

மாண்ட்-போர்டு திருத்தங்களைப் பத்து வருஷங்களுக்கு ஒருமுறை பரிசீலனை செய்வது விதியாகும்.

அவ்வாறு பரிசீலனை செய்ய ஒரு சபை ஏற்பட்டது. அதற்கு ஸைமன் கமிஷன் என்று பெயர். அதில் ஒருவர்கூட இந்தியர் இல்லை. காங்கிரஸ் மகாசபை மட்டுமல்லாமல் ஏனைய கட்சியாரும் பொதுமக்களும் அதனை பகிஷ்கரித்தனர். ஆனாலும் அக்கமிஷன் தேசமெங்கும் சுற்றிப் பரிசீலனை நடத்தி வந்தது. அப்போது தேசத்திலே அமைதி குறைந்து, குழப்பம் ஓங்கியது. காந்தியின் தலைமையில் சட்ட மறுப்பும் ஒத்துழையாமை இயக்கமும் மீண்டும் தோன்ற, நாட்டில் கிளர்ச்சி வலுத்தது. அப்போது அடக்கு முறைகள் பிரமாதமாக எழுந்தன. ஆனால் தேசீய இயக்கம் அடங்கவில்லை. அடக்குமுறை காரணமாகத் தலைவர்களும் பிரபுக்களும் சாமானிய மக்களும் சிறைபுக நேர்ந்தது. அப்போது தேசத்திலே சுதந்திர தாகமும் சுயராஜ்ய வேகமும் தியாகத் துடிப்பும் உச்ச நிலை கொண்டன. அன்பையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டு அஹிம்சையை ஒரு கருவியாகத் தாங்கி மகாத்மா காந்தியும் காங்கிரஸ் மகாசபையாரும் நடந்து வரவே அடக்குமுறைகள் பலிக்காமல் போயின.

அந்த ஸைமன் கமிஷனது பரிசீலனையின் பலனாக, 1935-ஆம் தேச அரசியல் இன்னும் திருந்தியது. அத்திருத்தத்தை தேசம் வரவேற்கவில்லை; முதலில் காங்கிரஸ் மகாசபையும் ஒப்புக்கொள்ளவில்லை; என்றாலும் அதன் பின்போ அரசாங்கத்துடன் பேசி, ஓர் ஒப்பந்தம் பெற்று, அந்த அரசியல் அமைப்புக்களில் புகுந்து, காரியத்தைக் கண்டெடுக்கக் கருதி, ஏழு மாகாணங்களிலே மந்திரிகளாக அமர்ந்தனர்.

மிண்டோ-மார்லி திருத்தத்தின்படி முகம்மதி யருக்குத் தனியே பிரதிநிதித்துவம் கிடைத்த சமயம் முகம்மதியருக்குள்ளே முஸ்லிம் லீக் என்று ஒருசபை தோன்றியது. ஆரம்பத்திலே சிலகாலம் அச்சபை தனித்து நின்றும், பிறகு காங்கிரஸ் சபையுடன் கலந்துழைத்து வரலாயிற்று. பொதுவாகப் பேசி னல் இதர சமூகத்தார் கல்வித்துறையில் முன்னேறி யிருப்பதுபோல், முகம்மதிய சமூகம் முன்னேற வில்லை. அதனலும் இன்னும் சில காரணங்களி ஞலும் அச்சபை காங்கிரசுடன் சேராமல் விலகி நிற்பினும், சுயராஜ்ய லட்சியமேகொண்டு நிற் கின்றது. மிதவாதிகளும் ஜஸ்டிஸ் கட்சியாரும் சுயராஜ்ய லட்சியமே கொண்டுளர். முகம்மதிய ரிலே ஒரு சாராரின் முனைப்பைக் கண்டும், சமூகத் திருத்தம் கருதியும் எழுந்துள்ள ஹிந்துமகாசபைக் கும் சுயராஜ்ய லட்சியந்தான். ஆனல் அதனை யடையும் மார்க்கங்களிலும், போக்கிலும், காங்கிரஸ் மகாசபைக்கும் இதர சபைகளுக்கும் வேற்றுமை யுண்டு. ஜாதி மத விஷயமும் கல்வி விஷயமும் குறுக்கிடுவதால், அச்சபைகளுக்குள்ளே போதிய ஒற்றுமை இல்லை. எனினும் விரைவில் ஒற்றுமை உண்டாகவே, பலரும் முயன்று வருகின்றனர்.

---

25. வட்டமேஜை மகாநாடுகள்

மாண்ட்-போர்டு திருத்தங்கள்கண்டு, இந்திய மக்கள் சிறிதும் திருப்தி கொள்ளவில்லை. அவற்றைத் தழுவி அரசாங்கத்தார் இத்தேசத்தி லுள்ள எல்லாச் சட்டசபைகளுக்கும் தேர்தல் நடத்

தினர். காங்கிரஸ் கட்சியாரும் பிற தேசாபிமானிகளும் அத்தேர்தலில் கலந்து கொள்ளவில்லை. தேர்தல் பகிஷ்காரத்துடன், கல்லூரிகள், நியாயஸ்தலங்கள், பிரிட்டிஷ் சரக்குகள் இவற்றின் பகிஷ்காரமும் ஏற்பட்டது. சட்டமறுப்பையும் மகாத்மா காந்தி முன்னின்று நடத்தினர். அப்போது அவர் ஆறு வருஷம் சிறைத் தண்டனையடைய நேர்ந்தது. ஆனால் இரண்டு வருஷமானதும் அவரை விடுதலை செய்துவிட்டனர். நாளடைவில் அந்த இயக்கம் சற்றே தளர்ந்தது.

முன்னம் காங்கிரஸ் கட்சியார் எவரும் சட்டசபையில் புகாததனால் சட்டசபைக்குச் சென்றவர்களோ சர்க்காரையே ஆதரித்து, தேசீய இயக்கத்தைப் புறக்கணித்து வந்தார்கள். மீண்டும் 1925ஆம் பொதுத் தேர்தல்கள் நடந்தன. காங்கிரஸ்காரர்களில் ஒரு சாரார் சுயராஜ்யக்கட்சியினர் என்ற பெயருடன் தேர்தலில் நின்று, பெருமித வெற்றிபெற்று சட்டசபைகளில் பெரும் பாலாராக இருந்தனர். பெரும்பாலான கட்சியினரே மந்திரிசபை அமைக்க வேண்டும் என்பது விதி. ஆதலின் மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களை மாகாண கவர்னர்கள் கேட்டுக்கொண்டார்கள். பதவி வேண்டாமென்று அக்கட்சியார் கூறி, ஆங்காங்கே சட்டசபைகளில் எதிர்க்கட்சியாக இருந்து, அரசாங்கத்துக்கு இடைஞ்சல் இழைத்துவந்தனர்.

தேசத்தின் நிலையைக் கண்டதும், 1927-ம் வருஷம் மாண்ட்-போர்டு திருத்தங்களைப் பரிசீலனை செய்ய ஸைமன் கமிஷன் ஏற்பட்டது. பிரபல இந்தியர் எவரும் அச்சபையின் முன்பு தோன்றி,

அபிப்பிராயம் கூற விரும்பவில்லை. அப்பொழுதும் நாட்டிலே அதிருப்தியும் அமைதிக்குறைவும் ஓங்கி நின்றன. அச்சமயத்தில் ரீடிங் பிரபு இங்கே ராஜப்பிரதிநிதியாக இருந்து, நிர்வாகத்தை நடத்தி வந்தார். அக்கமிஷன் ஒருவாறு பரிசீலனை செய்து 1930-ம் வருஷம் தனது ரிபோர்ட்டை வெளியிட்டது; அந்த ரிபோர்ட்டின் விவரங்களும் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை.

ரீடிங் பிரபு

ஆதலினால், அந்த ரிபோர்ட் ஒருபுறம் இருக்க, இந்தியப் பிரதிநிதிகளையும் கலந்து ஆலோசனை செய்து இந்திய அரசியல் அமைப்பு விஷயமாய் ஒரு முடிவிற்கு வர, லண்டனில் முதல் வட்டமேஜைமகாநாடு கூடிற்று. இங்கிலாந்திலுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், இந்திய சமஸ்தான மன்னரின் பிரதிநிதிகளும், இந்திய மகாஜனங்களின் பிரதிநிதிகளும் அம்மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். தேசத்திலே தக்க செல்வாக்கு வாய்ந்துள்ள காங்கிரஸ் கட்சியார் மட்டும் அதில் சேர்ந்து கொள்ளவில்லை. அப்போது இர்வின் பிரபு ராஜப்பிரதிநிதியாக இருந்து, சமரஸம் உண்டு பண்ணப் பார்த்தும் பலன் இல்லாமல் போயிற்று.

அரசாங்கத்தின் போக்கைக் கண்டதும் 1930-ல் மகாத்மா காந்தி மீண்டும் ஒத்துழையா இயக்கத்தைத் தோற்றுவித்தார். இயக்கம் வலுக்கவே குடிமக்கள் வரி செலுத்த மறுத்தனர்; சட்டத்தை மீறி உப்பு உற்பத்தி செய்யவும் முனைந்தனர்; அந்நிய தேச ஆடைகளை வாங்கவும் மறுத்தனர்; அன்பையும் சத்தியத்தையுமே அந்த இயக்கம் அடிப்படையாகக் கொண்டது. ஆயினும் சிலர் நெறிதவறி நடந்து வந்தனர். அப்போது அவசரச் சட்டங்களென்னும் பல அடக்குமுறைகள் கையாளப்பட்டன. மகாத்மா காந்தி உள்படப் பல தலைவர்கள் சிறைபுக நேர்ந்தது. காங்கிரஸ் கட்சியர் கலந்துகொள்ளா விட்டால், வட்ட மேஜை மகாநாடு பலன் தராதென இங்கிலாந்தின் அதிகாரிகளுக்குப் புலப்பட்டது.



இர்வின் பிரபு

காங்கிரஸ் மகா சபையுடன் சமரசத்தை நாடி, காந்தி முதலிய தலைவர்களை அரசாங்கத்தார் விடுதலை செய்தனர். அப்பொழுது ராஜப் பிரதிநிதியாக இருந்த இர்வின் பிரபுவுக்கும் காங்கிரஸ் சார்பாக மகாத்மா காந்திக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அது காந்தி - இர்வின் உடன்

படிக்கை எனப்படும். அதன்மேல் ஒத்துழையா இயக்கத்தை நிறுத்த காந்தி ஒப்பினர். அரசாங்கமும் அடக்குமுறைச் சட்டங்களை ரத்துசெய்ய இசைந்தது. கடலோரத்திலுள்ள மக்கள் தங்களுக்கு வேண்டிய உப்பைக் கடல்நீரிலிருந்து காய்ச்சி எடுத்துக் கொள்ள உரிமை பெறுவர் என்று அரசாங்கத்தார் அந்த ஒப்பந்த பூர்வமாக வாக்களித்தனர்.

அப்பால் இரண்டாம் வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ள காங்கிரஸ் கட்சியார் சம்மதித்தனர். மகாத்மா காந்தி ஒருவரையே பிரதிநிதியாக காங்கிரஸ் மகாசபை அனுப்பிற்று. அவ்வாறே அவர் லண்டன் மாநகரஞ் சென்று, வட்டமேஜை மகாநாட்டில் இந்தியரின் கட்சியைத் திறம்பட எடுத்துரைத்தார். ஆயினும் அம்மகாநாட்டின் நிலை கண்டு தக்க பலன் கிட்டாதென அப்போதே அவர் கண்டு கொண்டார். அதிருப்தியுடனே அவர் இந்தியாவுக்குத் திரும்பிவர நேர்ந்தது. பம்பாய்த் துறைமுகத்தில் வந்திறங்கியதும் அவரைக் கைது செய்து சிறையில் போட்டனர். இதர பல தலைவர்களும் சிறை புகுந்தார்கள். தேசத்தில் அமைதி குன்றியது. அவ்வேளை வில்லிங்டன் பிரபு ராஜப்பிரதிநிதியாக இருந்தார். அவசரச் சட்டங்கள் ஒன்றன்பின் ஒன்ருக எழுந்து, தேசீயக் கிளர்ச்சியை ஒடுக்க முயன்றன.

அப்பால் மூன்ரும் முறையாக வட்டமேஜை மகாநாடு லண்டனில் நடைபெற்றது. காங்கிரஸ் சபையார் அதில் கலந்துகொள்ளவில்லை. மற்றையோர் கலந்து கொண்டனர். அதன் முடிவாக 1935-ஆஸ் புதிய அரசியல் திருத்த சட்டமொன்று

ஏற்பட்டது. அச்சட்டத்தையும் இந்திய மகா ஜனங்கள் அவ்வளவாக வரவேற்கவில்லை. பின்பு அரசாங்கத்தார் பொதுத் தேர்தல் நடத்தினர். அத் தேர்தல்களில் தேசமெங்கும் சட்டசபைகளில் காங் கிரஸ்காரர்களே பெரும்பாலாராக வந்தனர். சட்ட சபையில் எந்தக் கட்சி பெரிதாக இருக் கிறதோ அந்தக் கட்சியாரே மந்திரிபதவிகளை ஏற் றுக்கொள்ள வேண்டுமென்பது விதி. அவ்வாறே பதவியேற்கும் வண்ணம் காங்கிரஸ் கட்சியை அர சாங்கத்தார் கேட்டுக் கொண்டனர். முதலில் அக் கட்சியார் மறுத்தார்கள். பின்பு அரசாங்கம் சில வாக்குறுதிகள் தர, அக்கட்சியார் பதவியேற்றனர்.

---

26. அரசியல் திருத்தங்கள்—1935

மூன்ருவது வட்டமேஜைமகாநாட்டின் பலனுக 1935-ம் வருஷம் இந்திய அரசியல் சட்டம் உண்டாயிற்று. இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி அளிப்பதும், இந்தியா முழுவதுக்கும் ஓர் ஐக்கிய அரசியலை அமைப்பதும், அதன் நோக்கங்களாம்.

இந்தியா மிகவும் பரந்த தேசம். இதில் மூன்றி லொருபாகம் சுதேச சமஸ்தானங்கள். அவை ஏறக்குறைய எழுநூறு ஆகும். சுதேச அரசர்கள் அவற்றை ஆண்டுவருகின்றனர். அந்த ஆட்சியில் பிறர் தலையிடுவதற்கில்லை. அப்பாகம் சமஸ்தான இந்தியா எனப்படும். எஞ்சிய பாகம் பிரிட்டிஷ் இந்தியா. இதில் பிரிட்டிஷாருக்கு ஸார்வாதிக்கம் உண்டு. சமஸ்தான இந்தியா, பிரிட் டிஷ் இந்தியா இரண்டுக்கும் பொதுவாக ஏற்படும்

ஓர் அரசியல் அமைப்பையே சமஷ்டி என்பர்; அதனை ஆங்கிலத்தில் பெடரேஷன் என்பார்கள். சமஷ்டியில் சேருவதானல், சமஸ்தான மன்னர்கள் தங்களது அதிகாரங்களில் சிலவற்றை மட்டும் சமஷ்டி அரசாங்கத்துக்கு விட்டுக்கொடுக்க வேண்டும்.

சமஷ்டி அரசியல் அமைப்புக்கு ராஜப்பிரதிநிதியே தலைவராக இருப்பார். சமஷ்டியின் காரியங்களைக் கவனிக்க இரண்டு சட்டசபைகள் உண்டு. ஒன்று ராஜாங்க சபை எனப்படும்; மற்றொன்றை ஜனப்பிரதிநிதி சபை என்பர். ராஜாங்க சபை ஏழு வருஷத்துக்கு ஒரு முறை புதிதாக அமையும்; மற்றதோ ஐந்து வருஷத்துக்கு ஒருதரம் புதிதாக அமையும். ராஜாங்க சபையில் மொத்தம் 260 அங்கத்தினர் இருப்பர். அவர்களில் 104 பேர் சுதேச மன்னரால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள்; 156 பேர் பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகளாக இருக்கவேண்டும். மொத்த அங்கத்தினரில் ஆறு ஸ்திரீகள் இருக்கலாம். கவர்னர் ஜெனரல் 10 பேரை நியமிக்கலாம்.

ஜனப்பிரதிநிதி சபையிலோ 375 அங்கத்தினர். அவர்களில் 125 பேர் சுதேச சமஸ்தானங்களின் பிரதிநிதிகள். 250 பேர் பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகள். மாகாண சட்டசபைகளே அந்த 250 பேரையும் தேர்ந்தெடுத்து அனுப்பும்.

இரு சபைகளிலும் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையான கட்சியிலிருந்தே மந்திரிகளை நியமிக்கவேண்டும். அரசாங்கத்தின் பற்பல இலாகாக்களும் மந்திரிகளுக்கு உட்பட்டிருக்கும். ஆனல் தேசக்காவல், அன்னிய நாட்டுடன் வியவகாரங்கள்,

மதவிஷயங்கள் இவற்றில் மந்திரிகளுக்கு அதிகாரம் இராது; கவர்னர் ஜெனரலால் நியமனஞ் செய்யப்படும் நபர்கள் அம்மூன்று இனங்களைப் பரிபாலிக்கவேண்டும்.

சமஷ்டி நியாயஸ்தலம் ஒன்று ஏற்படும். இதில் மூன்று நீதிபதிகள் இருப்பார்கள். மாகாண ஹைகோர்ட்டுகளின் தீர்ப்புக்களை ஒப்புக்கொள்ளாதவர்கள் சமஷ்டி நீதி ஸ்தலத்தில் அப்பீல் செய்து கொள்ளலாம். சமஷ்டி அரசியல் சம்பந்தமான வழக்குகளும் அந்நீதிபதிகளின் தீர்ப்புக்கு உட்படும்.

சமஷ்டி அரசியல் அமைப்பில் பர்மா அடங்காது. பர்மாவோ இந்தியாவினின்று பிரிந்து, தனியே ஓர் அரசியல் கொள்ளும். சமஷ்டி அரசியலின்படி ஒரிஸா, சிந்து இரண்டும் தனி மாகாணங்களாகும். எனவே, சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப், வடமேற்கெல்லை மாகாணம், பீஹார், அஸ்ஸாம், ஒரிஸா, சிந்து, மத்தியமாகாணம் என்று மாகாணங்கள் 11. அவற்றுள் சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள், பீஹார், அஸ்ஸாம் இவை ஆறும் பெரிய மாகாணங்கள். ஆதலினால், இவற்றில் இரண்டு சட்டசபைகள் இருக்கும். மற்றைய ஐந்திலும் ஒரே சபைதான். சென்னை மாகாணத்திலே லெஜிஸ்லேடிவ் கௌன்சில், லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளி என இரண்டு சபைகள். முன்னதில் 56 மெம்பர்கள். இவர்களில் பதின்மர் நியமன மெம்பர்கள். ஏனையோர் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வரும் ஜனப்பிரதிநிதிகள்.

லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளி என்னும் சபைக்கோ மொத்தம் 215 அங்கத்தினர்கள். அவர்களில் 152 பேர் பொதுஜனப் பிரதிநிதிகள். மற்றையோர் தனித்தொகுதிகளின் பிரதிநிதிகளாக இருப்பர். இரு சபைகளிலும் பெரும்பாலான ஸ்தானங்களை வகிக்கும் கட்சியிலிருந்தே மந்திரிகள் நியமனமாதல் வேண்டும். மந்திரிகள் எல்லா இலாகாக்களையும் நிர்வகிப்பார்கள். எனினும் மந்திரிகளோ சபைகளோ செய்யும் காரியங்களை நிராகரிக்க கவர்னருக்கு அதிகாரம் உண்டு.

முன்னம் பிரிட்டிஷ் இந்தியா முழுதும் 100-க்கு 3 பேரே வாக்குரிமை பெற்றிருந்தனர். அவர்கள் 50 லட்சம் பேர்; 1935ஃஸு சட்டத்தின்படியோ வாக்காளரின் தொகை பெருகியது; 100-க்கு 14 பேர் வாக்குரிமை எய்தினர். இப்போது வாக்காளரின் தொகை மூன்றரை கோடி.

சமஷ்டி அரசியல் அமைப்பைக் கண்டும் இந்தியாவில் திருப்தி இல்லை. எவ்வளவு தூரம் தமது அதிகாரத்தை விட்டுக்கொடுக்க நேருமோ என்று மன்னர்கள் திகைக்கலாயினர்; பிரிட்டிஷ் இந்திய மக்களோ மிக முக்கியமான தேசக்காவல் போன்ற அம்சங்களில் அதிகாரம் இல்லையே என்று அதிருப்தி கொண்டனர். ஆதலினால், சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் பொதுவான சமஷ்டி அமைப்பு ஏற்படவில்லை. மாகாணங்களில் மட்டும் 1937-ஃஸு பொறுப்பாட்சி ஏற்பட்டது.

மாகாண மந்திரிகள் செய்யும் காரியங்களில் மாகாண கவர்னர்கள் தலையிட அதிகாரம் பெற்றிருப்பதால், மாகாணப் பொறுப்பாட்சி ஏது என்று

பலரும் தயங்கினர். அதனால் பொதுத்தேர்தலிலே பெரும்பாலான ஸ்தானங்கள் பெற்ற காங்கிரஸ்காரர் மந்திரிப் பதவி ஏற்க மறுத்தனர். பின்பு, தலையிடுவதில்லை என்று கவர்னர்களிடமிருந்து உறுதி கிடைத்தது. அதன்மேல் காங்கிரஸ்காரர் மந்திரிப் பதவி ஏற்றனர்; எனினும் 1939-ஆம் உலக மகா யுத்தம் ஏற்பட்டவுடனே மந்திரிப் பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டு, வெளியே வந்து விட்டார்கள். 11 மாகாணங்களிலே, பஞ்சாப், வங்காளம், அஸ்ஸாம், சிந்து, ஒரிஸா மாகாணங்களில் மட்டும் புதிய சட்டத்தின்படி ஆட்சி நடந்து வருகிறது. மற்ற மாகாணங்களில் கவர்னர்களின் ஆட்சிதான்.

சமஷ்டி நியாயஸ்தலம் ஏற்பட்டு நடந்து வருகிறது. இந்தியாவின் பொருளாதார விஷயத்தைக் கவனிக்க ரிஸர்வ் பாங்க் என்னும் தன சாலையும் உதயமாகி, மக்களுக்கு உதவி புரிந்துவருகிறது.

பிரிட்டிஷ் இந்தியாவில் பலவாறான ஜாதி மத வகுப்பு பேதங்கள் உண்டு. படிப்பையும் அறிவையும் மதிக்கையில், அவர்களுக்குள்ளே சுதந்தர உணர்ச்சியின் வேகம் ஒரே தரமாக இராது. மத விஷயங்களில் சமரசப் பான்மை குறைவு. ஜனப் பிரதிநிதிகளில் பலரும் தேசநலத்தை நாடி நிற்பினும், சிலர் சுயநலத்தை இன்னும் அடியோடு விடவில்லை. வாழ்வுக்குரிய வகை துறைகள் மிகவும் குறைவா யிருக்கவே, மக்களுக்குள்ளே போட்டி உண்டாகிறது. இவ்வாறெல்லாம் இருப்பினும், எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் இந்தியமக்கள், எனவே அனைவரும்சோதரரேபோல் நடக்கவேண்டுமென்று நமது பெருந் தலைவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

அவ்விதம் எல்லாரும் விரைவில் ஒற்றுமை கொள்ளவும், அதன் விளைவாக நாடு நலம் பெறவும், ஆண்டவன் அருள்புரிவாராக!

வாழிய செந்தமிழ், வாழ்க நற்றிமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு!

சுபம்!

BALAR DESA CHARITRAM---Book V

By

SUNDARA SUBRAHMANIAM

and

V. K. SUBRAHMANIAN, B.A., L.T.

JAYAM & CO., Publishers

Nungambakkam, MADRAS :: **VALAVANUR, (S. A. Dt.)**

Copyright]

[Price As. 10